தட்டுமாறு-கட்டிமாறு என்பது பெரும்பாலும் தாழ்வான மற்றும் நடுநாட்டு ஈர வலய நெல் காணிகளில் காணப்படும் ஒரு பிராந்திய நிகழ்வு ஆகும். அதன் தோற்றம், வரலாறு, செயல்பாடு மற்றும் விளைவுகள் ஆகியவற்றைக் கண்டறிய இது விரிவாக ஆய்வு செய்யப்படவில்லை. எனவே, இலங்கையின் ஈர வலயப் பகுதிகளில் உள்ள நெற்பயிர்களின் உற்பத்தித்திறன் அம்சங்களில் தட்டுமாறு மற்றும் கட்டிமாறு நிலவுரிமை முறைமையின் தாக்கங்களை ஆராய்வதும், எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கான சாத்தியமான தீர்வுகளைத் தேடும் போது இந்தப் பிரச்சினையின் அளவை முன்னிலைப்படுத்துவதுமே இந்த ஆய்வின் மையமாகும்.

**ஆய்வின் நோக்கம்**

இலங்கையின் ஈர வலயப் பகுதிகளில் நெல் செய்கையின் கமத்தொழில் உற்பத்தித்திறனில் தட்டுமாறு மற்றும் கட்டிமாறு நிலவுரிமை முறைமையின் தாக்கத்தைப் பகுப்பாய்வதே இந்த ஆய்வின் முதன்மை நோக்கமாகும்.

**குறிப்பிட்ட நோக்கங்கள்**

- தட்டுமாறு மற்றும் கட்டிமாறு நிலவுரிமை முறைமையின் சிறப்பியல்பு அம்சங்களை அடையாளங்காணுதல், அத்துடன் தட்டுமாறு மற்றும் கட்டிமாறு நிலவுரிமை முறைமை எவ்வாறு மற்றும் எந்த அளவிற்கு கமத்தொழில் உற்பத்தியைப் பாதித்துள்ளது என்பதைக் அடையாளங்காணுதல்.

- தற்போதுள்ள கமத்தொழில்/கமநல அமைப்பில் இந்த முறைமையின் மீது கமக்காரர்களின் மனப்பான்மையைக் கண்டறிவதுடன், குறிப்பிட்ட நிலவுரிமை முறைமையுடன் தொடர்புடைய உற்பத்தித்திறன் சிக்கலைத் தீர்ப்பதற்கு இட்டுச்செல்லும் தீர்வு நடவடிக்கைகளை நாடுதல்.

**முடிவுகள் மற்றும் பரிந்துரைகள்**

பெரும்பான்மையான கமக்காரர்கள் முதியவர்கள் மற்றும் நெல் சாகுபடியை முதன்மை வருமான ஆதாரமாக செய்யாதவர்கள் என்பதையும், மேலும் நெல் கமத்தொழிலில் இளைஞர்களின் ஈடுபாடு மட்டுப்படுத்தப்பட்டதாக இருப்பதையும், இது எதிர்காலத்தில் அதிகளவு காணி கைவிடப்படும் அபாயத்தை வலியுறுத்துகிறது என்பதையும் மக்கள்தொகை பண்புகள் முனைவுபடுத்துகின்றன.

மூன்று மாவட்டங்களிலும் பண்ணை விலையை விட கணக்கிடப்பட்ட செலவு உட்பட அலகு உற்பத்திச் செலவு அதிகமாக உள்ளது மற்றும் மொத்த செலவின் முறிவு, 50%க்கும் அதிகமான செலவினங்கள் உழைப்பிற்காக ஒதுக்கப்பட்டிருப்பதைக் காட்டுகின்றன. அதைத் தொடர்ந்து மின்சாரம் மற்றும் பொருள். காணி உடைமை நிலை ஆகியன சில பாதுகாப்பின்மையை உருவாக்கி, காணி மேம்பாட்டுக்கும் மற்றும் பராமரிப்பிற்கும் இடையூறாக இருந்தாலும், ஆய்வு செய்யப்பட்ட பகுதிகளில் நெல் காணிகளைப் பயிரிடாமல் இருப்பதற்கு முக்கிய காரணம் உற்பத்தியின் பொருளாதாரமற்ற தன்மையாகும்.

**பரிந்துரைகள்**

தட்டுமாறு-கட்டிமாறு முறைமையானது ஒரு சிக்கலான காணி உடைமை நிகழ்வு மற்றும் அதன் பொருளாதாரமற்ற உற்பத்தயின் தன்மையால் கடினமானதாக மாறியுள்ளது. எனவே, தீர்வுகளின் தொகுப்பாக இந்தப் பிரச்சினைக்கான தீர்வு வர வேண்டும். தேவையான இடங்களில் காணிகளைப் பிரித்து ஒருங்கிணைக்க உரிய சட்ட நிறுவனங்களை நிறுவி, வேகமாக மறைந்து வரும் அமைப்பை மீட்டெடுப்பதைப் பரிசீலிக்க வேண்டும்.

***2. கமக்காரர் அமைப்புகளுக்கு சிறு நீர்ப்பாசன புனரமைப்பு (MIR) ஒப்பந்தங்களை வழங்குவதற்கான மதிப்பீடு: இலங்கையில் நிலையான சிறு நீர்ப்பாசன அபிவிருத்திக்கான தாக்கங்களைப் பகுப்பாய்வதல்***

***ஆராய்ச்சிக் குழாம்:***

| | | |
|---|---|---|
| திரு. எம். எ. சி. எஸ். பண்டார | - | ஒருங்கிணைப்பாளர் |
| திருமதி எம். டி. பத்மஜானி | - | இணை-ஆராய்ச்சியாளர் |
| திரு. டபிள்யூ. எச். எ. ஷாந்த | - | இணை-ஆராய்ச்சியாளர் |
| திருமதி ஜி. ஜி. டீ எல். டபிள்யூ. சமரசிங்க | - | இணை-ஆராய்ச்சியாளர் |

***நிதிப்படுத்தல் மூலம்:*** ஹெ.கொ.க.ஆ.ப.நி. ஒன்றிணைந்த நிதியம்

**நோக்கெல்லை மற்றும் குறிக்கோள்கள்:**

*MNPEA3/2003இன் கீழ் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையுடன் கமக்காரர் அமைப்புகளுக்கு (FO) MIR ஒப்பந்தங்களை வழங்குதல் தொடங்கப்பட்டது. கமக்காரர் அமைப்புகளுக்கு வழங்கப்பட்ட MIR ஒப்பந்தங்கள் ஆரம்பத்தில் இரண்டு மில்லியன் ரூபாவுக்கு மட்டுப்பட்டிருந்துடன், இது பின்னர் MNPEA3/2016 சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்டு ஐந்து மில்லியன் ரூபாவுக்கு அதிகரிக்கப்பட்டது. மேற்கண்ட சுற்றறிக்கை இரண்டு நோக்கங்களை அடைய எதிர்பார்க்கப்படுகிறது. முறைமையின் ஆரோக்கியத்தையும் மற்றும் நிலைத்தன்மையையும் நோக்கி நிதி ஆதாயத்தையும் மற்றும் சமூக அணிதிரட்டலையும் நாடாமல் முதன்மையாக சிறு நீர்ப்பாசன முறைமைகளை மறுசீரமைத்தல் மற்றும் கமத்தொழில் அமைப்புகளுக்கு உரிமை உணர்வு, தொழில்நுட்பத் திறன்கள், அதிக நிதித் திறன் மற்றும் உடல் உழைப்பின் உறுதி ஆகியவற்றை வழங்குவதன் மூலம், அமைப்பின் நிலைத்தன்மையைப் பராமரிக்க துணைபுரிகிறது.*

*சிறு நீர்ப்பாசனப் புனரமைப்பு (MIR) ஒப்பந்தங்களை கமக்காரர் அமைப்புகளுக்கு (FO) வழங்கும் அதன் நோக்கங்களை போட்டி ஏல நடைமுறையை பின்பற்றாமல் கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் (DAD) அடைய முடிந்ததா? போட்டி ஏல முறையைப் பின்பற்றாமல் MIR ஒப்பந்தங்களை கமக்காரர் அமைப்புகளுக்கு வழங்குவது நிலையானதா? என்றவாறு மேற்கூறிய திட்டத்துடன் தொடர்புடைய இரண்டு அடிப்படைக் கேள்விகளுக்கான பதில்களை வழங்குவதற்காக இந்த ஆய்வு வடிவமைக்கப்பட்டுள்ளது. கமக்காரர் அமைப்பு மூலம் MIRஇன் இந்தத் தாக்கங்களை ஆய்வு செய்வதுடன், சுற்றறிக்கையை மறுபரிசீலனை செய்வதற்கும், இலங்கையில் சிறு நீர்ப்பாசன முறைகளின் நிலைத்தன்மைக்கு தேவையான திருத்தங்களை செய்வதற்கும் கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு நுண்ணறிவுகளை வழங்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.*

**ஆராய்ச்சியின் நோக்கங்கள்:**

*MIR ஒப்பந்தங்களை கமக்காரர் அமைப்புகளுக்கு வழங்குவதன் தாக்கத்தை மதிப்பிடுவதும், போட்டி ஏல நடைமுறையைப் பின்பற்றாமல் கமக்காரர் அமைப்புகளுக்கு ஒப்பந்தங்களை வழங்குவதும் அதன் மூலத்திலான நோக்கங்களை அடைவதும் ஆய்வின் முக்கிய நோக்கமாகும்.*

**குறிப்பிட்ட நோக்கங்கள் வருமாறு:**

- *MIR தொடர்பாக கமக்காரர் அமைப்புகளின் நிறுவனரீதியிலான பலம், திறன்கள் மற்றும் பலவீனங்கள் ஆகியவற்றை மதிப்பிடுதல்.*

- *புனரமைப்புப் பணிகளின் ஒட்டுமொத்தத் தரத்தையும், கமக்காரர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதையும் மற்றும் மறுவாழ்வுச் செயல்பாட்டில் கமக்காரர்களின் பங்களிப்பையும் மதிப்பிடுதல்.*

- *கமக்காரர்களின் வாழ்வாதாரத்தில் நீர்ப்பாசனத் திட்டங்களின் புனரமைப்பையும் மற்றும் கமக்காரர் அமைப்புகளின் திறன்களையும் மேம்படுத்துவதன் தாக்கங்களை மதிப்பிடுதல்.*

- *நீர்ப்பாசன புனரமைப்புப் பணிகளை தாங்களாகவே நிர்வகிப்பதன் மூலம் கமக்காரர் அமைப்புகளின் (கமக்காரர்) உரிமைத்துவம், பொறுப்பு மற்றும் பொறுப்புக்கூறுதல் ஆகியவற்றின் உணர்வை உருவாக்குவதை மதிப்பிடுதல்.*

- *மிகவும் நிலையான மற்றும் பயனுள்ள MIRக்காக கமக்காரர் அமைப்புகளுக்கு ஒப்பந்தங்களை வழங்குவதற்கான நடைமுறையை மதிப்பாய்தல்.*

*கமநல அபிவிருத்தித் திணைக்களத்துடன் கலந்தாலோசித்த பின்னர், கடந்த ஐந்து வருடங்களின் (20015-2019) போது குருநாகல், அனுராதபுரம், நுவரெலியா, பதுளை மற்றும் வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட 40 MIR திட்டங்கள் வெளிக்கள ஆய்வுக்காக தோராயமாக தேர்ந்தெடுக்கப்பட்டன.*

**முடிவுகள்**

- பயனாளிகளின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்தல் பல்வேறு மட்டங்களில் விளங்கினாலும், கமக்காரர் அமைப்புகளால் மேற்கொள்ளப்பட்ட பெரும்பாலான புனரமைப்பு ஒப்பந்தங்கள் வெற்றி பெற்றுள்ளன.

- சுறுசுறுப்பான அலுவலகப் பணியாளர்களுடன் சிறப்பாகச் செயல்பட்ட கமக்காரர் அமைப்புகள், புனரமைப்புப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து அதிகபட்ச பலன்களைப் பெற்றுள்ளன.

- புனரமைப்புப் பணிகளை வெளியில் உள்ள ஒப்பந்ததாரரால் மேற்கொள்ளப்படுவதை விட, அவர்களது சொந்த கமக்காரர் அமைப்பு அல்லது அருகிலுள்ள பிற கமக்காரர் மூலம் மேற்கொள்ளப்படும் நிகழ்வில் கமக்காரர்கள் அதிகளவு பயன் அடைந்துள்ளனர்.

**பரிந்துரைகள்**

- இந்த வகையான சிறு நீர்ப்பாசன மறுசீரமைப்பு, அப்பகுதியில் உள்ள கமநல அலுவலர்களால் அதன் திறனை (மனித/பௌதீக) பரிசீலித்த பின்னர், கமக்காரர் அமைப்புக்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

தொடர்பான கமக்காரர் அமைப்புக்கு புனரமைப்புப் பணியை மேற்கொள்ளும் திறன் இல்லை என்றால், செய்திட்டத்தை ஒப்பந்தம் செய்ய அருகிலுள்ள மற்றொரு கமக்காரர் அமைப்பைக் கருத்தில் கொள்வது மிகவும் பொருத்தமானதாகும்.

**4. தேசிய அளவில் முக்கியமான கமத்தொழில் பாரம்பரிய அமைப்புகள்: அங்கீகாரம், பொருந்தக்கூடியதன்மை மற்றும் பேணல்**

**ஆராய்ச்சிக் குழாம்:**

| | | |
|---|---|---|
| செல்வி ஜே.எ.யு.பி. ஜயசிங்க | - | ஒருங்கிணைப்பாளர் |
| திருமதி ஆர்.எம்.எம்.எச்.கே. ரம்பொடகெதர | - | இணை-ஆராய்ச்சியாளர் |
| திருமதி ஆர்.டி.விஜேசிங்க | - | இணை-ஆராய்ச்சியாளர் |

**நிதிப்படுத்தல் மூலம்:** ஒன்றிணைந்த நிதியம்

**நோக்கெல்லை மற்றும் குறிக்கோள்கள்:**

"தேசிய முக்கியத்துவம்வாய்ந்த கமத்தொழில் பாரம்பரிய முறைமைகள் (NIAHS)" என்பது 2019ஆம் ஆண்டில் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தால் முன்மொழியப்பட்ட ஒரு புதிய கருத்தாகும். இந்தக் கருத்து ஐக்கிய நாடுகளின் உணவு, விவசாய அமைப்பின் "உலகளாவிய முக்கியத்துவம்வாய்ந்த கமத்தொழில் பாரம்பரிய அமைப்புகள்" என்ற கருத்தின் அடிப்படையில் தொடங்கப்பட்டது. இலங்கையின் NIAHSஆனது வளமான, நிலையான, உள்நாட்டு மற்றும் புத்திசாலித்தனமான கமத்தொழில் அறிவு அமைப்புகளாக விவரிக்கப்படலாம். இது காலப்போக்கில் பல்வேறு சுற்றுச்சூழல், காலநிலை, சமூக மற்றும் பொருளாதார மாறுபாடுகளுக்கு வெற்றிகரமாக மாற்றியமைப்பதன் மூலம் தலைமுறையிலிருந்து தலைமுறைக்கு உள்ளார்ந்ததாகும். காலநிலை, கலாச்சார மற்றும் சமூக-பொருளாதார எழுச்சிகள் இருந்தபோதிலும், உணவு மற்றும் வாழ்வாதாரப் பாதுகாப்பை உறுதி செய்யும் திறன் இந்த அமைப்புகளுக்கு இருந்ததால், காலநிலை, கலாச்சார மற்றும் சமூக-பொருளாதார எழுச்சிகள் இருந்தபோதிலும், உணவு மற்றும் வாழ்வாதார பாதுகாப்பை உறுதி செய்யும் திறன் இந்த அமைப்புகளுக்கு இருந்ததால், இந்த அமைப்புகளில் பொதிந்துள்ள அறிவு, நிகழும் எதிர்பாராத மாற்றங்களைத் தாங்கும் வகையில் புதிய கமத்தொழில் மாதிரிகளை உருவாக்குவதற்கான வலுவான அடித்தளத்தை வழங்கும் திறனைக் கொண்டுள்ளது என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். தற்போது பருவநிலை மாற்றம், ஆற்றல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு

மத்தியில் இந்த முறைமைகளில் பொதிந்துள்ள அறிவு, நிகழும் எதிர்பாராத மாற்றங்களைத் தாங்கும் வகையில் புதிய கமத்தொழில் மாதிரிகளை உருவாக்குவதற்கான வலுவான அடித்தளத்தை வழங்கும் திறனைக் கொண்டுள்ளது என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

இருப்பினும், வணிக தீவிர கமத்தொழிலின் தீவிரமான பரிணாம வளர்ச்சியுடன், இந்த முறைமைகள் அவற்றின் விஞ்ஞாரிதியிலான அடிப்படையை அடையாளங்காணாமலும், நிலையான நவீன கமத்தொழில் முறைமைகளை உருவாக்க ஒரு சாதகமான தளமாக பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளும் இல்லாமல் அற்றுப்போகின்றன. தற்போது இலங்கையில் இந்த முறைமைகளை வரையறுப்பதற்கும், அங்கீகரிப்பதற்கும், சேகரித்து பாதுகாப்பதற்கும் தேசியக் கொள்கை மற்றும் பொறிமுறை எதுவும் இல்லை. சரியான நேரத்தில் இப்பிரச்சினையின் முக்கியத்துவத்தைக் கண்டறிந்து, கமநல அபிவிருத்தித் திணைக்களம், இலங்கையின் கிராமப்புற கமத்தொழிலின் நிலைத்தன்மையில் கமத்தொழில் பாரம்பரிய முறைமைகளின் விளைவுகளை ஆய்வு செய்யுமாறு ஹெ.கொ.க.ஆ.ப.நி. இடம் கோரியது. எனவே, இந்த ஆய்வானது இலங்கையின் தேசியரீதியில் முக்கியமான கமத்தொழில் முறைமைகள், அவற்றின் பொருந்தக்கூடியதன்மை மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை அடையாளங்காண்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**நோக்கங்கள்**

இலங்கையின் தேசிய முக்கியத்துவம்வாய்ந்த பாரம்பரிய கமத்தொழில் முறைமைகளை அடையாளங்காண்பது, நவீன கமத்தொழில் முறைமைகளை மேம்படுத்துவதற்கு அவற்றின் பொருந்தக்கூடியதன்மை மற்றும் அவற்றைப் பாதுகாப்பதற்கான வழிகளைச் சுட்டிச்சொல்வது ஆகியன இந்த ஆய்வின் ஒட்டுமொத்த நோக்கமாகும்,

**குறிப்பிட்ட நோக்கங்கள்**

- தேசிய முக்கியத்துவம்வாய்ந்த கமத்தொழில் பாரம்பரிய முறைமைகளை அடையாளங்காண ஒரு பொருத்தமான தேர்வு அளவுகோலைப் பயன்படுத்தி ஒரு வகைப்படுத்தல் முறைமையை உருவாக்குதல்.

- தேசிய முக்கியத்துவம்வாய்ந்த கமத்தொழில் பாரம்பரிய முறைமைகளை அடையாளங்காணவும், சேகரிக்கவும் மற்றும் சேமிக்கவும் ஒரு முறைமையை உருவாக்குதல்.

- நவீன கமத்தொழில் முறைமைகளின் உற்பத்தித்திறன், மீள்தன்மை மற்றும் நிலைத்தன்மை ஆகியவறை மேம்படுத்த தேசிய முக்கியத்துவமவாய்ந்த கமத்தொழில் பாரம்பரிய முறைமைகளின் பொருந்தக்கூடிய தன்மையை அடையாளங்காணுதல்.

- இலங்கையில் பாரம்பரிய கமத்தொழில் முறைமைகளைப் பேணுவதற்கான ஒரு தேசிய கொள்கையை உருவாக்குவதற்கான கொள்கை வழிகாட்டலை வழங்குதல்.

**தற்போதைய முன்னேற்றம்**

இலக்கியங்களை கவனமாகப் பகுப்பாய்வு செய்த பிறகு, தேசிய முக்கியத்துவம்வாய்ந்த பாரம்பரிய கமத்தொழில் முறைமைகளைப் பகுப்பாய்வு செய்ய, ஒரு சமூக-சூழல் முறைமைகள் மாதிரி தேர்வு செய்யப்பட்டது. சிக்கலான அனுசரிப்பு முறைமைகளின் மாதிரியின் கொள்கைகளைப் பயன்படுத்துவதை கணினிக் கூறுகள் பகுப்பாய்வு செய்கின்றன மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டமைப்பின் அடிப்படையில் விடய நிபுணர்களுடன் குழு விவாதங்களை நடத்துகின்றன.

## 5. உலர் வலயத்தின் சிறுஉடையாளர் கமக்காரர் நெல் கமத்தொழில் துறையில் காணி ஒருங்கிணைப்பு: கமக்காரர்களின் மனவுணர்வு மற்றும் ஏற்றுக்கொள்ளலின் மட்டம்

**ஆராய்ச்சிக் குழாம்:**

திருமதி ஆர்.எம்.எம்.எச்.கே. ரம்பொடகெதர - ஒருங்கிணைப்பாளர்
செல்வி ஜே.எ.யு.பி. ஜயசிங்க - இணை-ஆராய்ச்சியாளர்
திரு. ஐ.பி.பி.எம். விஜேசிங்க - இணை-ஆராய்ச்சியாளர்

**நிதிப்படுத்தல் மூலம்:** ஒன்றிணைந்த நிதியம்

**நோக்கெல்லை மற்றும் குறிக்கோள்கள்:**

கற்பாக கமக்கொழில் காணிப் பயன்பாட்டில் குறிப்பாக சிறுபோக நெல் கமக்கொழில் துறையில் இலங்கை கடுமையான பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளது. சிறுமையான மற்றும் நிலையான காணிப் பயன்பாட்டு நடைமுறைகளுக்கு விவேகமான கொள்கை நடவடிக்கைகளை உருவாக்க வேண்டியதன் அவசியக்கை இது கோருகிறது. காணி ஒருங்கிணைப்பு (LC) பெரும்பாலும் கமக்கொழில் காணி வள முகாமைக்குவக்கில் இருக்கும் குறைபாடுகளைக் குறைப்பதற்கு ஒரு வலுவான கீர்வை வழங்குவதற்கான ஒரு நம்பிக்கைக்குரிய செயலுபாயமாக அடையாளப்படுத்தப்படுகிறது. இது கமக்கொழில் காணிகளை மிகவும் பொருளாதாரீதியாகவும் சிறுமையாகவும் மாற்றுவதற்கு இன்றியமையாததாகும். இந்த முக்கியத்துவத்தின் காரணமாக இலங்கையில் நீண்ட காலமாக காணி ஒருங்கிணைப்பை நடைமுறைப்படுத்துவது கீழிறமான கொள்கை விவாதங்களில் உள்ளது. இருப்பினும் அக்கையை இடர்பாடுகளுக்கு பங்குதாரர்களின் பங்கேற்பு இன்றியமையாததாக இருப்பதால் காணி ஒருங்கிணைப்பு இடர்பாடுகளைக் குறைப்பது செயல்படுத்துவது கொள்கையே கடினம் என்பது பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. எனவே காணி ஒருங்கிணைப்பு குறித்த கமக்காரர்களின் கருத்துக்களையும் அவர்கள் ஏற்றுக்கொண்டு கையும் அடையாளங்காண்டுள்ளது. காணி ஒருங்கிணைப்பு முயற்சிகளை வடிவமைக்க செயல்படுத்துவதற்கும் அடையாளப்படுத்தப்பட்ட சூழ்நிலைகளில் எழக்கூடிய முரண்பாட்டு சூழ்நிலைகளைக் குறைப்பதற்கும் ஒரு நல்ல வழியை வழங்குகிறது. இவ்வாறாக பாரம்பரிய கமக்கொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக இலங்கையின் சிறு உடமையாளர் நெல் கமக்கொழில் துறையில் கமக்காரர்களின் கருத்துக்களை அடையாளங்காணுதல் மற்றும் காணி ஒருங்கிணைப்பினை மறுத்தல் ஆகியவற்றை ஆராய்வதற்காக இந்த ஆய்வு வடிவமைக்கப்பட்டுள்ளது.

**குறிப்பிட்ட நோக்கங்கள்:**

- காணி ஒருங்கிணைப்புக்கு காணிக் கொள்கைகள் எந்த அளவிற்குச் சாதகமாக உள்ளன என்பதை ஆராய்ந்து சிறு கமக்காரர்களிடையே காணி ஒருங்கிணைப்பை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளைக் கண்டறிதல்.
- காணி ஒருங்கிணைப்பு மற்றும் காணி ஒருங்கிணைப்புக்கு ஏற்றுக்கொள்ளுதலின் மட்டம் ஆகியன பற்றிய கமக்காரர்களின் கருத்துக்களை அடையாளங்காணுதல்.
- காணி ஒருங்கிணைப்பை கமக்காரர் ஏற்றுக்கொள்வது அல்லது மறுப்பது தொடர்பான முக்கிய நிர்ணயக்கூறுகளை ஆராய்தல்.
- வெவ்வேறு சூழ்நிலைகளில் காணி ஒருங்கிணைப்பை செயல்படுத்த கமக்காரர்களின் விருப்பக்கையும் ஏற்றுக்கொள்ளலையும் மேம்படுத்துவதற்கான சாத்தியமான செயலுபாயங்களை ஆராய்தல்.

**தற்போதைய முன்னேற்றம்**

இந்த ஆய்வின் இலக்கு மக்கள் இலங்கையின் உலர் வலயக்கில் உள்ள முக்கிய நெல் கமக்கொழில் மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிறு உடமையாளர் காம்நில கமக்காரர்களாக அடையாளங்காணப்பட்டனர். ஆராய்ச்சி பயிற்சித் குழுவில் ஆராய்ச்சி முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. காமான மற்றும் அளவு தரவுகளைச் சேகரிக்க தொடர்புடைய மாறிகள் அடையாளங்காணப்பட்டுள்ளன.

**6. பண்ணையில் இருந்து தட்டு வரைதேர்ந்தெடுக்கப்பட்ட மரக்கறிப் பயிர்களின் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் செயல்நிறைவேற்றங்கள்**

**ஆராய்ச்சிக் குழாம்:**

| | |
|---|---|
| திருமதி ஜி.ஜி. டி எல்.டபிள்யூ. சமரசிங்க | - ஒருங்கிணைப்பாளர் |
| திருமதி எம்.டி. பத்மஜானி | - இணை-ஆராய்ச்சியாளர் |
| திரு. டபிள்யு.எச்.எ. ஷாந்தா | - இணை-ஆராய்ச்சியாளர் |
| திரு. எம்.எ.சி.எஸ். பண்டார | - இணை-ஆராய்ச்சியாளர் |

**நிதிப்படுத்தல் மூலம்:** ஹெ.கொ.க.ஆ.ப.நி. ஒன்றிணைந்த நிதியம்

**நோக்கெல்லை மற்றும் குறிக்கோள்கள்:**

இலங்கையில் கமத்தொழில் உற்பத்தியின் மிக முக்கியமான பிரிவுகளில் ஒன்று மரக்கறி பயிர்ச்செய்கையாகும். மரக்கறி உற்பத்தி துணைத் துறையில் கணிசமான எண்ணிக்கையிலான பண்ணைக் குடும்பங்கள் ஈடுபட்டுள்ளதால், ஒட்டுமொத்த நாட்டின் மக்கள்தொகையின் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை உறுதி செய்யும் நுகர்வோர் பண்டமாக உள்ளதனால் சமூக-பொருளாதார மற்றும் அரசியல் அம்சங்களைக் கருத்தில் கொண்டு அரசாங்கத்தின் கமத்தொழில் கொள்கையின் முக்கிய கரிசனையாக உள்ளது. இருப்பினும், மரக்கறி உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் முறைகளில் பல சிக்கல்கள் உள்ளன என்பதைக் காட்டுவதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன. அவை முக்கியமாக ஏற்ற இறக்கமான பண்ணை படலை மற்றும் சில்லறை விலைகள் மூலம் பிரதிபலிக்கின்றன.

நியாயமான விலையை நுகர்வோர் அனுபவிக்கும் அதே வேளையில் கமக்காரர்கள் அதிக இலாபத்தைப் பெறவும், தேசிய உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் வேண்டும் என்றால், உணவு முறையின் சங்கிலி முறையானது வலுவாகவும், திறமையாகவும், ஆரோக்கியமாகவும், ஆற்றல்மிக்கதாகவும் இருக்க வேண்டும். உற்பத்தியாளர்களும், நுகர்வோரும் வெற்றி-வெற்றி சூழ்நிலையை அடைய மதிப்புச் சங்கிலிகளைப் புரிந்துகொள்வது, அதன் செயற்பாட்டாளர்கள் மற்றும் தாக்கங்கள் முக்கியமானவையாகும். இருப்பினும், சங்கிலியின் அனைத்து செயற்பாட்டாளர்களையும் கணக்கில் எடுத்துக்கொள்வதன் மூலம் சரியான மரக்கறி மதிப்பு சங்கிலி பகுப்பாய்வு பற்றிய ஆய்வுகள் விஞ்ஞான இலக்கியங்களில் குறைவாகும். எனவே, உள்ளீடு விநியோஸ்தர் முதல் இறுதி நுகர்வோர் வரையிலான மதிப்புச் சங்கிலியின் ஒவ்வொரு படிநிலையிலும் சிக்கல்கள், முன்னேற்றத்தைத் தடுக்கும் பலவீனங்கள் மற்றும் ஆற்றல்களை ஆகியவற்றை அடையாளங்காண விரிவான மதிப்புச் சங்கிலிப் பகுப்பாய்வு நடத்துவது முக்கியமாகும்.

**முக்கிய நோக்கம்:**

நாட்டில் உள்ள முக்கிய கவர்ச்சியான மரக்கறி மதிப்பு சங்கிலிகளில் உள்ள அனைத்து பங்குதாரர்களின் செயல்பாடுகளின் ஒட்டுமொத்த நிலையை ஆராய்வதே ஆய்வின் முக்கிய நோக்கமாகும்.

**குறிப்பிட்ட நோக்கங்கள்:**

- தேர்ந்தெடுக்கப்பட்ட பிறநாட்டுக்குரிய மரக்கறிகளின் தற்போதைய மதிப்புச் சங்கிலிகளை அடையாளங்காணுதல்.

- அடையாளங்காணப்பட்ட மரக்கறி மதிப்புச் சங்கிலிகளின் பங்குதாரர்களை அடையாளங்காணுதல் அத்துடன் கண்டறிந்து அவர்களின் செயல்திறனை மதிப்பிடுதல்.

- சங்கிலியுடன் ஒவ்வொரு படி/முனையுடன் தொடர்புடைய ஓரங்களையும் மற்றும் இலாபங்களையும் பகுப்பாய்தல்.

- ஒவ்வொரு மரக்கறி மதிப்புச் சங்கிலியின் ஒவ்வொரு பங்குதாரரும் எதிர்கொள்ளும் தடைகளையும் மற்றும் மரக்கறித் துறையை மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளையும் அடையாளங்காணுதல்.

**தற்போதைய முன்னேற்றம்**

ஆய்வு வட்ட கருத்தரங்கில் பெறப்பட்ட கருத்துகளை இணைத்து வரைவு ஆய்வு முன்மொழிவு மேம்படுத்தப்பட்டது. முக்கிய தகவலளிப்பவர் கருத்துப் பரிமாறல்கள் மற்றும் வெளியிடப்பட்ட மற்றும் வெளியிடப்படாத இலக்கியங்கள் ஆகியன மூலம் இரண்டாம் நிலைத் தரவுகள் மற்றும் தகவல் ஆகியன சேகரிக்கப்பட்டன. மதிப்புச் சங்கிலிகளுடன் வெவ்வேறு செயற்பாட்டாளர்களை நேர்காணுவதற்காக சரிபார்ப்பு பட்டியல்கள் தயார் செய்யப்பட்டுள்ளன.

**வெளிவாரிரீதியாக நிதியளிக்கப்பட்ட செய்திட்டங்கள் (முடிக்கப்பட்டவை)**

1. **இலங்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பயிர் வகைகளுக்கான நுண் நீர்ப்பாசன தொழில்நுட்பங்களுக்கான நீர்/சக்தி அடிப்படை மதிப்பீடு- (CR 559)**

**ஆராய்ச்சிக் குழாம்:**

| | |
|---|---|
| திரு. டபிள்யு.எச்.எ.ஷாந்த | - இணை-ஆராய்ச்சியாளர் |
| திரு. எம்.எ.சி.எஸ். பண்டார | - ஒருங்கிணைப்பாளர் |
| திருமதி எம்.டி. பத்மஜானி | - இணை-ஆராய்ச்சியாளர் |
| திரு.டபிள்யு.எ.என். விஜேசூரிய | - இணை-ஆராய்ச்சியாளர் |
| திரு.ஆர்.எ.சி.ஜே. பெரேரா | - இணை-ஆராய்ச்சியாளர் |

**நிதிப்படுத்தல் மூலம்:** உலக உணவுத் திட்டம்

**நேர காலம்:** செப்டம்பர் 2019 - ஜனவரி 2020

**நோக்கெல்லை மற்றும் குறிக்கோள்கள்:**

பாரம்பரியமான நீர்ப்பாசன வகைகள் (வெள்ள நீர்ப்பாசனம், சால் நீர்ப்பாசனம் மற்றும் தாவர மலைகளுக்கு நீர்ப்பாசனம்) பல்வேறு பயிர் முறைகளிலும் மற்றும் வெவ்வேறு புவியியல் அமைவிடங்களிலும் கமக்காரர்களால் பின்பற்றப்படும் மிகவும் பிரபலமான நீர்ப்பாசன முறைகள் ஆகும். 1990ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து, கமத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையானது நீர் மற்றும் தொழிலாளர் சேமிப்பு முயற்சியாக கமத்தொழில் துறைக்கு நுண் நீர்ப்பாசனத் தொழில்நுட்பத்தை (விசிறல் மற்றும் சொட்டு நீர்ப்பாசன முறைமைகள்) அறிமுகப்படுத்தியது. பின்னர், இந்தத் தொழில்நுட்பத்தைப் பிரபலப்படுத்த தெற்கு அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை மகாவலி அதிகாரசபை (MASL), உணவு, விவசாய அமைப்பு (FAO) மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற அமைப்புக்கள் (NGOs) ஆகியன மூலம் பல்வேறு முயற்சிகளும் மற்றும் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. கமத்தொழில் அமைச்சு மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் போன்ற அரசு நிறுவனங்களின் பயிர் பல்வகைப்படுத்தல் செயலுபாயங்கள் நுண் நீர்ப்பாசன முறைமைகளை அறிமுகப்படுத்தி ஊக்குவிப்பதில் இந்த முயற்சிகளால் நன்கு ஆதரிக்கப்பட்டன.

இருப்பினும், உள்ளூர் நிலைமைகளுக்கு (குறிப்பாக நீரின் தரம், நாளாந்த பயிர் நீர் தேவை மற்றும் இன்னும் பல) அறிமுகப்படுத்தப்பட்ட அலகுகளின் ஒவ்வாமை அல்லது பொருந்தாததன்மை ஆகியன காரணமாக இந்த தொழில்நுட்பம் ஆரம்பத்தில் கமத்தொழில் சனசமூகங்களால் நிராகரிக்கப்பட்டது. அதிக எண்ணிக்கையிலான தனியார் துறை நிறுவனங்களின் ஈடுபாட்டின் மூலம் சந்தை விரிவாக்கம் மற்றும் பல்வேறு பயிர் முறைகள் மற்றும் பகுதிகளுக்கு மிகவும் பொருத்தமான நுண் நீர்ப்பாசன அலகுகளை அறிமுகப்படுத்தியதன் மூலம், இந்தத் தொழில்நுட்பம் மிகவும் பிரபலமானது மற்றும் குறிப்பாக புதுமையான கமக்காரர்கள் மத்தியில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அரசு மற்றும் தனியார் துறை நிறுவனங்களால் செயல்படுத்தப்படும் மானியத் திட்டங்கள் மூலம் தொழில்நுட்பத்தை அரசு தொடர்ந்தும் ஊக்குவித்து வருகிறது. சூரிய சக்தியில் இயங்கும் நீர் பம்பிகள் மற்றும் நுண் நீர்ப்பாசன முறைமை போன்ற மேம்பட்ட தொழில்நுட்பங்கள், வழக்கமான மின்சாரம் கிடைக்காத தொலைதூர பகுதிகளில் கமக்காரர்கள் /கமத்தொழில் தொழில்முனைவோர் ஆகியோர் முறைமையைப் பயன்படுத்த உதவியது.

எவ்வாறாயினும், இந்த முறைமைகளை நிறுவுவதில் அதிக ஆரம்ப செலவு மற்றும் தொழில்நுட்ப அம்சங்கள் இந்த நம்பிக்கைக்குரிய தொழில்நுட்பத்தை பின்பற்றுவதற்கு பெரும்பான்மையான கமக்காரர்களுக்கு ஒரு தடையாக உள்ளது. நீர், உழைப்பு மற்றும் ஆற்றல் (எரிபொருள்/மின்சாரம்) சேமிப்பு மற்றும் குறிப்பிடத்தக்க அளவு அதிக பயிர் விளைச்சல் ஆகியவை இந்த சிறப்பு நீர்ப்பாசன முறைமைகளில் நடத்தப்பட்ட ஆராய்ச்சி ஆய்வுகள் மூலம் வெளிச்சம் போட்டுக் காட்டப்பட்டாலும், அந்த அம்சங்களில் உண்மையான மற்றும் அளவிடப்பட்ட தகவல்கள் அறிவியல் இலக்கியங்களில் கிடைக்கவில்லை. எனவே, நுண் நீர்ப்பாசன முறைமைகளை மிகவும் முறையான முறையில் பிரபலப்படுத்துவதற்கும் அத்துடன் மேலும் மேம்படுத்துவதற்கும் பல்வேறு பயிர்கள் மற்றும் பல்வேறு பகுதிகளுக்கு இந்தத் தொழில்நுட்பத்தின் உண்மையான நீர் மற்றும் ஆற்றல் சேமிப்பை ஆய்வு செய்து, தணிக்கை செய்து ஆவணப்படுத்துவது முக்கியமான தேவையாகும்.

இந்தச் சூழமைவில், இந்த ஆய்வின் இலக்கு நோக்கங்கள் வருமாறு:

- குறிப்பிட்ட பயிர் வகைகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட கமத்தொழில் சமூகங்களால் பயன்படுத்தப்படும் பல்வேறு வகையான முக்கிய நீர்ப்பாசன முறைகளை அடையாளங்காணுதல்.

- வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு நீர்ப்பாசன முறைகளின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட பயிர்களைப் பயிரிட கமக்காரர்கள் பயன்படுத்தும் நீரின் அளவை ஆய்வு செய்தல்.

- வெவ்வேறு நீர்ப்பாசன முறைமைகள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்வதற்கான ஆற்றல் நுகர்வு (மனித உழைப்பு உட்பட)வேறுபாடுகளை ஆய்வுசெய்தல்.

**முடிவுகள் மற்றும் பரிந்துரைகள்**

நீர்ப்பாசனத்தைக் கடைப்பிடிக்கும் கமக்காரர்கள் கூட (வழக்கமான நீர்ப்பாசன முறைமைகளை அல்லது நுண் நீர்ப்பாசன முறைமைகளைப் பயன்படுத்தி), பயிரின் நிலை, இறைத்தல் சாதனங்களின் திறன் மற்றும் எண்ணிக்கை ஆகியவற்றைப் பொறுத்து பயிரின் தினசரி நீர் தேவை குறித்து அறிந்திருக்கவில்லை என்பது ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது. எனவே, கமக்காரர்களுக்கு செயல்பாட்டின் மணித்தியாலங்களின் எண்ணிக்கை (நீர் இறைத்தல் கருவி), நீர்ப்பாசன நடைமுறைகள் மற்றும் தினசரி பயிர் நீர் தேவையைப் பூர்த்தி செய்வது ஆகியன குறித்த விழிப்புணர்வு பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துவது அத்தியாவசிய தேவையாகப் பரிந்துரைக்கப்படுகிறது.

பெரும்பாலான கமக்காரர்கள் 1-1.5 kW/h திறன் கொண்ட மின்சார நீர் மோட்டார்களைப் பயன்படுத்துகின்றனர். அதே வேளை, மற்றவர்கள் 1.5-3.3 HP ஆற்றல் கொண்ட மண்ணெண்ணெய் நீர் பம்பிகளைப் பயன்படுத்துகின்றனர். பெரும்பாலான கமக்காரர்கள் முதல் பயன்பாட்டிலிருந்து

*10 ஆண்டுகளுக்கும் குறைவாக நீர் இறைக்கும் சாதனங்களைப் பயன்படுத்துகின்றனர். ஆனால், வழக்கமான சேவை மற்றும் பராமரிப்பு இல்லாமல் நீண்ட கால செயல்திறன் மற்றும் குறைந்தபட்ச நீடித்துழைப்பை பாதிக்கிறது. எனவே, கமக்காரர்களுக்கு நீர்ப்பாசனக் கருவிகளின் திறமையான பயன்பாடு மற்றும் நீர்ப்பாசனத்தின் நன்மைகள், குறிப்பாக, காலநிலை மாற்றத்திற்கான வழிமுறையாக MI முறைமைகளைப் புரிந்துகொள்ள விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துவது முக்கியம்.*

*சம்பந்தப்பட்ட பயிர் வகைகளின் ஆயுட்காலத்துடன் ஒப்பிடுகையில், குறுகிய காலத்திற்குள் முதலீட்டை மீட்டெடுக்க முடியும் என்பதால், ஆய்வு செய்யப்பட்ட அனைத்து பயிர்களுக்கும் நுண் நீர்ப்பாசன முறைமைகளில் முதலீடு செய்வது மதிப்புக்குரியது என்று நிதி ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. எனவே, பயிர் விளைச்சலை அதிகரிக்கவும், நீர் மற்றும் சக்தி ஆகியவற்றைச் சேமிக்கவும், மாறிவரும் காலநிலைக்கு ஏற்ப பருவநிலையை எதிர்க்கும் திறனை அதிகரிப்பதற்கு தொழில்நுட்பமாகவும் ஒரு நல்ல நுட்பமாக ஊக்குவிக்க நுண் நீர்ப்பாசன முறைமைகள் பரிந்துரைக்கப்படுகின்றன.*

**2. இலங்கையின் அனுராதபுர மாவட்டத்தில் அரிசி உற்பத்தி மீது மேம்படுத்தப்பட்ட கமத்தொழில் விரிவாக்க சேவைகளின் தாக்கம் மீதான ஆதாரத்தைக் கட்டியெழுப்புதல் - *(CR 561)***

***ஆராய்ச்சிக் குழாம்:***

| | | |
|---|---|---|
| திரு. டபிள்யூ.எச்.எ.ஷாந்த | - | ஒருங்கிணைப்பாளர் |
| திரு. எம்.எ.சி.எஸ். பண்டார | - | இணை-ஆராய்ச்சியாளர் |
| திருமதி எம்.டி. பத்மஜானி | - | இணை-ஆராய்ச்சியாளர் |
| திருமதி ஜி.ஜி. டீ எல்.டபிள்யூ. சமரசிங்க | - | இணை-ஆராய்ச்சியாளர் |

***நிதிப்படுத்தல் மூலம்:*** *உணவு, விவசாய அமைப்பு*

***நோக்கெல்லை மற்றும் குறிக்கோள்கள்:***

*தேசிய அரிசி தன்னிறைவு மற்றும் கிராமிய வறுமைக் குறைப்பு நோக்கங்கள் ஆகியவற்றை நோக்கிய சாதகமான முன்னேற்றத்தைத் தடுக்காமல், இலங்கை அரசாங்கம் அதன் தற்போதைய உர மானியத் திட்டத்தைத் திருத்துவதற்கான நிலையான வழிகளை அடையாளங்காண முயல்கிறது. இந்த நோக்கங்களை அடைவதில் விரிவான அனுபவச் சான்றுகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. குறிப்பாக, கமதொழில் அமைச்சு பல்வேறு மானிய முறைகளின் தாக்கத்தைப் புரிந்துகொள்வதற்கு (அன்பளிப்பு எதிர் பணம்), மானிய அளவுகள் மற்றும் அதன் உர மானியத்தின் வடிவமைப்பை மேம்படுத்த இலக்கு அளவுகோல்கள், நம்பகமான தரவு மற்றும் தகவலின் அடிப்படை ஆகியன தேவையாகும். மேலும், கமக்காரர்களின் மானிய விருப்பத்தேர்வுகளையும் மற்றும் மானிய விநியோகத்தையும் மேம்படுத்துவதற்காக தற்போதைய மானியத் திட்டத்தை அடைவதில் எதிர்கொள்ளும் சவால்களைப் புரிந்துகொள்வது பயனுள்ளதாக இருக்கும்.*

***ஆய்வின் நோக்கங்கள்***

*அரிசி உற்பத்தியாளர்கள் மீது குடித்தன-மட்ட அளவீட்டினை நடத்துவது மற்றும் அனுசரிப்பு மீதான தரவுகளையும் மற்றும் நிலையான கமத்தொழில் நடைமுறைகளின் செயல்திறனையும் பகுப்பாய்வது ஆகியனவே இந்த ஆய்வின் முதன்மையான நோக்கமாகும்.*

*பாதுகாத்தல் மற்றும் வளர்த்தல் திட்டத்தின் கீழ் அனுராதபுர மாவட்டத்தில் தொடங்கப்பட்ட FAO மற்றும் ஹெ.கொ.க.ஆ.ப.நி. இடையேயான முந்தைய கூட்டுமுயற்சியின் அடிப்படையில் இந்த அளவீடுக ட்டியெழுப்பப்பட்டுள்ளது. பாதுகாத்தல் மற்றும் வளர்த்தல் திட்டத்தின் கீழ், அனுராதபுர மாவட்டத்தில் 110 கமக்காரர் அமைப்பில் இருந்து 1,100 நெல் கமக்காரர்களின் குடித்தன அளவீடு ஒக்டோபர் 2018 முதல் பெப்ரவரி 2019 வரை நடத்தப்பட்டது. இந்தத் தரவுத் தொகுப்பு தற்போதைய திட்டத்திற்கான அடிமட்டமாக செயல்படுகிறது.*

***குறிப்பிட்ட நோக்கங்கள்***

- பல்வேறு கமத்தொழில் நடைமுறைகளில் அனுசரிப்பின் இயக்கிகள் மற்றும் சேமநலன் விளைவுகள் மீது அவற்றின் விளைவுகள் ஆகியவற்றை மதிப்பிடுதல்.

- குடித்தன சேமநலன், உற்பத்தித்திறன் மற்றும் கமக்காரர்களின் விருப்பத்தேர்வுகள் ஆகியன மீது பல்வேறு உர மானிய முறைகளின் தாக்கத்தை பகுப்பாய்தல்.

தற்போதைய ஆய்வு, குறிப்பாக, அக்டோபர் 2019 முதல் பெப்ரவரி 2020 வரையிலான பாதுகாத்தல் மற்றும் வளர்த்தல் அளவீட்டில் கருதப்பட்ட அனைத்து 1,100 குடும்பங்களையும் உள்ளடக்கிய இரண்டாவது சுற்று கணக்கெடுப்புத் தரவைச் சேகரிக்கவும், குடித்தனசேமநலன் மற்றும் உற்பத்தித்திறன அத்துடன் கமக்காரர்களின் விருப்பங்கள் ஆகியன மீது பல்வேறு உர மானிய முறைகளின் தாக்கத்தை பகுப்பாயவும் வடிமைக்கப்பட்டது. இந்தக் கருத்துக் கணிப்பு முந்தைய பாதுகாத்தல் மற்றும் வளர்த்தல் அளவீட்டைப் பிரதிபலிக்கிறது. அதே வேளை, உர மானிய விருப்பத்தேர்வுகள் தொடர்பான மேலதிகமான கேள்விகளைச் சேர்க்கிறது. முதல் சுற்று அளவீட்டுக்கும், இரண்டாவது சுற்றுக்கும் இடையில், அரசாங்கம் அதன் அன்பளிப்பிலான மானியத்திற்கு பதிலாக, பணத்தின் ஏற்பாட்டைப் பரிசோதித்தது. இரண்டு மானியச் செயலாக்க முறைகளை ஒப்பிட்டுப் பார்க்கவும், தாக்க பகுப்பாய்வு மற்றும் காரண அனுமானத்தை மேம்படுத்தக்கூடிய பேணல் தரவு பொருளியலளவை நுட்பங்களைப் பயன்படுத்தவும் இரண்டாவது சுற்று அளவீட்டுத் தரவு வடிவமைக்கப்பட்டுள்ளது.

**இறுதியான குறிப்புகள்**

கொவிட்-19 உலகளாவிய தொற்றுநோய் சூழ்நிலை காரணமாக, திட்டமிட்டபடி அளவீட்டினை நடத்த முடியவில்லை. 2021இல் அளவீடு தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**முடிக்கப்பட்ட பயிற்சித் திட்டங்கள்**

***1. RURALINVESTஅறிமுகப் பயிற்சித் திட்டம்***

***பயிற்சிக் குழாம்:***

| | | |
|---|---|---|
| திரு.டபிள்யூ.எச்.எ.ஷாந்த | - | ஒருங்கிணைப்பாளர் |
| திரு. எம்.எ.சி.எஸ். பண்டார | - | இணை-ஒருங்கிணைப்பாளர் |
| திருமதி ஜி.ஜி. டீ எல்.டபிள்யூ. சமரசிங்க | - | இணை-ஒருங்கிணைப்பாளர் |
| திருமதி எம்.டி. பத்மஜானி | - | இணை- ஒருங்கிணைப்பாளர் |

***நிதிப்படுத்தல் மூலம்:*** உணவு, விவசாய அமைப்பு

***நேர காலம்:*** 09 - 13 பெப்ரவரி 2020

***நோக்கெல்லை மற்றும் குறிக்கோள்கள்:***

உணவு, விவசாய அமைப்பின் (FAO) அலுவலகம், இலங்கை மற்றும் FAO முதலீட்டு நிலையப் பிரிவு (DPI) ஆகியவற்றுடன் இணைந்து RURALINVEST அறிமுகப் பயிற்சித் திட்டத்தை (கமத்தொழில் வணிகத் திட்டத்தினதும் மற்றும் சிறு முதலீட்டுத் திட்டங்களினதும் வகுத்தமைத்தலுக்கும் மற்றும் பகுப்பாய்வுக்குமான அறிமுகம்) ஹெ.கொ.க.ஆ.ப.நி. ஏற்பாடு செய்தது. RURALINVEST என்பது நிலையான கமத்தொழில் மற்றும் கிராமிய முதலீட்டுத் திட்டங்களையும் மற்றும் வணிகத் திட்டங்களையும் தயாரிப்பதற்கான இலவச பன்மொழி முறைமையியல் கருவிப் பொட்டளியாகும்.

நாட்டில் சிறிய கிராமப்புற முதலீடுகளுக்கான கமத்தொழில் வணிகத் திட்டங்களை வகுப்பதற்கும், தேசிய அளவில் RURALINVEST நிறுவனமயமாக்கலுக்கு உதவுவதற்கும் முதலீட்டாளர்களுக்கு/முதலீட்டாளர் குழுக்களுக்கு உதவுவதற்காக RURALINVESTஐப்

பயன்படுத்தும் ஒரு *RURALINVEST* பயிற்சியாளர் சனசமூகத்தை நாட்டில் உருவாக்குவதே இந்த பயிற்சியின் நோக்கமாகும்.

கமத்தொழில் திணைக்களம், மாகாண கமத்தொழில் திணைக்களங்கள், கமநல சேவைகள் திணைக்களம், தனியார் துறை நிறுவனங்கள் போன்ற பல்வேறு நிறுவனங்களைச் சேர்ந்த அறுபது பங்கேற்பாளர்களுடன் நிகழ்ச்சித்திட்டம் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

## 04
## சந்தைப்படுத்தல் உணவுக் கொள்கை, கம-வியாபாரப் பிரிவு

**நடந்துகொண்டிருக்கும் ஆய்வுகள்**

**1. இலங்கையில் மரக்கறி உற்பத்தி மீது கமக்காரர்களின் தீர்மானத்தின் நிர்ணயக்கூறுகள்**

**ஆய்வுக் குழாம்:**

திரு. பிரசன்ன விஜேசிங்க - ஒருங்கிணைப்பாளர்
கலாநிதி ரஞ்சித் விக்கிரமசிங்க - இணை-ஆராய்ச்சியாளர்
கலாநிதி இ.எம்.சி. பிரியங்கர - இணை-ஆராய்ச்சியாளர்
திரு.விராஜித் குருப்பு - இணை-ஆராய்ச்சியாளர்

**நிதிப்படுத்தல் மூலம்:** ஒன்றிணைந்த நிதியம்

**நோக்கெல்லை மற்றும் குறிக்கோள்கள்:**

இலங்கையில் நிலையற்ற மரக்கறி விநியோகம் தேவை நிலையானதாக இருக்கும் போது விலை ஏற்ற இறக்கத்தை ஏற்படுத்துகிறது. மரக்கறிப் பயிர்களைத் தேர்ந்தெடுக்க கமக்காரர்கள் எடுக்கும் முடிவு, அவ்வப்போது மரக்கறி விநியோகத்தில் நேரடியாகப் பாதிப்பை ஏற்படுத்தலாம். இது போன்ற தகவல்கள் நல்ல பொருளாதார முடிவுகளை எடுப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. எவ்வாறாயினும், இலங்கையில் மரக்கறிச் செய்கையின் உண்மை என்னவென்றால், பெரும்பாலான கமக்காரர்களுக்கு என்ன தேவை, எவ்வளவு தேவைப்படுகிறது, எப்போது தேவைப்படுகிறது என்பன பற்றித் தெரியாது. பிரச்சனையின் மூலகாரணம் தகவல்களின் துல்லியமாக இருக்கலாம். இந்தப் பின்னணியில், இலக்குகளை அடைவதற்காக இந்த ஆய்வு திட்டமிடப்பட்டது. *(i)* இலங்கையில் மரக்கறி கமக்காரர்கள் முடிவெடுப்பதற்கான தற்போதைய தகவல்-பகிர்வு கருவிகளின்/பயன்பாடுகளின்/முறைமைகளின் செயல்திறனை ஆராய்தல், *(ii)* மரக்கறி உற்பத்தித் துறையில் கமக்காரர்கள் முடிவெடுக்கும் செயல்முறைக்கு வழிவகுக்கும் காரணிகளை/தீர்மானங்களைப் புரிந்துகொள்தல், *(iii)* இலங்கையில் மரக்கறி உற்பத்தித் துறையின் தற்போதைய தவறான தகவல்களைக் குறைப்பதற்கான செயலுபாயங்களை வகுத்தமைத்தல்.

**முக்கிய முடிவுகள்**

*2019* வரை கிட்டிய பதினொரு தகவல் பகிர்வு கருவிகள்/பிரயோகங்கள்/முறைமைகள் ஆகியன விழிப்புணர்வு மற்றும் அனுசரிப்பு ஆகியவற்றில் குறைவாகவே காணப்படுகின்றன. *DOA*இன் ஹொட்லைன் *(1920* அழைப்பு நிலையம்*) 33%* மரக்கறி கமக்காரர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதுடன், *12%* கமக்காரர்கள் ஹெ.கொ.க.ஆ.ப.நி. சந்தைப்படுத்தல் விலைகள் பரிமாறும் ஹொட்லைனுக்குப் பதிலிறுத்தனர். *"கொவி மிதுரு App", "Kruchi FM Web Radio"* மற்றும் *"கொவிபொல App"* ஆகியவை குறித்து சுமார் *3-4%* கமக்காரர்களுக்குத் தெரியும். மற்ற பயன்பாடுகள் எதுவும் மொத்த மாதிரியில் *1%* விழிப்புணர்வு அளவை மீறவில்லை. பெரும்பாலான மரக்கறி கமக்காரர்களால் *(சுமார் 65%)* பெரும்பாலான தகவல் பகிர்வு கருவிகளை அணுக முடியவில்லை, ஏனெனில் அவர்களிடம் அம்ச தொலைபேசிகள் மற்றும் நில தொலைபேசிகள் மட்டுமே உள்ளன. மரக்கறிக் கமக்காரர்கள் பல்வேறு வழிகளில் தகவல்களைப் பெறுவார்கள், அதாவது விரிவாக்க சேவைப் பணியாளர்கள் *(33%),* கம இரசாயன விற்பனை நிலையங்கள் *(20%),* அயல்புர கமக்காரர்கள் *(25%).* உற்பத்திச் செலவானது மேல்நாட்டு மரக்கறிகளில் ஏக்கருக்கு ரூ. *88,000-185,000* கீழ்நாட்டு மரக்கறிகளில் ஏக்கருக்கு ரூ. *23,000 – 223,000* என விளங்குகின்றது. சுமார் *48%* மரக்கறிக் கமக்காரர்கள் செலவு குறைந்த வருமானம் பெற்றுள்ளனர். மறுபுறம், சுமார் *86%* பேர் தங்கள் பணச் செலவை ஈடுசெய்ய போதுமான வருமானத்தைப் பெற்றுள்ளதுடன், சுமார் *14%* மரக்கறிக் கமக்காரர்களால் மரக்கறிச் செய்கைக்கான பணச் செலவை ஈடுகட்ட முடியவில்லை.

மேல்நாட்டு மற்றும் கீழ்நாட்டு மரக்கறிகளுக்கான மதிப்பிடப்பட்ட பல்லுறுப்புக்கோவை லாஜிட் மாதிரிகளின் முடிவுகள் ஒவ்வொரு பயிர்த் தேர்வின் தீர்மானங்களையும் வெளிப்படுத்தின.

பயிரிடப்பட்ட அளவு அவரை, பீட்ரூட், கோவா, கறிமிளகாய், கரட், நோல்-கோல், வெண்டைக்காய், பீர்க்கு, பயிற்றங்காய், தக்காளி மற்றும் கத்திரிக்காய் ஆகியவற்றிற்கு ஒரு தீர்மானகரமாக இருந்தது. வானிலை முன்னறிவிப்பு பீட்ரூட், கோவா, கறிமிளகாய், நோல்-கோல், லீக்ஸ் மற்றும் சிறகு அவரை மற்றும் தும்பா ஆகியவற்றைத் தவிர அனைத்து குறைந்த நாட்டு மரக்கறிகளையும் தீர்மானிக்கிறது. புதிய சந்தை முயற்சிகள் மற்றும் தொழில்முனைவோர் தகவல் ஆகியன அனைத்து மேல்நாட்டு மற்றும் கீழ்நாட்டு மரக்கறி உற்பத்திக்கு தீர்க்கமானதாக இருந்தன. போஞ்சி, கோவா மற்றும் லீக்ஸ் ஆகியவற்றின் தேர்வு மற்ற மரக்கறிப் பயிர்களின் தேர்வில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. பூசணி, பாகற்காய், வெள்ளரி, வெண்டைக்காய், பீர்க்கங்காய், பயிற்றங்காய் மற்றும் கத்திரிக்காய் ஆகியவற்றை தேர்ந்தெடுப்பதற்கு சந்தை விலை எதிர்வுகூறல் ஒரு கரிசனையாக விளங்குகிறது. பாகற்காய், பீர்க்கங்காய், பயிற்றங்காய், கத்தரிக்காய் உற்பத்தியாளர்கள் சந்தையின் தேவைக்கேற்ப முடிவெடுக்கின்றனர். போஞ்சி, பீட்ரூட், கோவா, கறிமிளகாய், கரட், லீக்ஸ் மற்றும் சிறகு அவரை மற்றும் தும்பா ஆகியவற்றைத் தவிர்த்து அனைத்து கீழ்நாட்டு மரக்கறி கமக்காரர்கள் பயிரிடுவதற்கு விதை கிடைப்பது ஒரு முக்கிய நிர்ணயக்கூறாக இருந்தது. பீட், கரட் மற்றும் முள்ளங்கி ஆகியவற்றைத் தேர்ந்தெடுப்பதற்கு சந்தையில் உரத்தின் இருப்பு ஒரு நிர்ணயக்கூறாக விளங்காத அதே சமயம் பாகற்காய், வெண்டை, பீர்க்கு மற்றும் கெக்கிரி உற்பத்தியாளர்கள் முக்கியமானதாகக் கருதுகின்றனர். நோல்-கோல், லீக்ஸ் மற்றும் முள்ளங்கி உற்பத்தியாளர்கள் பாவற்காய், பயிற்றங்காய் மற்றும் தக்காளி உற்பத்தியாளர்களைப் போல பூச்சிக்கொல்லிகளின் கிட்டுந்தன்மையைக் கருத்தில் கொள்ளவில்லை. போஞ்சி, கோவா, கறிமிளகாய், நோல்-கோல், லீக்ஸ், புடலங்காய், பீர்க்கு, கெக்கிரி மற்றும் தக்காளி போன்ற பெரும்பாலான பயிர் உற்பத்தியாளர்கள் இந்த பயிர்களைப் பயிரிடுவதற்கு உற்பத்திச் செலவை நிர்ணயிப்பதாகக் கருதுகின்றனர். முறைசாரா கடன் கிடைப்பது அனைத்து மேல்நாட்டு மரக்கறிச் செய்கையை ஊக்குவித்த அதே சமயம் பாகற்காய், பயிற்றங்காய் ஆகியன முறையான கடன் கிடைப்பதை விரும்புகிறது. போஞ்சி, பீட்ரூட், கோவா, கறிமிளகாய், கரட், லீக்ஸ், பூசணி, வெள்ளரி, வெண்டைக்காய், கத்தரி, பீர்க்கு, பயிற்றங்காய், தக்காளி மற்றும் கத்தரிக்காய் ஆகியவற்றைத் தேர்ந்தெடுப்பதில் நீரின் இருப்பு மற்றும் அணுகல் ஆகியவை முக்கியமானவையாகும். அனைத்து மேல்நாட்டு மரக்கறிகள் மற்றும் கீழ்நாட்டில் உள்ள பூசணி, வெண்டைக்காய் மற்றும் தக்காளி உற்பத்தியாளர்களுக்கு தொழிலாளர்களின் இருப்பு ஒரு முக்கிய நிர்ணயக்கூறாக இருந்தது. அனைத்து மலையக மரக்கறிகளையும் உற்பத்தி செய்வதையும், பூசணி, வெள்ளரி, பாகற்காய், வெண்டைக்காய், கத்தரி, பீர்க்கு, கெக்கிரி, தும்பை மற்றும் கத்தரிக்காய் போன்றவற்றை கீழ்நாட்டில் உற்பத்தி செய்வதையும சொந்தப் பணத்தின் இருப்பு ஊக்குவிக்கிறது. கடந்த பருவத்தின் சந்தை விலையானது போஞ்சி, பீட்ரூட், கோவா, கரட், லீக்ஸ், பூசணி, வெள்ளரிக்காய், வெண்டைக்காய், கத்தரிக்காய், தக்காளி மற்றும் கத்திரிக்காய் போன்றவற்றை செய்கைக்கு தேர்வு செய்தது. இதேபோல், போஞ்சி, பீட்ரூட், கோவா, கரட், லீக்ஸ், முள்ளங்கி, பூசணி, வெள்ளரி, கத்திரிக்காய், பயற்றங்காய், கெக்கிரி மற்றும் தக்காளி, கறிமிளகாய், கரட், லீக்ஸ் மற்றும் முள்ளங்கி உற்பத்தியாளர்கள் மற்றும் சிறகு அவரை தவிர அனைத்து கீழ்நாட்டு மரக்கறி உற்பத்தியாளர்களுக்கும் சந்தைப்படுத்தக்கூடிய திறன் உள்ளது. தேர்வுக்கான ஒரு தீர்மானமாக செலவாக பீட்ரூட், புடலங்காய், சிறகு அவரை, கெக்கிரி மற்றும் தும்பை ஆகியன தவிர அனைத்துப் பயிர்களுக்கும் விளைச்சல் ஒரு முக்கிய காரணியாக உள்ளது.

**பரிந்துரைகள்**

தொடர்புடைய தகவல்களை அணுகுதல் மற்றும் பெறுதல் ஆகியன மீதான மரக்கறி கமக்காரர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இணையத்திற்கும் மற்றும் பிரயோகங்களுக்கும் போதுமான அணுகல் இல்லாததால், தகவல்களைப் பகிர்வதற்காக நடமாடும் ஹொட்லைன்களை விளம்பரப்படுத்துவது பரிந்துரைக்கப்படுகிறது. மூன்றாம் தரப்பினரின் ஊடாக மேலிருந்து கீழாக தகவல் மாற்றும் முறையானது, வெளிக்கள அலுவலர்களுடன் வலுவான வலையமைப்பை உருவாக்குவதற்கும், முடிவெடுப்பதற்கான ஆதரவு தொடர்பான புதுப்பிக்கப்பட்ட தகவல்களிலிருந்து அவர்களை வளப்படுத்துவதற்கும் தனிப்பட்ட அடிப்படையில் இல்லாமல் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். தேர்ந்தெடுக்கப்பட்ட மரக்கறி விதைகளைக் குறைத்தல் அல்லது அகற்றுதல் மற்றும் மரக்கறி கமக்காரர்களுக்கு உர மானியம் வழங்குதல் பரிந்துரைக்கப்படுகிறது. DECக்கு அருகில் சந்தைத் தகவலைப் பரப்புவதற்கான நிலையம் நிறுவப்பட வேண்டும். ஒவ்வொரு வலய அளவிலும் ஒரு உற்பத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டு, மரக்கறிகளின் விநியோகத்தை உறுதிப்படுத்த வேண்டும். சந்தை விலை

ஏற்ற இறக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை வரவேற்கப்படுகிறது. கமக்காரர்களின் கூட்டுச் சந்தைப்படுத்தல் உத்தி பரிந்துரைக்கப்படுகிறது. இலங்கையில் உள்ள அனைத்து அர்ப்பணிக்கப்பட்ட பொருளாதார நிலையங்களும் கமத்தொழில் அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்பட வேண்டும். பயிர்களின் விளைச்சல் ஒரு மரக்கறியை வளர்ப்பதற்குத் தேர்ந்தெடுக்கும் மிக முக்கியமான தீர்மானமாகும். எனவே, விதைப் பொதியில் சாத்தியமான விளைச்சல் தகவலை அச்சிடுவது பரிந்துரைக்கப்படுகிறது. விதை விற்பனை நிலையங்களில் இருந்து பல்வேறு பயிர்களில் பூச்சி மற்றும் நோய் தாக்குதல் பற்றிய தகவல் பரிந்துரைக்கப்படுகிறது. 80% கமக்காரர்கள் பயிர்களின் விலைத் தகவலை முடிவெடுப்பதற்காகப் பயன்படுத்துவதால், முன்னறிவிப்பு விலைகள் மற்றும் மரக்கறி கமக்காரர்கள் மத்தியில் உற்பத்திச் செலவு ஆகியவற்றைப் பொது ஊடகங்கள் மூலம் பரப்புவது பரிந்துரைக்கப்படுகிறது.

### 02. இலங்கையில் நெல்/அரிசி பெறுமதிச் சங்கிலியின் ஒரு பகுப்பாய்வு: பொலன்னறுவை, பிரதான அரிசி அரைக்கும் வலயத்தின் ஒரு விடயம் 2019/20

**ஆய்வுக் குழாம்:**

| | | |
|---|---|---|
| திரு. டபிள்யூ.எ.என். விஜேசூரிய | - | ஒருங்கிணைப்பாளர் |
| திரு.துமிந்த பிரியதர்ஷன | - | இணை-ஆராய்ச்சியாளர் |
| திரு.விராஜித் குருப்பு | - | இணை-ஆராய்ச்சியாளர் |

**நிதிப்படுத்தல் மூலம்:** ஒன்றிணைந்த நிதியம்

**நோக்கெல்லை மற்றும் குறிக்கோள்கள்:**

இலங்கையில் அரிசி மிக முக்கியமான பயிராகும். ஏனெனில் நாட்டின் பெரும்பான்மையான கமக்காரர்கள் அரிசி கமக்காரர்களாக உள்ளனர். அதே நேரத்தில் நாட்டின் அனைத்து குடிமக்களும் அரிசி நுகர்வோர்களாக உள்ளனர், எனவே, அரிசித் துறையானது அரசாங்கத்தின் அதிக கவனத்தைப் பெறுகிறது. சில சமயங்களில் நாட்டில் அரசியல் ஸ்திரமற்ற தன்மையை உருவாக்குவதால் நெல்/அரிசித் தொழில் இப்போது ஒரு முக்கியமான பிரச்சினையாக மாறியுள்ளது. தற்போதைய அரசாங்கம் நெல்லை கிராமப்புற மக்களின் கண்ணியத்தின் அடையாளமாக கருதுகிறது. இந்த ஆய்வின் பிரதான பகுதியான பொலன்னறுவை மாவட்டம் 160 வணிக அரிசி ஆலைகளைக் கொண்ட நாட்டிலேயே மிகப்பெரிய அரிசி பதப்படுத்தும் பிரதேசமாகும். நாளொன்றுக்கு நெல் அரைக்கும் அளவின் அடிப்படையில் 19% ஆலைகள் வகையைச் சேர்ந்தவை, 20 மெட்ரிக் தொன்/நாள் விட அதிகமானவை, 34% 8-20 மெட்ரிக் தொன்/நாள் அரைக்கும் திறன் கொண்டவை. மேலும் பொலன்னறுவை நாட்டில் நெல் உற்பத்தி செய்யும் பிரதான பிரதேசங்களில் ஒன்றாகும். இம்மாவட்டத்தில் உள்ள நெல் கமக்காரர்கள் நாட்டிலுள்ள மொத்த நெல் உற்பத்தியில் 17%ஐ உற்பத்தி செய்கின்றனர். பல்-கட்ட மாதிரி முறையின் மீதான அடிப்படையில், கமக்காரர் அளவீட்டுக்காக மெதிரிகிரிய மற்றும் திம்புலாகல நெல் உற்பத்தி செய்யும் DS பிரிவுகளில் உள்ள பங்குதாரர்கள் அதாவது நெல் சேகரிப்பாளர்கள், அரிசி ஆலையாலர்கள், உப-உற்பத்திச் சேகரிப்பாளர்கள், தீவன உற்பத்தியாளர்கள் மற்றும் அரிசி வியாபாரிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

நாட்டின் மிகப்பெரிய அரைக்கும் வலயமான பொலன்னறுவை மாவட்டத்தில் நெல்/அரிசி பெறுமதிச் சங்கிலியின் விரிவான பெறுமதிச் சங்கிலிப் பகுப்பாய்வை (VCA) மேற்கொள்வதே இந்த ஆய்வின் ஒட்டுமொத்த நோக்கமாகும். நெல்/அரிசி மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்களின் விநியோகச் சங்கிலியின் தற்போதைய நடைமுறைகளை ஆராய்வது, மொத்த விளிம்புகளை மதிப்பிடுவது, VC முழுவதும் உள்ள முக்கிய மதிப்பு சங்கிலி செயற்பாட்டாளர்களின் பலம், பலவீனங்கள், வாய்ப்புக்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் ஆகியவற்றைக் கண்டறிவது மற்றும் தேவையான முக்கிய கொள்கை முன்முயற்சிகளைக் கண்டறிவது ஆகியவை குறிப்பிட்ட நோக்கங்களாகும்.

**ஆய்வின் முடிவுகள்**

பொதுவாக, பொலன்னறுவை மாவட்டத்தில் பிரதான நீர்ப்பாசனத்தின் கீழ் நெல்லின் சராசரி விளைச்சல், முழு நாட்டிலும் உள்ள பிரதான நீர்ப்பாசனத்தின் சாதாரண சராசரி விளைச்சலை விட

பெரும்பாலும் 6%-8% அதிகமாகும் என்பதுடன், குறிப்பாக மெதிரிகிரிய மற்றும் திம்புலாகல சராசரி விளைச்சல் பொலன்னறுவை மாவட்டத்தின் ஒட்டுமொத்த சராசரியை விட அதிகமான தொகையைப் பதிவு செய்கிறது. பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் இந்த நெல் உற்பத்தி செய்யும் பகுதிகளில் சராசரி விளைச்சல் 89- 138 புசல்/ஏக்கர் வரை இருக்கும் என்று ஆய்வு காட்டுகிறது. 2019ஆம் ஆண்டில், இந்தப் பகுதிகளில் ஒரு கிலோ நெல்லின் சராசரி உற்பத்திச் செலவு அண்ணளவாக ரூ.24.50ஆக இருந்த அதே வேளை ஒரு கிலோ தரமான நெல்லுக்கான பண்ணை விலை ரூ.48.00 முதல் 52.00 வரை இருந்ததுடன், 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது இது 25%ஆல் அதிகரித்துள்ளது. 2019/20ஆம் ஆண்டு பெரும்போகத்தில் இருந்து நெல்லின் உத்தரவாத விலையை கிலோவுக்கு 50.00 ரூபாய் வரை அதிகரிக்க முடிவெடுத்ததன் காரணமாக இந்த உயர்வு ஏற்பட்டது.

அளவீடு செய்யப்பட்ட உற்பத்திப் பகுதிகளில் மிகவும் பிரபலமான நெல்/அரிசி சந்தைப்படுத்தல் வழிமுறை வருமாறு

கமக்காரர் → சேகரிப்பாளர் → அரிசி ஆலையாளர் → மொத்த விற்பனையாளர் → சில்லறை விற்பனையாளர் → நுகர்வோர்

சில நேரங்களில் சேகரிப்பாளர்களுக்கும், ஆலையாளர்களுக்கும் இடையில் தரகர்கள் செயல்படுகிறார்கள். நெல் கையிருப்பு குறைவாக உள்ள காலத்தில் தரகர்களின் வகிபங்கு முக்கியமாகிறது.

பண்ணை வாயில் மட்டத்தில் கமக்காரர்களினால் உற்பத்திச் செலவுக்கு மதிப்பு கூட்டல் சுமார் 10% சேர்கிறது, இது நியம தரத்திற்கு (14% ஈரப்பதம்) நெல் உலர்த்துவதற்கான செலவாகும். மதிப்பு கூட்டுதலில் கமக்காரர்கள் எதிர்கொள்ளும் ஒரு பெரிய பிரச்சனை நெல்லை உலர்த்துவதற்கு சரியான வழி இல்லாததாகும். தற்போது, நெல் காய்வதற்கு கார்பெட் வீதியின் ஒருபுறத்தைப் பயன்படுத்துகின்றனர்.

நெல் இருப்புகளைச் சுத்தம் செய்வதற்கும், அரிசியை சேமிப்பதற்கும் மற்றும் பொதிப்படுத்துவதற்கும் மற்றும் முக்கிய நகரங்களுக்கு அரிசியைக் கொண்டு செல்வதற்கும் மதிப்பு சங்கிலியில் அதிக சதவீதத்தை ஆலையாளர்கள் சேர்க்கின்றனர் என்பதுடன், இது அரிசி உற்பத்திச் செலவில் 44% ஆகும். மாவட்டத்தில் சுமார் 100-110 அரிசி ஆலைகள் ஆண்டுதோறும் 869,400 மெட்ரிக் தொன் மொத்த அரைக்கும் திறன் கொண்டவையாகும். ஒரு சாதாரண உற்பத்தி ஆண்டில் மாவட்டத்தில் சந்தைப்படுத்தக்கூடிய உபரியான நெல் 471,000 மெட்ரிக் தொன்கள் என்பதுடன், பொலன்னறுவை மாவட்டம் முழுவதும் வருடாந்தம் 50,000 கமக்காரர்கள் இந்த அளவை சந்தைக்கு உற்பத்தி செய்கின்றனர். பொலன்னறுவையில் 397,000 மெட்ரிக் தொன் பாரிய அளவிலான ஆலைகளின் மீதி அளவு, முக்கியமாக அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் இருந்து பெறப்படுகிறது.

அரிசி ஆலைகள் ஆண்டுதோறும் 46,000 மெட்ரிக் தொன்கள் அரிசித் தவிடு மற்றும் கிட்டத்தட்ட 15,000 மெட்ரிக் தொன்கள் அரிசி மினுக்கி ஆகியவற்றை அரிசி உற்பத்தியின் முக்கிய துணை தயாரிப்புகளாக உற்பத்தி செய்கின்றன. பொலன்னறுவையில் உள்ள "லக்ச உயன" கைத்தொழில் பூங்காவில் அரிசி எண்ணெயை உற்பத்தி செய்யும் இந்திய பதப்படுத்தும் நிறுவனமான RICE-O நிறுவனத்திற்கு அரிசி தவிடு வழங்கப்படுகிறது. வடமேல் மாகாணத்தில் பிங்கிரிய, குளியாப்பிட்டிய மற்றும் உடுபத்தாவ ஆகிய இடங்களில் உள்ள கால்நடை தீவன உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்கு அரிசி மினுக்கி வழங்கப்படுகிறது. கால்நடைத் தீவன உற்பத்தியாளர்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சனை விநியோகஸ்தர்களால் அரிசி மினுக்கியின் கலப்படம் ஆகும்.

அரிசி ஆலையில் நெல் அவிப்பதற்கும், உலர்த்துவதற்கும் உயிர் நீராவியை உற்பத்தி செய்ய கொதிகலன்களில் உமி முக்கியமாகப் பயன்படுத்தப்படுகிறது. அரிசி ஆலைகளில் நெல் உமியை நேரடியாக எரிப்பதன் மூலம் கொதிகலன் இயக்கப்படுகிறது. திருகோணமலை மற்றும் புத்தளம் ஆகியவற்றில் உள்ள சீமெந்து தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருளாக மேன்மிகையானது

வழங்கப்படுகிறது. பொலன்னறுவையில் உள்ள அரிசி ஆலைகளுடன் இணைக்கப்பட்ட அரிசித் தவிடு மற்றும் மினுக்கி மற்றும் உமி ஆகியவற்றைச் சேகரிக்க சுமார் 20 சேகரிப்பாளர்கள் உள்ளனர்.

2011ஆம் ஆண்டில், ஒரு கிராமத்திற்கு மூன்று நெல் சேகரிக்கும் நிலையங்கள் இருந்ததாகவும், தற்போது கிராம மட்டத்தில் இந்தச் சேகரிப்பு நிலையங்கள் நெல் கொள்வனவு செய்வதற்கும், கமத்தொழில் இரசாயனங்கள் மற்றும் உரங்கள், விதைகள் மற்றும் சில நேரங்களில் வன்பொருள் பொருட்கள் ஆகியவற்றை விற்பனை செய்வதற்கும் ஒரு பிரதேச செயலகத்திற்கு ஏறக்குறைய 20 பல்-நோக்கு கொள்முதல் மற்றும் விற்பனை நிலையங்களுக்கு வழிவகுப்பதைக் குறைத்துள்ளது.

மேலும் 2011இல் ஆய்வின்படி, மாவட்டத்தில் 160 அரிசி ஆலைகள் இருந்தன. ஆனால், இப்போது அது கிட்டத்தட்ட 110ஆக குறைந்துள்ளது, ஏனெனில் பல சிறிய அளவிலான அரிசி ஆலைகள் பெரிய அளவிலான அரிசி ஆலைகளின் திறனை அதிகரிக்க தொழில்துறையை வகுத்துள்ளன. நடுத்தர அளவிலான அரிசி ஆலைகளும் அவற்றின் திறனை அதிகரித்துள்ளன.

**நெல்/அரிசி மதிப்பு சங்கிலி மேம்பாட்டிற்கான கொள்கைப் பரிந்துரைகள்**

**பண்ணை நிலை**

மெதிரிகிரிய போன்ற பிரதேசங்களிலும் மற்றும் ஏனைய பிரதேசங்களிலும் அதிக விளைச்சல் பெறும் கமக்காரர்களின் சராசரி விளைச்சலை அதிகரிப்பதற்கு வசதியாக அவர்களின் கமத்தொழில் நடைமுறைகளைப் பிரதியெடுப்பதற்கு செயலுபாயத் திட்டங்களை வடிவமைத்தல். கமக்காரர்கள் தங்கள் அறுவடைக்கு மதிப்புக் கூட்டுவதற்கு நெல் உலர்த்துவதற்கு உள்கட்டமைப்பு வசதிகள் தேவையாகும். இந்த நோக்கத்திற்காக நிலையான கொங்கிரீட் கதிரடிக்கும் தளங்கள் தேவையாகும். மதிப்புச் சங்கிலியின் செயல்திறனை அதிகரிக்க, தரமான கதிரடிப்புத் தளங்களை வழங்க, தனியார் துறையை செல்வாக்கு செலுத்தும் வகையில், அரசாங்க மற்றும் தனியார் மட்டத்தில் திட்டங்கள் வடிவமைக்கப்பட வேண்டும்.

மேலும், கமக்காரர்கள் தங்களுடைய இருப்புகளைப் பற்றிய தகவல்களை டிஜிட்டல் தளமாக ஊட்டுவதற்கான வசதிகள் வழங்கப்பட வேண்டும். இதன் மூலம் வாங்குபவர்களை இணைக்கும் திட்டத்தை செயல்படுத்தலாம்.

**சேகரிப்பாளர் மட்டத்தில்**

நெல் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள வியாபாரிகள் நெல்லை உலர்த்தும் பணியில் பங்களிக்கலாம். அரிசி மதிப்பு கூட்டுதலுக்காக சிறிய உலர்த்திகள் மற்றும் கொங்கிரீட் தளங்கள் ஆகியவற்றில் முதலீடு செய்ய வர்த்தகர்களை ஊக்குவிக்கும் நிகழ்ச்சிகளை நடத்துவது பயனுள்ளது.

**அரிசி ஆலையாளர் மட்டத்தில்**

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஆலையாளர்கள் தங்கள் அரைக்கும் தொழிலை மேம்படுத்த நிதி நிறுவனங்களுடன் நல்ல உறவைப் பேணுதல் மற்றும் புத்தாக்கம் மூலம் வெற்றிபெற ஊக்குவிக்கப்பட வேண்டும். அதேபோன்று, குறிப்பாக கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களில் அதிக மேன்மிகையிலான அரிசி உற்பத்தி செய்யும் கிராமப்புறங்களில் நவீன தானியங்கி தனியார் துறை ஆலைகளை நிறுவ நடுத்தர அளவிலான ஆலைகளை அரசாங்கம் ஊக்குவிக்க வேண்டும் என்பதுடன், பதவிய, கெபத்திகொல்லாவ, அம்பாறை, லாகுகல, பொத்துவில், எலெஹெர, விளச்சிய, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மட்டக்களப்பு போன்ற கிராமிய உற்பத்திப் பிரதேசங்களில் அரிசி அடிப்படையிலான மற்றும் உப உற்பத்தி சார்ந்த கைத்தொழில்களை நிறுவுவதற்கு தனியார் துறையை ஊக்குவிக்க வேண்டும்.

ஈட்டப்பட்ட அனுபவங்களின் அடிப்படையில், ஹெ.கொ.க.ஆ.ப.நி., IPHT, PMB மற்றும் நிதி அமைச்சு ஆகியவற்றின் ஈடுபாட்டுடன் ஒரு கூட்டு ஆய்வாகவிரிவான மக்கள்தொகை கணக்கெடுப்புக்கும் மற்றும் தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலான தரவுத்தளங்களின் வழக்கமான புதுப்பித்தலுக்குமான வலுவான தேவை இருப்பதால், அரிசி ஆலைகள் மற்றும் திறன்,

இயந்திரங்கள், சேமிப்புக் கிடங்குகள், அரிசி வகைகள் உள்ளிட்ட பங்குதாரர்கள் மீது விரிவான கணக்கெடுப்பை மேற்கொள்ளுமாறு ஆய்வு பரிந்துரைக்கிறது.

உள்ளூர் சமூகத்தினரிடையே அரிசி எண்ணெயைப் பிரபலப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளையும் மற்றும் செயலுபாயங்களையும் அடையாளங்காண்பதற்கும் அத்துடன் இந்தியாவிற்கு பதப்படுத்தப்பட்ட அரிசித் தவிடு ஏற்றுமதி செய்யப்படும் அளவை ஆய்வதற்கும் தற்போது இரண்டு நிறுவனங்களால் மட்டுமே கையாளப்படும் அரிசி எண்ணெய் தொழில் குறித்து விரிவான ஆய்வு அவசியமாகும்.

மேலும், தற்சமயம் முழுமையாகப் பயன்படுத்தப்படாத விதத்தில் கைத்தொழிலின் துணைப் பொருளாக அரிசி உமி சாம்பல் (RHA) அதிக அளவில் உள்ளதா என்பதை ஆய்வதற்கும் அத்துடன் RHAஇலிருந்து சிலிக்காவை உருவாக்கும் திறனை பரீட்சிப்பதற்கும் அவசிம் ஒன்றுள்ளது.

அரிசியிலிருந்து மதிப்பு கூட்டப்பட்ட உணவுப் பொருட்களை (உதாரணம்: அரிசி கொத்து, பிஸ்கட், பாண்) தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள புதுமையான ஆலைகளுக்கு நிதிசார் ஆதரவு, தொழில்நுட்பம், சந்தை மற்றும் ஏற்றுமதி உதவிகள் ஆகியவற்றை வழங்குவதன் மூலம் ஊக்கப்படுத்த வேண்டிய தேவை வலுவாக உள்ளது.

இந்த ஆய்வின் இறுதி அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

### 03. இடைப்பட்ட பருவத்தில் வேறு களப் பயிர்களை (OFCs) பயிரிடுவதில் உள்ள சிக்கல்கள்

**ஆராய்ச்சி குழாம்:**

| | | |
|---|---|---|
| கலாநிதி என்.பி.ஜி. சமந்த | - | ஒருங்கிணைப்பாளர் |
| கலாநிதி இ.எ.சி. பிரியங்கர | - | இணை-ஆராய்ச்சியாளர் |

**நிதிப்படுத்தல் மூலம்:** ஒன்றிணைந்த நிதியம்

**நோக்கெல்லை மற்றும் குறிக்கோள்கள்:**

வேறு உணவுப் பயிர்களின் தேசிய உற்பத்தி கடந்த நான்கு தசாப்தங்களாக வெகுவாகக் குறைந்துள்ளது. இதன் விளைவாக, நாடு வேறு உணவுப் பயிர்களின் தேவையை பூர்த்தி செய்ய இறக்குமதியை நம்பியிருக்க வேண்டியிருந்தது. வேறு உணவுப் பயிர்களின் இறக்குமதிக் கட்டணம் ரூ. 2018இல் ரூ. 41,734 மில்லியனாகும். இது அந்நியச் செலாவணி வெளியேறுவதற்கும், நாட்டின் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து நிலை குறைவதற்கும் வழிவகுக்கிறது. எனவே, வேறு உணவுப் பயிர்களின் உற்பத்தி அதிகரிப்பு தற்போது பெரும் கவலையாக உள்ளது. கமத்தொழில் திணைக்களத்தால் மூன்றாம் பருவ செய்கைக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள மற்றும் வேறு உணவுப் பயிர் உற்பத்தியை அதிகரிப்பதற்கான விருப்பமாக பல கொள்கை ஆவணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், ஏனைய பல உணவுப் பயிர்களின் உற்பத்தி இலக்குகளை இலங்கையால் அடைய முடியவில்லை. 2019 ஓகஸ்டில் நடைபெற்ற சபைக் கூட்டத்தில், இலங்கையின் இடைக்காலப் பருவத்தில் வேறு உணவுப் பயிர் செய்கையை விரிவுபடுத்துவதில் தடையாக உள்ள சிக்கல்களைக் கண்டறிவதற்கு ஹெ.கொ.க.ஆ.ப.நி.இன் பணிப்பாளர் சபையின் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார். இதன் விளைவாக, 2019 நொவம்பரில் ஹெ.கொ.க.ஆ.ப.நி. இந்த ஆய்வைத் தொடங்கியது.

**ஆய்வின் நோக்கம்**

மூன்றாம் பருவத்தில் வேறு உணவுப் பயிர்களின் விரிவாக்கத்திற்குத் தடையாக உள்ள சிக்கல்களை ஆராய்வதே ஆய்வின் முக்கிய நோக்கமாகும்.

முதன்மை நோக்கத்தை அடைவதற்கு, பின்வரும் நோக்கங்கள் குறிப்பாகக் கருதப்படுகின்றன:

1. மூன்றாம் பருவத்தில் வேறு உணவுப் பயிர்களின் செய்கையில் கமக்காரர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளையும் மற்றும் தடைகளையும் அடையாங்காணுதல்.

2. மூன்றாம் பருவத்தில் வேறு உணவுப் பயிர்களைப் பயிரிடுவதில் உள்ள பிரச்சனைகளையும் மற்றும் தடைகளையும் சமாளிப்பதற்கான பரிந்துரைகளை வழங்குதல்.

மூன்றாம் பருவத்தில் வேறு உணவுப் பயிர்களின் செய்கைக்கான DoA பரிந்துரைகளின் அடிப்படையில் ஹம்பாந்தோட்டை மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்கள் ஆய்வுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. முதன்மை மற்றும் இரண்டாம் நிலை தரவு இரண்டும் ஆய்வுக்காக சேகரிக்கப்பட்டுள்ளன. இரண்டாம் நிலை தரவுகளின் மூலங்களாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் திணைக்களம், கமத்தொழில் திணைக்களம், மாவட்ட கமத்தொழில் அலுவலகங்கள் மற்றும் கமநல சேவைகள் நிலையப் பதிவுகள் ஆகியன விளங்குகின்றன.

முதலாவது குறிப்பிட்ட நோக்கத்தை அடைய கமக்காரர்களிடமிருந்து முதன்மை தரவையும் மற்றும் தகவல்களையும் சேகரிப்பதற்கு, ஹம்பாந்தோட்டை மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 150 கமக்காரர்களின் பங்குபற்றுதலுடன் பதினைந்து கவனம் செலுத்தும் குழுக் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

**முடிவுகள்**

1. ஒன்றோடொன்று தொடர்புடைய பருவத்தின் காலம் 60-70 நாட்களாகும். எனவே, குறுகிய காலத்திற்கு ஏற்ற இடைப்பட்ட பருவத்தில் பயிரிடுவதற்கு பெரும்பாலான கமக்காரர்களால் பாசிப்பயறு தேர்ந்தெடுக்கப்பட்டது.

2. இடைநிலைப் பருவத்தின் தொடக்கத்தில் தரமான விதையைக் கண்டுபிடிக்க இயலாமை பெரும்பாலான ஆய்வு இடங்களில் ஒரு பெரிய பிரச்சனையாக உள்ளது.

3. இடைநிலைப் பருவத்தின் தொடக்கத்தில் தரமான விதையைக் கண்டுபிடிக்க இயலாமை பெரும்பாலான ஆய்வு அமைவிடங்களில் ஒரு பெரிய பிரச்சனையாக உள்ளது. MI5 மற்றும் MI6 விநியோகம் செய்யப்பட்டதால், பரிந்துரைக்கப்பட்ட உள்ளூர் விதை வகைகள் போதுமானதாக இல்லை என்பதால், கமக்காரர்கள் இறக்குமதி செய்யப்பட்ட பாசிப்பயறுகளை நுகர்வு நோக்கங்களுக்காக விதைகளாகப் பயன்படுத்துகின்றனர்.

4. கால்நடைகள் மற்றும் காட்டு விலங்குகள் சேதம் மற்றொரு கரிசனைக்குரிய விடயமாகும். முக்கிய செய்கைப் பருவங்களுக்கு இடையேயான காலம் பாரம்பரியமாக கால்நடைகளுக்கு இலவச புல்வெளிக்காக ஒதுக்கப்படுவதனால், நெல் வயல்களில் இடைப்பட்ட காலத்தில் வேறு உணவுப் பயிர்களின் செய்கையானது, குறிப்பாக ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில், பால் பண்ணையாளர்களுக்கும் வேறு உணவுப் பயிர் கமக்காரர்களுக்கும் இடையில் மோதலை உருவாக்கியுள்ளது. இடைப்பட்ட பருவத்தில் வேறு உணவுப் பயிர்ச் செய்கையில் இருந்து கமக்காரர்கள் விலகுவதற்கு இது ஒரு முக்கிய காரணமாகும்.

5. முறையான சந்தைப்படுத்தல் பொறிமுறையின்மை, அறுவடையின் போது குறைந்த சந்தை விலை, வாங்குவோர் இல்லாமை மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட விதைகளுடன் ஒப்பிடும் போது MI5 மற்றும் MI6 வகைகளுக்கான சந்தை மதிப்பு குறைவாக இருப்பது ஆகியன சந்தைப்படுத்தல் பிரச்சினைகளாக அடையாளம் காணப்பட்டது.

6. பாசிப்பயற்றின் அறுவடைக்கு அதிக உழைப்பு தேவையாகும். தொழிலாளர் பற்றாக்குறை மற்றும் அதிக ஊதிய விகிதம் ஆகியவை பாசிப்பயற்றின் உற்பத்திச் செலவை அதிகரிக்க காரணமாகின்றன.

7. மூன்றாம் பருவ செய்கையை ஊக்குவிக்கும் பொறுப்பில் உள்ள நிறுவனங்களுக்கிடையே

ஒருங்கிணைப்பு இல்லாமையும் ஒரு பிரச்சினையாக உள்ளது.

**பரிந்துரைகள்:**

1. செய்கை பருவத்தின் தொடக்கத்தில் தரமான விதைகளை வழங்குவதற்கு முறையான பொறிமுறை ஏற்படுத்தப்பட வேண்டும்.

2. இலவச கால்நடை வளர்ப்பு மூலம் பயிர் சேதத்தை குறைக்க, புல் நிலங்களை வழங்குவதில் கவனம் செலுத்த வேண்டும். பயிர் சேதத்தை ஈடுகட்ட முறையான திட்டம் வகுக்கப்பட வேண்டும்.

3. கமநல சேவை நிலையங்கள், நீர்ப்பாசனத் திணைக்களம், நிர்வாக நிறுவனங்கள் போன்ற அரச நிறுவனங்கள் மத்தியில் சிறந்த ஒருங்கிணைப்பு ஏற்படுத்தப்படுவதுடன், மூன்றாம் பருவ பயிர்ச்செய்கைக்கு முன்னுரிமை வழங்கப்படவும் வேண்டும்.

4. சந்தைப்படுத்தல் சிக்கல்களைத் தீர்ப்பதற்காக கமக்காரர்களுக்கும் மற்றும் தனியார் துறை உணவு பதப்படுத்தும் நிறுவனங்களுக்கும் இடையே முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்

### 04. கமத்தொழில் சந்தை தகவல் சேவை (AMIS)

கமத்தொழில் சந்தை தகவல் சேவை (AMIS) என்பது விலைத் தரவை (மொத்த விற்பனை, சில்லறை விற்பனை மற்றும் பண்ணை விலை) சேகரிப்பதற்காக செயல்படுத்தப்படும் திட்டமாகும். இத்திட்டத்தின்படி, மொத்த விற்பனை விலைத் தரவுகள் முப்பத்து நான்கு (34) சந்தை இடங்களிலிருந்தும், சில்லறை விலைத் தரவுகள் நாற்பத்து மூன்று (43) சந்தை இடங்களிலிருந்தும் (புறக்கோட்டை, வெள்ளவத்தை, கிருலப்பன நுகேகொட, நாரஹேன்பிட்டி, தெமட்டகொட, தொட்டலங்க, கடவத்தை மற்றும் கிரிபத்கொட) சேகரிக்கப்படும். உற்பத்தியாளர் விலைகள் பத்தொன்பது (19) உற்பத்திப் பகுதிகளிலிருந்து சேகரிக்கப்படும். விலைத் தரவு சேகரிப்பில் ஈடுபட்டுள்ள பெரும்பாலான பணியாளர்கள் சமயாசமய ஆய்வாளர்கள் மற்றும் ஒவ்வொரு சந்தை இடத்திலும் சமயாசமய ஆய்வாளர்களின் இருப்பு இந்த சந்தை இடங்களிலிருந்து தரவு சேகரிப்பின் செயல்திறனைத் தீர்மானிக்கிறது. கூடுதலாக, எதிர்பாராத சூழ்நிலைகள், கொவிட் 19 போன்ற தொற்றுநோய் சூழ்நிலைகள் அல்லது வேறு ஏதேனும் பேரழிவு போன்றவை சரியான சந்தை விலை தரவு சேகரிப்பை பாதிக்கின்றது.

2020ஆம் ஆண்டில், ஜனவரி முதல் ஓகஸ்ட் இறுதி வரை, ஹெ.கொ.க.ஆ.ப.நி.ஆல் கிட்டத்தட்ட எல்லா சந்தை இடங்களிலிருந்தும் விலைத் தரவைச் சேகரிக்க முடிந்தது. 28 இடங்களில் 28 கள உத்தியோகத்தர்களும், கொழும்பு சந்தைகளில் இருந்து தகவல்களைச் சேகரிக்கும் 11 சமயாசமய ஆய்வாளர்களும் இருந்தனர். எவ்வாறாயினும், செப்டம்பர் 24இல் 28 சமயாசமய ஆய்வாளர்கள் அரசாங்கத்தின் பட்டதாரி ஆட்சேர்ப்பு திட்டத்தின் கீழ் அபிவிருத்தி அலுவலர்களாக அரசாங்கச் சேவையில் சேருவதற்காக ராஜினாமா செய்தனர். அக்டோபர் 2020இல், கொவிட் ஊரடங்கு காரணமாக குறுக்கீடுகள் இருந்தபோதிலும், 12 சமயாசமய ஆய்வாளர்களை ஹெ.கொ.க.ஆ.ப.நி. நியமித்தது. எனவே, 31 டிசம்பர் 2020 வரையிலான விலைத் தரவு 16 சமயாசமய ஆய்வாளர்களால் சேகரிக்கப்பட்டது. மேலும், இலங்கையில் உள்ள 7 பிரத்தியேக சந்தைகளில் இருந்து மரக்கறிகளின் தினசரி மொத்த விலைகளை வழங்கும் 6666 என்ற மொபிடெல் டயல் சேவை உள்ளது.

### 5. மக்காச்சோள மதிப்பு சங்கிலிப் பகுப்பாய்வு: தீவனம் மற்றும் உணவுக் கைத்தொழிலில் நிலை, கட்டுப்பாடுகள் மற்றும் வாய்ப்புக்கள்

**ஆராய்ச்சிக் குழாம்:**

ருவீனி விதானபத்திரன - ஒருங்கிணைப்பாளர்
ரோஷினி ரம்புக்வெல்ல - இணை-ஆராய்ச்சியாளர்

டபிள்யூ.எ.என். விஜேசூரிய - இணை-ஆராய்ச்சியாளர்
விராஜித் குருப்பு - இணை-ஆராய்ச்சியாளர்

**நிதிப்படுத்தல் மூலம்:** ஒன்றிணைந்த நிதியம்

**ஆய்வின் நோக்கெல்லை:**

வளர்ந்து வரும் காலநிலை மீ கீவனத் தொழிலுக்கு குறிப்பாக கோழித் துறைக்கு மக்காச்சோளம் அதன் முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது. மக்காச்சோளம் கோழித் துறைக்கான முலப்பொருள் உள்ளீடுகளில் அண்ணளவாக 60% அதும் மக்காச்சோள தொக்குறைக்க விகிக்கப்பட்டுள்ள வரியினாலும் மற்றும் உலக சந்தையில் விலை அதிகரிப்பினாலும் கற்போது மக்காச்சோளத்தின் விலைகள் உயர்ந்து வருகின்றன. மக்காச்சோளம் கோழி கீவனத்தின் முக்கிய முலப்பொருளாக இருப்பதால் கீவன விலையும் பல ஆண்டுகளாக அதிகரித்து வரும் போக்கைக் காட்டுகிறது. மக்காச்சோளத்தின் உள்ளூர் உற்பத்தி கணிசமான அளவு போதுமானதாக இல்லாததால் கோழித் கீவனத்தின் விலை உயர்வானதாகும். இலங்கையில் கோழித் தொழிலுக்கு நீண்ட காலமாக ஒரு நச்சரிக்கும் பிரச்சினையாக இருந்துவருகிறது என்பதை இது காட்டுகிறது. கோழி இறைச்சி மற்றும் முட்டை அதிய இரண்டின் உற்பத்திச் செலவில் கீவனச் செலவே பிரதிபலிக்கிய விலைக் கூறு என்பதால் கோழியினதும் மற்றும் முட்டை களினதும் உற்பத்திச் செலவை இந்தப் போக்குகள் தொடர்ந்து அதிகரிக்கின்றன. கோழித் கீவனத்தின் முலப்பொருளாகப் பயன்படுத்தப்படுவதற்கு மேலதிகமாக உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அயிக்க-கலப்புக் காளியங்கள் (கிரிபோஷ மற்றும் சமபோஷ) பொதுக்கார்ன்கள் மற்றும் வேகவைக்க சோளக் கூம்புகள் போன்ற சோளம் சார்ந்த உணவுப் பொருட்களின் நுகர்வு கடந்த சில ஆண்டுகளில் அதிகரித்துள்ளது. இதன் விளைவாக கடந்த காலங்களில் மக்காச்சோளத்திற்கான உள்ளூர் கேவை கணிசமாக அதிகரித்துள்ளது. இலங்கையின் மக்காச்சோளத் துறையின் உணவுப் பாதுகாப்பு, கீவனப் பாதுகாப்பு, போஷாக்கு பாதுகாப்பு அதியவற்றை உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் நாட்டிலுள்ள தமக்காரர்களுக்கு வருமானத்தை அதிகரிப்பதற்கும் பல முகவீட்டு வாய்ப்புகள் உள்ளன. எனவே உள்ளூர் மக்காச்சோள கைத்தொழிலை ஊக்குவிப்பதும் அதற்கு ன் உற்பத்தித்திறனை அதிகரிக்க பதிய முறைகளை அறிமுகப்படுத்துவதும் உள்ளூர் மக்காச்சோளக் கொள்கையும் மற்றும் கோழித் கொள்கையும் மேம்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் ஏன் எடுக்கப்படவில்லை என்ற கேள்வி இன்னுமே தொடர்கின்றது.

இச்சூழலைக் கருத்தில் கொண்டு மக்காச்சோள மதிப்புச் சங்கிலியில் இருக்கும் சவால்கள் வாய்ப்புகள் மற்றும் நடைமுறைப் பள்ளிகளின் முழுமையான பகுப்பாய்வு மதிப்புச் சங்கிலியில் விற்பனை முறை மக்காச்சோள சேமிப்பு, கடத்தல் மற்றும் பகுப்படுத்தும் வசதிகள் மற்றும் உள்ளீட்டு வழங்குநரிடமிருந்து நுகர்வோருக்கு மக்காச்சோள மதிப்புச் சங்கிலியை பகுப்பாய்வு செய்வதன் மூலம் மாவட்ட மதிப்பு மக்காச்சோள வர்த்தகத்தின் நிலை அதியவற்றை மதிப்பிடுவதற்கு இந்த ஆய்வு கிட்டத்தட்ட கு எனவே மக்காச்சோளத்தின் உற்பத்தியையும் மற்றும் பயன்பாட்டையும் பொருளாதார மேம்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு அதிக அளவில் தேவைப்படும் முயற்சிகள் குறித்து ஆய்வு வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

**நோக்கங்கள்**:

இந்த ஆய்வின் வட்டமொத்த நோக்கமானது மக்காச்சோளத்தின் மதிப்புச் சங்கிலிப் போட்டித்தன்மையை மேம்படுத்த பங்குதாரர்களால் வணிக மாதிரிகள் உருவாக்கலையீடு மற்றும் அங்கியச் செலவுணிப் பகுதிகளுக்கான பரிந்துரைகள் அதியவற்றை வழங்குவதற்காக மக்காச்சோளத்தின் விரிவான மதிப்புச் சங்கிலிப் பகுப்பாய்வை மேற்கொள்வதாகும்.

**குறிப்பிட்ட நோக்கங்கள்**

1. மக்காச்சோளத்தின் விநியோகச் சங்கிலி மற்றும் அதன் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களின் தற்போதைய நடைமுறைகளை ஆய்வு செய்தல்.

2. மதிப்புச் சங்கிலியைத் திட்டமிடுவதன் மூலம் விநியோகச் சங்கிலியில் வெவ்வேறு செயற்பாட்டாளர்களின் பொருளாதார செயல்திறனை (விளிம்புகள், செலவு, வருமானம் மற்றும் செயல்திறன்) பகுப்பாய்தல்.

3. மதிப்புச் சங்கிலியின் உற்பத்தித்திறனையும் மற்றும் போட்டித்தன்மையையும் மேம்படுத்த முக்கிய மதிப்புச் சங்கிலி செயற்பாட்டாளர்களின் பலம், பலவீனங்கள், வாய்ப்புக்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் ஆகியவறைப் பகுப்பாய்தல்.

4. முக்கிய கொள்கை முன்முயற்சிகளை அடையாளங்காண, நாட்டில் மக்காச்சோள மதிப்புச் சங்கிலியின் செயல்திறனை மேம்படுத்துவதும், தரமுயர்த்துவதும் அவசியமாகும்.

***தற்போதைய முன்னேற்றம்***

கமத்தொழில் பொருட்களின் மதிப்புச் சங்கிலிப் பகுப்பாய்வு தொடர்பான ஆய்வுகளின் இலக்கிய மதிப்பாய்வு நிறைவடைந்தது. மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம், கமத்தொழில் திணைக்களம், சுங்கத் திணைக்களம், மத்திய வங்கி ஆகியவற்றினால் வெளியிடப்பட்ட மற்றும் வெளியிடப்படாத அறிக்கைகள் மற்றும் இணையதளங்கள் ஆகியவற்றிலிருந்து மேசை மதிப்பாய்வு அத்துடன் ஆய்வின் மையமாக தொடர்புடைய ஆவணங்களின் தொகுப்பு ஆகியவற்றின் மூலம் இரண்டாம் நிலையிலான தரவு சேகரிப்பு மேற்கொள்ளப்பட்டது. ஆராய்ச்சி, பயிற்சிக் குழுவிடம் (RTC) இந்த முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டதுடன், நாட்டில் கொவிட்-19 நோய் பரவியதன் காரணமாக 10% பௌதீக முன்னேற்றம் மட்டுமே சாதிக்கப்பட்டது.

## 6. இலங்கையில் பெரிய வெங்காயத்தின் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல்: ஒரு மதிப்புச் சங்கிலிப் பகுப்பாய்வு

***ஆராய்ச்சிக் குழாம்:***

| | | |
|---|---|---|
| திருமதி ரோஷினி ரம்புக்வெல்ல | - | ஒருங்கிணைப்பாளர் |
| திருமதி ருவினி விதானபத்திரன | - | இணை-ஆராய்ச்சியாளர் |
| திருமதி துஷாரா தர்மவர்தன | - | இணை-ஆராய்ச்சியாளர் |

***நிதிப்படுத்தல் மூலம்:*** ஒன்றிணைந்த நிதியம்

***நோக்கெல்லை மற்றும் குறிக்கோள்கள்:***

அரசாங்கத்தின் இறக்குமதிக் கொள்கையின் அடிப்படையில் விலை நிர்ணயிக்கப்படும் பெரிய வெங்காயம் இலங்கையில் பெரிதும் விவாதிக்கப்படும் பொருளாக இருந்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் உள்ளூர் பெரிய வெங்காயம் சந்தைக்கு வரும்போது, உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு உதவவும், ஊக்குவிக்கவும், அத்துடன் பாதுகாக்கவும் பெரிய வெங்காய இறக்குமதி மீது இறக்குமதிக்கு வரி விதிப்பது அரசாங்கத்தின் முக்கிய கொள்கையாக உள்ளது. பெரிய வெங்காயத்தின் இறக்குமதிக்காக இலங்கை ஒவ்வொரு வருடமும் கணிசமான அளவு பணத்தை வெளியேற்றுவதால் (2019ஆம் ஆண்டில் ரூ. 15,156.00 மில்லியன்) பெரிய வெங்காயத்தின் உற்பத்தியில் தன்னிறைவு நிலையை அடைய அரசாங்கம் முயற்சிக்கிறது. இதேவேளை, அண்மைக்காலமாக இலங்கையில் பெரிய வெங்காய உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அதனால் நுகர்வோர்களும் பெரிய வெங்காயத்திற்கு அதிக விலையை செலுத்தி வருவதாகவும் அவதானிக்கப்பட்டுள்ளது. பெரிய வெங்காயச் செய்கையை பல வழிகளில் ஊக்குவிப்பது அரசாங்கத்தின் அக்கறையாக இருந்தாலும், இந்தத் துறையில் சில பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன. சமீப காலமாக பெரிய வெங்காயச் செய்கை, இதில் ஈடுபட்டுள்ள கமக்காரர்களின் எண்ணிக்கை மற்றும் உற்பத்தி ஆகியன வெகுவாகக் குறைந்துள்ளதன. கடந்த பத்து ஆண்டுகளில், இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயத்தின் அளவும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இந்த நிலைமை உள்நாட்டுத் தேவைக்கும் மற்றும் உள்ளூர் உற்பத்திக்கும் இடையே பெரிய இடைவெளியை ஏற்படுத்தியுள்ளது. முக்கியமாக இந்தியாவில் இருந்து பெரிய வெங்காயத்தை இலங்கை

இறக்குமதி செய்கிறது. ஆனால், சாதகமற்ற வானிலை காரணமாக உற்பத்தி இழப்புக்களாக இந்திய அரசாங்கம் 2019 அக்டோபர் முதல் பெரிய வெங்காயத்தை ஏற்றுமதி செய்ய தடை விதித்துள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயத்தின் விலை அந்த காலப்பகுதிக்குள் நியாயமற்ற அதிகரிப்பைக் காட்டுவதாகவும், அது 22 பெப்ரவரி 2020க்குள் ரூ. 300.00/கிலோ வரை அதிகரித்துள்ளதாகவும் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரபை குறிப்பிட்டுள்ளது. வெங்காயத்தின் விலை அதிகரிப்பானது உணவு நுகர்வு வரவு-செலவுத் திட்டத்தின் அதிகரிப்பின் மூலம் நுகர்வோரைப் பாதிக்கிறது. அதே சமயம் செய்கைச் செலவைக் காட்டிலும் வெங்காயத்தின் விலை குறைவது உற்பத்தியாளரைப் பாதிப்பதாக அது காட்டுகிறது. இந்த காலகட்டத்தில், குறைந்த உள்ளூர் பெரிய வெங்காயத்தின் உற்பத்தியினாலும், இறக்குமதி மட்டுப்படுத்தப்படுவதனாலும் பெரும்பாலான சந்தைகளில் பெரிய வெங்காயம் குறைவாக கிடைக்கும் சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. அதனால் பெரும்பாலான நுகர்வோரினால் விலை கட்டுப்படியாக விளங்கவில்லை. பலவீனமான விநியோகச் சங்கிலி மற்றும் சந்தை திறமையின்மை ஆகியவை இந்த நிலைமையைப் பாதித்ததாகத் தெரிவதுடன், முழு சங்கிலி வரைபடத்தைப் புரிந்துகொள்வதற்கும், செயற்பாட்டாளர்களின் மொத்த வரம்பின் பங்கைப் புரிந்துகொள்வதற்கும், சங்கிலி வரைபடத்தில் முக்கிய செயற்பாட்டாளர்களினதும் மற்றும் வசதிப்படுத்துவோரினதும் வகிபங்கைப் பார்ப்பதற்கும், பெரிய வெங்காய மதிப்புச் சங்கிலியில் கமக்காரர் முதல் நுகர்வோர் வரை இலாபம் மற்றும் இழப்புகளைப் புரிந்துகொள்வதற்கும் பெரிய வெங்காயத்தின் மதிப்புச் சங்கிலி அம்சங்களைப் பார்ப்பது இன்றியமையாததாகும். புதிய அரசாங்க கொள்கை ஆவணமானது கமத்தொழில் துறையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்பதுடன், இதில் சிறிய உற்பத்தியாளர்கள் நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி உயர்தர விளைவுகளுக்காக சிறிய அளவிலான காணியைப் பயன்படுத்துகின்றனர். ஆண்டுதோறும் அன்னியச் செலாவணியைச் சேமிக்க உள்நாட்டில் வெங்காயச் செய்கையையும் மற்றும் உற்பத்தியையும் ஊக்குவிக்கும் முறைமைகளை உருவாக்குவதே இந்தக் கொள்கையின் நோக்கமாகும். இந்த இலக்கை அடைவதற்கு, கைத்தொழிலின் இடையூறுகளையும் மற்றும் எதிர்கால வாய்ப்புகளையும் அடையாளங்காண்பதற்காக வெங்காயத் துறையில் முழு அளவிலான மதிப்புச் சங்கிலிப் பகுப்பாய்வை நடத்துவது மிகவும் முக்கியமாகும். எனவே, இலங்கையில் பெரிய வெங்காய கைத்தொழிலின் ஒரு விரிவான VCAஐ மேற்கொள்வதும், உற்பத்தியினதும் மற்றும் சந்தைப்படுத்துதலினதும் முக்கிய தடைகளையும் மற்றும் வாய்ப்புகளையும் கண்டறிவதும் அத்துடன் பின்வரும் குறிப்பிட்ட நோக்கங்களுடன் பெரிய வெங்காய மதிப்புச் சங்கிலியில் கவனிக்கப்பட வேண்டிய தலையீட்டுக்கும் மற்றும் துறைகளுக்கும் பரிந்துரைகளை சுட்டிச்சொல்வதுமே இந்த ஆய்வின் முக்கிய நோக்கமாகும்;

1. இலங்கையில் (இறக்குமதி மற்றும் உள்ளூர்) தற்போதுள்ள பெரிய வெங்காய மதிப்பு சங்கிலியை அடையாளங்காணுதல் மற்றும் திட்டமிடுதல்.

2. பெரிய வெங்காய மதிப்புச் சங்கிலியுடன் வெவ்வேறு செயற்பாட்டாளர்களின் பொருளாதாரச் செயல்திறனை (ஓரங்கள், ஆகுசெலவு, வருமானம் மற்றும் செயல்திறன்) பகுப்பாய்தல்.

3. ஆய்வுப் பகுதிகளில் வெங்காய உற்பத்தியைப் பாதிக்கும் காரணிகளை அடையாளங்காணுதல்.

4. மதிப்புச் சங்கிலியில் உள்ள தடைகளை/இடையூறுகளை மற்றும் வாய்ப்புகளை அடையாளங்காணுதல்.

**தற்போதைய முன்னேற்றம்**

ஆய்வு வட்ட சமர்ப்பணம் மற்றும் RTC சமர்ப்பணம் ஆகியன மேற்கொள்ளப்பட்டன. இரண்டாம் நிலை தரவு சேகரிப்பு நடந்து வருகிறது (பௌதீக இலக்கின் 10% சாதிக்கப்பட்டுள்ளது).

**முடிக்கப்பட்ட ஆய்வுகள் - வெளிவாரியாக நிதியளிக்கப்பட்டவை**

**1. அதிகாரம் மீதான இறுதிக்கட்ட ஆய்வு: வட இலங்கையில் பெண்களின் பொருளாதார வலுவூட்டல் மூலம் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்**

**ஆராய்ச்சிக் குழாம்:**

| | | |
|---|---|---|
| திரு. ஐ.வி. குருப்பு | - | ஒருங்கிணைப்பாளர் |
| திரு. எம்.எ.சி.எஸ். பண்டார | - | இணை-ஆராய்ச்சியாளர் |
| திரு.டபிள்யூ.எச்.எ. ஷாந்த | - | இணை-ஆராய்ச்சியாளர் |
| திரு.டபிள்யூ.எ.என்.விஜேசூரிய | - | இணை-ஆராய்ச்சியாளர் |
| திருமதி எம்.டி. பத்மஜானி | - | இணை-ஆராய்ச்சியாளர் |

**நிதிப்படுத்தல் மூலம்:** *ILO & WFP*

**நோக்கெல்லை மற்றும் குறிக்கோள்கள்:**

இலங்கை அரசினதும் மற்றும் புதுக்குடியிருப்பு *(PTK)* பெண் தொழில்முனைவோர் கூட்டுறவு சங்கத்தினதும் *(PTK COOP)* ஆதரவுடன் வட இலங்கையில் பெண்களுக்கு பொருளாதார வலுவூட்டல் மூலம் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் செய்திட்டமொன்று *(EMPOWER)* சர்வதேச தொழிலாளர் அமைப்பு *(ILO)* மற்றும் உலக உணவுத் திட்டம் *(WFP)* ஆகியவற்றுடன் இணைந்து செயல்படுத்தப்பட்டது. வட இலங்கையில் மோதலால் பாதிக்கப்பட்ட மாவட்டமாகவுள்ள முல்லைத்தீவு மாவட்டத்தில் பெண்களுக்கான பொருளாதார வலுவூட்டல், சமூக ஒருங்கிணைப்பு, பின்னடைவு மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்புதல் ஆகியவற்றுக்கான அணுலை அதிகரிப்பதே இந்த செய்திட்டத்தின் பரந்த நோக்கமாகும். பிராந்தியத்தில் அமைதியை நிலைநாட்டுவதை உறுதி செய்வதற்காக பகுப்பாய்வு, சமூக வலைப்பின்னல் மற்றும் வணிக செயலுபாயத் திறன்கள், சமூக மற்றும் வணிக மொழித் திறன்கள், வணிக தொடக்க முகாமைத்துவம் மற்றும் சமாதான விழிப்புணர்வு மற்றும் திறன்களை மேம்படுத்துதல் மற்றும் நடவடிக்கைகளை வலுப்படுத்துதல் மற்றும் ஆதரித்தல் ஆகியனவற்றை திட்டத்தின் முக்கிய செயல்பாடுகள் உள்ளடக்குகின்றன. திட்ட நோக்கங்கள் எந்த அளவிற்கு எட்டப்பட்டுள்ளன என்பதை மதிப்பிடுவதற்காக, திட்டப் பகுதிகளில் உள்ள மக்கள் தொகையின் ஒட்டுமொத்த தாக்கங்களை அளவிடுவதும், திட்டச் செயல்பாடுகள், விளைவுகள் மற்றும் தாக்கங்கள் ஆகியவற்றை இணைக்கும் அணுமான காரணமான பாதைகளை மதிப்பிடுவதும் மற்றும் திட்ட இலக்குகளை அடைவதில் தலையீடுகள் எவ்வாறு பங்களித்தன என்பதை தீர்மானிப்பதும், *EMPOWER* திட்டத்தின் வாழ்நாளில் புதுக்குடியிருப்பு திட்டப் பகுதியில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களை அளவிடுவதுமே இறுதி வரிசை அளவீட்டின் நோக்கமாகும். புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட *19* கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை *(*கிராமக் கொத்தணி*)* உள்ளடக்கிய *300* பயனாளி குடும்பங்களின் மாதிரியானது, அடுக்கடுக்கான எழுந்தமான மாதிரிகள் மூலம் ஆய்வுக்குத் தெரிவு செய்யப்பட்டன. அதிகளவு விரிவான தகவல்களைச் சேகரிப்பதற்காக செய்திட்டப் பயனாளிகளுடனும் மற்றும் *PTK COOP*இன் அலுவலகப் பொறுப்பாளர்களுடனும் குவியக் குழு கலந்துரையாடல்கள் *(FGDs)* நடத்தப்பட்டதற்கு மேலதிகமாக, *KoBoToolBox* தரவு சேகரிப்புக்காகப் பயன்படுத்தப்பட்டது.

**முடிவுகள்:**

பெரும்பாலான பயனாளிகள் உள்நாட்டு மோதலின் பின்னர் பிரதேசத்தில் மீள்குடியேற்றப்பட்ட முன்னாள் குடியிருப்பாளர்களாவர். புதுக்குடியிருப்பு தமிழ் பேசும் பிரதேசம் என்பதால் அவர்களில் பெரும்பாலானோர் தாய்மொழியான தமிழ் மொழியில் அல்லது இருமொழியில் புலமை பெற்றவர்களாவர். *EMPOWER* திட்ட அமுலாக்கத்தைத் தொடர்ந்து, இறுதிக் கட்டத்தில் கூட ஆங்கில மற்றும் சிங்கள மொழிகளின் புலமை மிகவும் மோசமான மட்டத்தில் உள்ளது. அடிப்படை தரவுகளின்படி, உணவு அல்லாத செலவினங்களில் அதிக பங்கு கடனை திருப்பிச் செலுத்துவதற்கும் மற்றும் குழந்தைகளின் கல்விக்கும் செலவிடப்பட்டுள்ளது. கணக்கிடப்பட்ட உணவு விகித மதிப்புகளிலிருந்து மாதாந்தச் செலவில் பாதிக்கு மேல் உணவுப் பொருட்களுக்காக இருந்தது என்பதும் தெளிவாகிறது. உயர் உணவு விகிதம் மற்றும் அதிக கடன் செலுத்துதல் ஆகியவை பயனாளிகளின் குடும்பங்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்த இன்னும் நியாயமான அளவு முன்னேற்றம் தேவை என்பதைக் குறிக்கிறது. திறமையான தொழிலாளர்கள்

மற்றும் கமத்தொழில் ம் சாராத திறமையற்ற தொழிலாளர்கள் மாதிரிக் குடும்பங்களின் முக்கிய வருமான ஆதாரங்களாக இருந்தனர். கமத்தொழிலுக்கு ஏற்ற காணிகள் கிடைக்காமை, நில உடைமைப் பிரச்சனைகள், காலநிலை மாற்றத்தால் ஏற்படும் காரணிகள், வன விலங்குகளால் ஏற்படும் சேதம், நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவப் பிரச்சனைகள் ஆகியவை கமத்தொழிலை விட்டு மக்களை திசை திருப்புவதற்கான காரணங்களாக கண்டறியப்பட்டுள்ளன.திட்டத்தால் வழங்கப்பட்ட பண உதவி மற்றும் பொருள் உதவி மற்றும் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு உருவாக்கும் திட்டங்கள் இருந்தாலும், சந்தை அணுகலை அதிகரிப்பதில் கவனம் குறைவாகவே உள்ளது. உள்நாட்டு மற்றும் கமத்தொழில் நீர் ஆதாரங்களை உருவாக்கும் திட்ட ஈடுபாட்டுடன், கமக் கிணறுகளின் பயன்பாடு அதிகரித்ததன் மூலம், அண்டைய நீர் ஆதாரங்களைச் சார்ந்திருப்பது குறைந்துள்ளது. திட்டம் செயல்படுத்தப்படுவதற்கு முன், மண் மற்றும் பயிர் பொருத்தம் தொடர்பான பகுப்பாய்வு நடத்தப்பட்டாலும், பயிர் முகாமைத்துவம் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியன பற்றிய அறிவைப் பரப்புவதில் குறைபாடு உள்ளது. வெவ்வேறு பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதில் பெண்களைக் கட்டுப்படுத்துவதற்கு பாலின விதிமுறைகள் ஒரு காரணமாக இருக்கவில்லை. குறைந்த கல்வி மற்றும் வெளிப் பகுதிகளுக்கு அவர்களின் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை விரிவுபடுத்தக்கூடிய மோசமான வெளிப்பாடு ஆகியவை இந்த தயாரிப்புகளுக்கான சந்தைப்படுத்தல் வாய்ப்புக்களை ஆராய்வதற்கு தடையாக உள்ளன. அனைத்து கமத்தொழில் திட்டங்களும் உற்பத்தி சார்ந்தவையே தவிர சந்தை சார்ந்தவை அல்ல என்பதுடன், இறுதி உற்பத்திப்பொருட்களை அப்புறப்படுத்துவதற்கு சந்தைப்படுத்தல் ஏற்பாடுகள் எதுவும் அடையாளம் காணப்படவில்லை.

**பரிந்துரைகள்:**

குறிப்பாக நிலக்கடலை போன்ற பணப்பயிர்களுக்கும், மா, வாழை மற்றும் பப்பாசி போன்ற பழப் பயிர்களுக்கும் சாதகமான மண் மற்றும் கமத்தொழில்-சூழலியல் நிலைமைகளுக்கு இந்தப் பகுதியில் கமத்தொழில் அபிவிருத்திக்கான பெரும் சாத்தியம் உள்ளது. முன்னோக்கிய ஒப்பந்தங்கள்/வர்த்தக ஒப்பந்தங்கள் (FTAக்கள் அல்லது FCAக்கள்) மூலம் இந்த அம்சம் அரசாங்க தனியார் கூட்டாண்மையாக (PPP) நிறைவேற்றப்பட வேண்டும் என்பதுடன், அதிக சந்தைப்படுத்தக்கூடிய மேன்மிகையை உருவாக்கவும், கூட்டுச் சந்தைப்படுத்தல் அமைப்புகளை நிறுவவும் அர்ப்பணிக்கப்பட்ட பொருளாதார நிலையங்கள் மற்றும் விருத்தியடைந்த 'பொல' சந்தைப்படுத்தல் அமைப்புகள் போன்ற சந்தைப்படுத்தல் நிலையங்கள் அவசியமாகும். வறண்ட காலநிலையில் நீர்ப்பாசனத்திற்கான நீர் இருப்பை அதிகரிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளாக உயர் தரத்துடன் கூடிய நீர் பம்பிகள், நீர் குழாய்கள்/குழாய்கள் மற்றும் நுண் நீர்ப்பாசன அலகுகளை வழங்குதல் பரிந்துரைக்கப்படலாம். வறண்ட காலங்களின் போது, ஜூன் - ஆகஸ்ட் மாதங்களில் பாசனத்திற்காக கமத்தொழில் கிணறுகளை அமைத்து பயனாளிகள் அதிகபட்ச பலன்களைப் பெற முடியும். அப்பகுதியில் வசிக்கும் சனசமூகங்களுக்கு குழாய் மூலம் நீர் வசதிகளை வழங்குவது, குறிப்பாக குடிநீருக்கும், உணவைப் பதப்படுத்துவதற்கும் மற்றும் பிற வீட்டுத் தேவைகளுக்கும் நீர் பற்றாக்குறைக்கு ஒரு சாத்தியமான தீர்வாக பங்கேற்பாளர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளது. ஏனைய சமூகங்களுடனான நல்லிணக்கத்தில் அதிக அக்கறை செலுத்த வேண்டும். அரசாங்க நிறுவனரீதியான அமைப்புடன் ஒத்துழைப்பதன் மூலம் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல், நல்லிணக்கம் மற்றும் பிற சமூகங்களுடன் ஊடாடுதல் ஆகியவற்றை மேம்படுத்த முடியும். பிற இனக் குழுக்களுடன் பயனாளி பெண்களின் நல்லிணக்கத்தை அதிகரிப்பதற்காக, இதேபோன்ற வாழ்வாதாரப் பின்னணியைக் கொண்ட பிற சனசமூகங்களுக்கு மேலும் நடைமுறை ஊடாடும் உல்லாசப் பயணங்களையும் மற்றும் வெளிக்களப் பயணங்களையும் ஏற்பாடு செய்வது பரிந்துரைக்கப்படலாம்.

## 05
## மனித வளங்கள், நிறுவன அபிவிருத்திப் பிரிவு

கமத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்திச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற முதியோர்களின் அறிவு, மனோபாவம் மற்றும் திறன்கள் என்பவற்றை விருத்தி செய்து, அதனூடாக இலங்கையின் கமத்தொழில் சமூகத்தினது சமூகப் பொருளாதார நிலையை மேம்படச்செய்வது ஹெ.கொ.க.ஆ.ப. நிறுவகத்தினால் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் குறிக்கோளாகும்.

இலங்கையில் கிராமியத் துறையிலும் மற்றும் கமத்தொழில் சமூகத்திலும் அபிவிருத்திச் செயற்பாடுகளில் சம்பந்தப்படுகின்ற வெளிக்கள உத்தியோகத்தர்கள், அரசாங்க மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உயர் அதிகாரிகள் ஆகியோர் உள்ளடங்கிய ஒரு பரந்த குழுவுக்கு ஹெ.கொ.க.ஆ.ப.நி.இன் பயிற்சி செயற்றிட்டங்களின் வாடிக்கையாளர்கள் சார்ந்தவர்களாவர்.

பிரிவினால் நடத்தப்பட்ட பயிற்சி செயற்றிட்டங்கள பற்றிய விபரங்கள் பின்வருமாறு:

1. கமத்தொழில் சமூகத்தின் தேவைகளினதும் மற்றும் தேசிய வளர்ச்சித் திட்டத்தினதும் மீதான அடிப்படையில் பொதுவான பயிற்சித் திட்டங்களை ஒருங்கிணைத்தல், ஒழுங்கமைத்தல் மற்றும் தயாரித்தல்

2. கமத்தொழில் மற்றும் கிராமியத் துறைகள் தொடர்பான பல்வேறு அமைப்புகளின் வேண்டுகோளின்படி, பயிற்சி திட்டங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் தயாரித்தல்.

3. வேறு கோரும் நிறுவனங்களுக்கு பயிற்சி நிபுணத்துவத்தை வழங்குதல்.

4. தேசிய முன்னேற்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயல் ஆராய்ச்சி செய்திட்டத்தை வடிவமைத்தல் மற்றும் நடத்துதல்.

தேசிய மற்றும் சர்வதேசப் பயிற்சிக்கு மேலாக, கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் ஆகியன ஏனைய தேசிய மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் இணைந்து ஒழுங்குபடுத்தப்பட்டு, ஒருங்கிணைக்கப்படுகின்றன.

2020ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வருமாறு.

### 1. பெண்கள் கமக்காரர் அதிகாரமளிப்பு மீதான பயிற்சிச் செய்திட்டம்

உலகெங்கிலும் உள்ள கமத்தொழில் சமூகத்தின் மிகச்சிறிய அலகுகளில் பெண் கமக்காரர் முக்கிய பங்கு வகிக்கின்றனர். அவர்களின் அன்றாட கிரமமான நடவடிக்கைகளுடன், கமத்தொழில் நடவடிக்கைகளில் அவர்களின் பங்கேற்பு வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உதவுகிறது. ஆனால், இலங்கையின் சூழ்நிலையில், ஏனைய தொழில்களுடன் ஒப்பிடுகையில், பெண் கமக்காரர்கள் போதுமான வருமானத்தை ஈட்டுவதில்லை. இலங்கையில் கிட்டத்தட்ட 29% வேலை செய்யும் பெண்கள் கமத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ளனர். இதனிடையே, தற்போதுள்ள பாரம்பரிய சமூகக் கட்டமைப்பு, தலைமைத்துவப் பலவீனங்கள், பாரம்பரிய மனப்பான்மை, தொழில்முயற்சி குறித்த மோசமான அறிவு, தொடர்பாடல் இடைவெளிகள், அபிவிருத்தி நடவடிக்கைகளில் பங்கேற்பதில் உள்ள பலவீனம், இலங்கைப் பெண் கமக்காரர்களின் சட்ட அதிகாரம் மற்றும் முகாமைத்துவப் பிரச்சினைகள் குறித்த அறிவின்மை ஆகியன காணப்படுவதுடன், இது பெண் கமத்தொழில் அமைப்புகளின் செயல்பாட்டை நேரடியாகவே பாதிக்கின்றது. எனவே, கமத்தொழிலில் பெண் கமக்காரர்களின் பங்களிப்பையும், அவர்கள் எதிர்கொள்ளும் தடைகளையும் மதிப்பிடுவது, முறையான கமத்தொழில் முகமைத்துவச் செயலுபாயங்கள் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தல் ஆகியவற்றை மதிப்பிடுவது முக்கியமாகும்.

இலக்கியங்களின்படி, இலங்கையில் கமத்தொழில் துறையில் பெண்களின் பங்களிப்பு போதுமானதாக இல்லை. எனவே, கமக்காரர்களை சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார

*ரீதியில் வலுவூட்டுவதன் மூலம் கமத்தொழில் சமூகத்தை முன்னேற்றமடையச் செய்ய வேண்டும் என்ற அரசின் நோக்கத்திற்கு இணையாக, பெண் கமக்காரர்களுக்கு அதிகாரம் அளிப்பது மிகவும் முக்கியமான தேவையாகும் என்பதுடன், எனவே அவர்களின் நிறுவன மற்றும் நிர்வாகத் திறன்களை வெளிப்படுத்துவதன் மூலம் அந்த முன்மொழிவை அடைய இந்த திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.*

*இந்தப் பயிற்சித் திட்டத்தின் நோக்கம், "சீதாமு" பெண் கமக்காரர்கள் அமைப்பின் தலைவர்களின் அறிவு, மனோபாவம் மற்றும் திறன்கள் ஆகியவற்றை மேம்படுத்தி, கமத்தொழில் மேம்பாட்டுச் செயல்பாட்டில் பெண் கமக்காரர்களை செயல்பாட்டுப் பங்குதாரர்களாக ஆக்குவதன் மூலம் கமக்காரர் அமைப்பை மேம்படுத்துவதாகும். முன்மொழியப்பட்டுள்ள உத்தியானது, பயிற்சியின் மூலம் பெண் கமத்தொழில் அமைப்புத் தலைவர்களின் திறன்களை மேம்படுத்துவதாகும். இந்த்த் திட்டம் 2020இல் தொடங்கப்பட்டு அதே ஆண்டில் முடிவடைந்தது. இந்தத் திட்டத்தின் நேரடி மற்றும் மறைமுக பயனாளிகளாக 1,604 கமத்தொழில் தொழில்முயற்சியாளர்கள் மற்றும் மாத்தளை மாவட்டத்தில் உள்ள கமத்தொழில் அபிவிருத்தி நிலையங்களின் அனைத்து பெண் கமக்காரர்கள் அமைப்பின் தலைவர்கள் ஆகியோர் விளங்குகின்றனர். இத்திட்டம் திறைசேரியின் மூலம் நிதியளிக்கப்பட்டது.*

***பயிற்சிக் குழாம்:***

*திரு. சங்கீத் பிரசாத் பெர்னாண்டோ - ஒருங்கிணைப்பாளர்/வளவாளர்*
*திரு. எஸ்.எம்.ஏ. சமரகோன் - வளவாளர்*
*திரு. எச்.எம்.ஜே.கே. ஹேரத் - வளவாளர்*
*மாகாணங்கள் மற்றும் மாகாண சபை கமத்தொழில் திணைக்களங்களுக்கு இடையிலான வளவாளர்*

***முடிவடைந்த ஆய்வுகள்***

***1. இலங்கையில் கைத்தொழில்கள் அடிப்படையிலான தேங்காய் வித்து மீது வீட்டுத் தோட்ட தெங்குச் செய்கையின் தாக்கம்***

***ஆராய்ச்சிக் குழாம்:***

*திருமதி ஜி.வி.என்.அயோமி - ஒருங்கிணைப்பாளர்*
*திரு. எஸ்.பி.பெர்னாண்டோ - இணை-ஆராய்ச்சியாளர்*
*திரு. பி.சி.ஜே. சில்வா - இணை-ஆராய்ச்சியாளர்*
*திரு. எஸ்.எம்.ஏ. சமரகோன் - இணை-ஆராய்ச்சியாளர்*
*திரு. விராஜித் குருப்பு - இணை-ஆராய்ச்சியாளர்*

***நிதிப்படுத்தல் மூலம்:*** *ஒன்றிணைந்த நிதியம்*

***முக்கிய நோக்கம்***

*வீட்டுத் தோட்டங்கள் மூலம் தென்னை உற்பத்தியை அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகளை அடையளங்காணுதல்*

***குறிப்பிட்ட நோக்கங்கள்***

- *தேங்காய் உற்பத்தியில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளைக் கண்டறிந்து, வீட்டுத் தோட்டங்களில் சாத்தியமான உற்பத்தியை மதிப்பிடுதல்.*
- *தென்னைச் செய்கை மீது தடைகளைக் குறைப்பதற்கான வழிகளைக் கண்டறிதல் மற்றும் வீட்டுத் தோட்ட மட்டத்தில் அதற்கான சாத்தியமான தீர்வுகளை அடையாளங்காணுதல்.*
- *வீட்டுத் தோட்டங்களில் தென்னைச் செய்கையை ஊக்குவிக்க கொள்கை வகுப்பாளர்களுக்கு நம்பகமான ஆதாரங்களை வழங்குதல்.*

- இலங்கையில் தென்னை வித்து அடைப்படையிலான கைத்தொழில்களில் வீட்டுத் தோட்ட தேங்காய் உற்பத்தியின் தாக்கத்தை அடையாளங்காணுதல்.

**முடிவுகள் மற்றும் பரிந்துரைகள்**

***1. குடித்தனங்களுக்கான பரிந்துரைகள்***

அ. கிட்டுகின்ற இடத்தைப் பொறுத்து, நகர்ப்புற மற்றும் அரை நகர்ப்புற வீட்டுத் தோட்டங்களில் தென்னையை நடுவதன் மூலம், வீட்டுத் தோட்டங்களில் (40 பேர்ச்சிற்குக் குறைவான நிலப்பரப்பு) இடைவெளி நிரப்புவதை ஊக்குவித்தல். கம்பஹா 29%, குருநாகல் 34% மற்றும் புத்தளம் 38% என ஒரு மரத்தினால் இடைவெளி நிரப்பப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் கண்டறியப்பட்டுள்ளன. கம்பஹா 26%, குருநாகல் 30% மற்றும் புத்தளம் 35% என இரண்டு மரங்களால் இடைவெளி நிரப்பப்படுவதற்கான சாத்தியம் உள்ளது. இது சம்பந்தமாக வீட்டு சமையல் தேவைகளை பூர்த்தி செய்வதேஅடிப்படை நோக்கமாகும்.

ஆ. குடித்தனங்கள் மூலம் எதிர்காலச் செய்கைக்கு விருப்பமான வகை

இந்த ஆய்வில் உள்ளடக்கப்பட்ட குடித்தனங்கள் தனித்தனியாகத் தொடர்பு கொள்ளப்பட்டு, குடித்தனங்கள் மூலம் எதிர்காலச் செய்கைக்காக, தமது திருப்தி அல்லது வேறுவிதமான விருப்பத்தேர்வுகள் உட்பட ஒவ்வொரு வகையிலும் தமது அவதானிப்புகளைப் பதிவு செய்தன. ஒவ்வொரு வகைக்கும் விருப்பத்தேர்வுகள் D X T கலப்பினங்கள்; கம்பஹா 55%, குருநாகல் 56% மற்றும் புத்தளம் 58%, உயரமான வகைகள், கம்பஹா 41%, குருநாகல் 37% மற்றும் புத்தளம் 39% மற்றும் இரண்டு வகைகளுக்கும் கம்பஹா 2%, குருநாகல் 6% மற்றும் புத்தளம் 4%.

இ. ஆய்வுப் பகுதியின் பதிலளித்தவர்கள் தேங்காய் வாங்குவதற்கு மாதாந்தம் ரூ. 2100.00 (தேங்காயின் விலை ரூ. 55.00)செலவழிக்கிறார்கள். இது கணிசமான செலவாகும். இது இலங்கையில் சராசரி குடும்ப வருமானத்தின் மாத வருமானத்தில் 7% ஆகும். அதிகரித்து வரும் தேங்காயின் விலைக்கு ஏற்றவாறு தேங்காயை வாங்குவதற்கான விலையின் மாறாத்தன்மை குறைகிறது. அதிகரிக்கிறது. களஆய்வுக் காலகளின்படி 4 உறுப்பினர்களைக் கொண்ட குடும்பத்தின் வீட்டுத் தேங்காய் தேவையைப் பூர்த்தி செய்ய இரண்டு தென்னை மரங்கள் (DT கலப்பின் வகையிலிருந்து கிட்டத்தட்ட 100 - 120/தேங்காய்கள்/மரம்/ஆண்டு) போதுமானதாகும். ஆய்வுப் பகுதியில் சராசரி குடும்பத்தின் அளவு நான்கு எனவும், ஆண்டுக்கு குடும்பத் தேங்காய் தேவை ஆண்ணளவாக 360 எனவும் எடுத்து ஆய்வில் அவதானிக்கப்பட்டது (தேங்காய் பாலைப் பிழிந்தெடுக்க கலப்பான் அல்லது கல் கலப்பான் மூலம் இந்த அளவைக் குறைக்கலாம்). CRI ஆராய்ச்சி முடிவுகளின்படி, தேங்காய் பால் பிழிந்தெடுக்கும் பாரம்பரிய முறையினால் வீட்டுத் தேவையிலிருந்து 30% - 40% வீணாகின்றது.

ஈ. குடித்தன அளவீட்டுத் தரவுகளின்படி, ஆண்டுதோறும் வீட்டுத் தோட்ட தென்னை மரங்கள் பூச்சி தாக்குதல்களால் சேதமடைவதால் தேசிய உற்பத்தியில் 15% விளைச்சல் இழப்பு ஏற்படுகிறது. அதன்படி, பூச்சி சேதத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம், இதை கைத்தொழில் தேவைகளுக்கு கிடைக்கச் செய்யலாம். குடித்தனங்களில் தென்னைப் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவது தேங்காய் உற்பத்தியில் ஒரு முக்கிய காரணியாக உள்ளது என்பதை இது சுட்டிச்சொல்கிறது.

உ. பகுப்பாய்வின் படி, தேங்காய் உற்பத்திக்கு உரத்தின் பயன்பாடு குறிப்பிடத்தக்க முன்கணிப்பு ஆகும். வீட்டுத் தோட்டங்களில் உரமிடுவதை விட, வீட்டுத் தோட்டங்களில் உள்ள சராசரியை விட 9.82 மடங்கு அதிகமாக அல்லது அதற்கு மேல் உரமிடுதல் மூலம் உற்பத்தியை அதிகரிக்கலாம்.

ஊ. வீட்டுத் தோட்டத்தில் தென்னைச்செய்கைக்கான விரிவாக்கச் சேவைகளின் திறன் வலுப்படுத்தப்படுவது அவசியமாகும்.

**கைத்தொழில்களுக்கான பரிந்துரைகள்**

அ. தேங்காய் பதப்படுத்தும் கைத்தொழிலுக்கு *(22%)*, முக்கியமாக அவற்றின் உற்பத்திகளுக்கு தேங்காய் வித்து அடிப்படையிலான உற்பத்திக் கைத்தொழில்களுக்கு நிலையான விலைக்கான அவசியத்தை ஆய்வுத் தரவு முனைவுபடுத்தியது.

ஆ. ஏனைய ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் தென்னை கைத்தொழிலின் உற்பத்தித்திறன் மிகவும் குறைவாகவே காணப்படுவதாக ஆய்வு காட்டியுள்ளது. தென்னையில் கைத்தொழில் வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கு தென்னங் காணிகளில் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் *(19%)* இரண்டையும் அதிகரிக்க வேண்டியது அவசியமாகும். உயர் தரத்தைப் பேணுவதற்காக செயலாக்கத் துறையில் நவீன தொழில்நுட்பவியல் அறிவின் *(19%)* தேவையை உற்பத்தியாளர்கள் முனைவுபடுத்தினர்.

**2. தேங்காய் வித்து அடிப்படையிலான தயாரிப்பாளர்களால் செய்யப்பட்ட முக்கிய ஆலோசனைகள்**

அ. சிறிய அளவிலான எண்ணெய் ஆலைகளின் கூற்றுப்படி, புதிய தொழில்நுட்பங்களையும் மற்றும் இயந்திரங்களையும் அறிமுகப்படுத்தாமல் பாம் எண்ணெய் விலையுடன் போட்டியிடுவது கடினம்.

ஆ. உற்பத்தித்திறனை அதிகரிக்க புதிய இயந்திராதிகளுடன் உலர்ந்த தேங்காய் ஆலைகளை *(9%)* மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் DC உற்பத்தியாளர்கள், வலியுறுத்தியுள்ளனர்.

இ. சர்வதேச் சந்தைகளில் புதிய மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களுக்கான வாய்ப்புகள் அதிகரித்து வருவதால், தேங்காய்க்கும் மற்றும் அதன் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களுக்குமான தேவை தொடர்ந்து அதிவேகமாக அதிகரித்து வருகிறது.

ஈ. நாட்டில் தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் மற்றும் தொழில்நுட்பப் பரவலுக்கும் இடையே கணிசமான இடைவெளியொன்று இருப்பதால், தொழில்நுட்பப் பரவல் முறைமையியலை மேம்படுத்துவதற்கும் அத்துடன் முன்னேற்றுவதற்கும் வலுவானதொரு தேவை உள்ளது.

உ. சந்தைகளுக்கான அணுகல் மற்றும் சந்தை நுண்ணறிவு ஆகியன மோசமாக உள்ளன. இது சந்தை ஆராய்ச்சி, கண்காட்சிகளிலும், வர்த்தகக் கண்காட்சிகளிலும் பங்கெடுத்தல் போன்றவற்றின் மூலம் புதிய சந்தைகளை அடையாளங்காண வேண்டியதன் அவசியத்தைக் குறிக்கிறது.

## *06*

## புவியியல் தகவல் முறைமை அலகு

1. **தயாரிப்பாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோர் ஆகியோர் மத்தியில் சந்தை இணைப்பை உருவாக்க ஒரு *App*ஐ உருவாக்குதல்**

**குழாம்:**

திரு. எச்.எம்.ஜே.கே. ஹேரத் - ஒருங்கிணைப்பாளர்
திரு. பி. புலஸ்தி - *App* விருத்தியாளர்
ஆர்தர் சி கிளார்க் நவீன தொழில்நுட்பங்களுக்கான நிறுவனம்

**நிதிப்படுத்தல் மூலம்:** ஒன்றிணைந்த நிதியம்

***APP* பெயர்: சுப்பிரிபொல (සුපිරිපොල) *Google Ply Store***

**நோக்கெல்லை மற்றும் குறிக்கோள்கள்:**

கமத்தொழில் உற்பத்திப்பொருட்கள் சந்தை மற்றும் ஆதரவு சேவைகளில் (மரக்கறி, பழங்கள், விதைகள் மற்றும் தாவரங்கள், ஆயுர்வேத உற்பத்திப்பொருட்கள், சேதன உரங்கள், மீன்பிடித் தொழில்கள், இயந்திராதி சேவைகள் போன்றவை) விநியோகஸ்தர்களுக்கும் மற்றும் வாடிக்கையாளர்களுக்கும் இடையே ஒரு இணைப்பை உருவாக்குவதும் அத்துடன் முழு விநியோகச் சங்கிலியையும் ஒரே தளத்துடன் இணைப்பதுமே இந்த்த் திட்டத்தின் நோக்கமாகும்

**விவரணம்**

இடைத்தரகர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதன் மூலம், முழு கமத்தொழில் விநியோகச் சங்கிலியையும் ஒரே தளத்திற்குக் கொண்டுவருவதற்காக நிர்வாகி மட்டிசைப்புடன் பயனர் நட்புறவிலான நடமாடும் பிரயோகத்துடன் ஒரு தரவுத்தளத்தைத் திட்டமிடுதல், வடிவமைத்தல், உருவாக்குதல் மற்றும் செயல்படுத்துதல் ஆகியனவே இந்தத் திட்டத்தின் நோக்கெல்லையாகும்.

- விநியோகஸ்தர் பதிவு செயல்முறை
- மாவட்ட வாரியான விநியோகஸ்தர் களைக் கண்டறிவதற்கான வசதிகள்
- மாவட்ட வாரியான வாடிக்கையாளர்களைக் கண்டறிவதற்கான வசதிகள்
- விநியோகஸ்தர் மற்றும் வாடிக்கையாளர் மதிப்பீட்டு முறைமை
- சிங்கள ஊடகத்தில் முறைமை மற்றும் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பு வசதி
- உரையாடல் செய்திகளிலும் மற்றும் விளம்பரங்களிலும் கருத்து தெரிவிப்பதற்கான வசதிகள்
- பதிவு செய்த பயனர்களுக்கு பயனர் கணக்கு விவரங்களைச் சரிபார்ப்பதற்கும் விவரங்களை மாற்றுவதற்கும் மற்றும் அகற்றுவதற்குமான வசதிகள்
- நிர்வாகி மூலம் விளம்பரங்களைக் கண்காணிப்பதற்கும மற்றும், அங்கீகரிக்குமான வசதிகள்
- வரலாற்றுப் பதிவுகளை வைத்திருப்பதற்கான வசதிகள்

**பாரிய அவதானிப்புகள்**

சோதனை ஓட்டமொன்றாக கூகுள் ப்ளே ஸ்டோரில் ஏப்ரல் 2020 இல் 'Supiripola' செயலி தொடங்கப்பட்டது. இது 12 பெப்ரவரி 2021க்குள் 1,214 பயனர்களால் பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளது. அவர்களில் 72% விவசாயிகள்/தயாரிப்பாளர்கள் மற்றும் 31% விற்பனையாளர்கள் இந்த appஇன் உதவியுடன் தங்கள் தயாரிப்புகளை விற்பனை செய்துள்ளனர்.

**முன்னோக்கிச் செல்லும் வழிக்கான பரிந்துரைகள்**

விவசாயிகள்/உற்பத்தியாளர்கள், மொத்த விற்பனையாளர்கள், இடைத்தரகர்கள், சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் முக்கிய பொருளாதார மையங்களில் உள்ள நுகர்வோர் ஆகியோர் தோராயமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, முன்மொழியப்பட்ட பயன்பாடு மற்றும் அதன் நன்மைகள் ஆகியன குறித்து அவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். மேலும் சந்தைப்படுத்தல் சிக்கல்கள் மற்றும் அறுவடைக்குப் பிந்தைய இழப்பு ஆகிய இரண்டையும் குறைப்பதற்காக பயன்பாட்டை இயக்குவதற்கு அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படவும் வேண்டும். அடுத்து, இந்த செயலியை சிங்களம் தவிர ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் விளம்பரப்படுத்தவும் வேண்டும்.

## 07

## புள்ளிவிபரங்கள், தரவுகள் படிமுறைப்படுத்தல் பிரிவு

ஹெக்டர் கொப்பகடுவ கமநலஆராய்ச்சி, பயிற்சிக் நிறுவகத்தின் (ஹெ.கொ.க.ஆ.ப.நி.) முதன்மை நோக்கத்திற்கு அமைவாக, கமநலத் துறை மீதான தகவல்களைச் சேகரித்தல், புதுப்பித்தல், பகுப்பாய்தல் மற்றும் பரப்புதல் ஆகியவற்றுக்கான நிலையமாக வருவதற்காக இந்த இலக்கை அடைவதற்கான நிலையமாக ஒருங்கிணைந்த முயற்சியை மேற்கொள்வதற்காக புள்ளிவிபரங்கள், தரவுகள் படிமுறைப்படுத்தல் பிரிவு (SDPD) உருவாக்கப்பட்டது.

- கமத்தொழில் தகவல் முகாமைத்துவத்தில் சிறந்த தேசிய நிலையமாக இருத்தல்.

- புள்ளிவிபரவியலினதும் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தினதளும் பிரயோகத்தின் மூலம் ஆராய்ச்சி, பயிற்சி நடவடிக்கைகளின் தரத்தை மேம்படுத்துவதற்கான ஒரு முக்கியப் பிரிவாக இருத்தல்.

- தற்போதைய தகவல் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கருவிகளையும் மற்றும் நுட்பங்களையும் ஏற்றுக்கொள்வதன் மூலம், தன்னியக்க தகவல் செயலாக்க முறைமைகளை மேம்படுத்துதல்.

தரவு முன்னேற்ற அலகு மற்றும் தரவு செயலாக்க அலகு என இரு அலகுகளை பிரிவு கொண்டுள்ளது. பின்னர் நிறுவகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக கணினி மற்றும் வலைப்பின்னலமைப்பு உள்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான சேவைகளை வழங்குவதற்காக பிரிவில் கணினி தொழில்நுட்பப் பிரிவும் நிறுவப்பட்டது.

### தரவு அபிவிருத்தி அலகு

கமநல மேம்பாடு மற்றும் தொடர்புடைய துறைகள் ஆகியவற்றில் தொடர்புடைய தகவல்களை அணுகுவதை வசதிப்படுத்துவதற்காக அலகில் நிறுவப்பட்ட ஒரு கமநல தரவு வங்கியானது ஒரு களஞ்சியமாகவும், ஒரு சேகரிப்பு முகவராண்மையாகவும் மற்றும் ஒரு சேவைப் பணியகமாகவும் செயல்படுகிறது. அரசாங்க அதிகாரிகள், கொள்கை வகுப்பாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பிற ஆர்வமுள்ள தரப்பினர் ஆகியோருக்கு புள்ளிவிவரத் தகவல்களின் விரிவான ஆதாரத்தின் வகிபங்கொன்றை வகிப்பதற்காகவும் அத்துடன் பயனுள்ள முறையில் தகவல்களைப் பரப்புவதை ஒருங்கிணைப்பதற்காகவும் இது விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ளது

தரவு வங்கி இரண்டு வகையான தரவுகளைக் கொண்டுள்ளது; வளர்ச்சிக் குறிகாட்டிகள் மற்றும் அளவீட்டுக் காப்பகங்கள். பல்வேறு பண்புக்கூறுகள் மீது அரசு முகவராண்மைகளிலிருந்து சேகரிக்கப்பட்ட இரண்டாம் நிலை புள்ளிவிவரங்கள் வளர்ச்சி குறிகாட்டிகள் ஆகும் என்பதுடன், நிறுவகத்தினால் நடத்தப்படும் கள ஆய்வுகள் மூலம் உருவாக்கப்பட்ட முதன்மைத் தரவுகளை ஆய்வுக் காப்பகங்கள் உள்டக்கும். தகவலை மீட்டெடுப்பதற்கும், செயலாக்குவதற்கும் உதவுதற்காக ஆலோசனை, பயனர் மற்றும் விநியோகஸ்தர் கல்வி, கணினி பயன்பாட்டில் பயிற்சி மற்றும் விழிப்புணர்வுச் சேவை ஆகியவற்றை தரவு வங்கி வழங்குகிறது. தாபிக்கப்பட்ட வேளையில் கமத்தொழில், மீன்பிடித்தொழில், வனவியல் மற்றும் கைத்தொழில்கள் ஆகியவை சாத்தியமான துறைகளாக இருந்த போதிலும், கமத்தொழில் துறை பற்றிய தகவல்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. கமநலத்தின் முன்னேற்றம் மற்றும் பண்ணைக் குடித்தனங்களின் வாழ்க்கை நிலைமைகள் ஆகியவற்றின் பல்வேறு அம்சங்களைப் பற்றிய விரிவான தகவல் கமத்தொழில் துறையின் கீழ் மேற்கொள்ளப்படலாம் எனச் சிந்திக்கப்பட்டது. இவ்வாறு, மக்கள் தொகை, வேலைவாய்ப்பு, நிலப் பயன்பாடு, காணிக் குடியேற்றங்கள், உரம், உற்பத்திச் செலவு, சந்தைப்படுத்தல் போன்ற மாவட்ட வாரியாக சுமார் 1,800 குறிகாட்டிகளுக்காக மாதாந்தம், பருவகாலரீதியாக மற்றும் ஆண்டுதோறும் சேகரிக்கப்படும் தகவல்களின் எண்ணிக்கை பரந்த வகைகளில் அடங்கும்

பதினொரு பாரிய குழுக்களின் அதாவது தானியங்கள், மரக்கறிகள், பழங்கள், கிழங்கு வேர்கள், கால்நடைகள், கைத்தொழில் பயிர்கள், வாசனைத்திரவியங்கள், பருப்பு வகைகள், எண்ணெய்

விதைகள், பெருந்தோட்டம் மற்றும் வேறு பயிர்கள் ஆகியவற்றின் கீழ் குறிப்பிடப்பட்ட பயிர்கள் தொடர்பான தரவுகள் கிட்டுகின்றன. தற்போது, இந்த நிலையமானது 1950களில் தொடங்கி கையேடு மற்றும் கணினிமயமாக்கப்பட்ட வடிவங்களில் சுமார் 2.8 மில்லியன் பதிவுகளைக் கொண்டுள்ளது. அதன்படி, மத்திய வங்கி, சுங்கத் திணைக்களம், மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம், விவசாயத் திணைக்களம் மற்றும் ஹெ.கொ.க.ஆ.ப.நி.இன் சந்தைப்படுத்தல், உணவுக் கொள்கைப் பிரிவு போன்ற பல்வேறு ஆதாரங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட மாவட்ட வாரியான தகவல்களுடன் ஹெ.கொ.க.ஆ.ப.நி. தகவல் நிலையம் ஒரு தரவுத்தளத்தை பராமரிக்கிறது. தரவுத்தளங்களில் உள்ள தகவல்களை அணுகுவதற்காக பிரிவில் ஒரு தானியங்கி முறைமை செயல்படுத்தப்பட்டுள்ளது. மேலும், மிகவும் கோரப்பட்ட சில தகவல்கள் இணையதளத்தில் சேமிக்கப்பட்டுள்ளன. வெளிவாரி மற்றும் உள்ளகப் பயனர்கள் கமத்தொழில் தகவல்களைப் பெற SDP பிரிவை நேரடியாகத் தொடர்பு கொள்ளலாம்.

மேற்கூறிய ஆதாரங்கள், இணைய தளங்கள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களால் வெளியிடப்பட்ட பாடப்புத்தகங்கள் ஆகியவற்றிலிருந்து தரவு சேகரிப்பு மேற்கொள்ளப்பட்டது. ஹெ.கொ.க.ஆ.ப.நி.இன் சந்தைப்படுத்தல் மற்றும் உணவுக் கொள்கைப் பிரிவிலிருந்து உணவுப் பொருட்களின் விலைகள் சேகரிக்கப்பட்டன. ஆண்டு முழுவதும் பின்வரும் தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

- ஏற்றுமதிகள் – 2018
- சில்லறை விலைகள்– 2019
- உற்பத்தியாளர் விலைகள்– 2019
- கால்நடைப் புள்ளிவிபரங்கள்– 2015-2019
- விஸ்தீரணம் - 2019
- உற்பத்தி - 2019
- பண்படுத்தப்பட்ட விஸ்தீரணம் – 2018, 2019

ஆண்டின் போது, பின்வரும் காட்டிகளுடன் கணனிமயப்படுத்தப்பட்ட தரவுத்தளம் புதுப்பிக்கப்பட்டது:

- நெல்லின் புள்ளிவிபரங்கள்-விஸ்தீரணம் மற்றும் உற்பத்தி- 2020
- உற்பத்தியாளர் விலைகள்– 2019
- சில்லறை விலைகள்- 2019
- 2019இல்பெரும் போகத்திலும், சிறு போகத்திலும் விஸ்தீரணம் மற்றும் உற்பத்தி
- பண்படுத்தப்பட்ட விஸ்தீரணம் – 2018, 2019

மேற்குறித்த காட்டிகள் மீது 72,904 எண்ணிக்கைளைக் கொண்ட பதிவுடன் தரவுத்தளம் புதுப்பிக்கப்பட்டது.

**வேண்டுகோள்களின் மீது தரவுகளின் ஏற்பாடு**

உள்ளக (62) மற்றும் வெளியகப் (18) பயன்பாட்டாளர்களிடமிருந்து கமத்தொழில் தகவலுக்காக மொத்தம் 80 வேண்டுகோள்கள் கிடைத்தன.

***தரவுகளைச் சேகரிப்பதற்காக அணுகப்பட்ட நூல்கள்***

- மத்திய வங்கியின் பொருளாதார - சமூகப் புள்ளிவிபரங்கள் ,2019
- குடிசன மதிப்பீட்டுப் புள்ளிவிபரங்கள் திணைக்களத்தின் புள்ளிவிபரச் சுருக்கம் - 2019

**தரவு படிமுறைப்படுத்தல் அலகு**

*SDPD*இன் இரண்டாவது மற்றும் மூன்றாவது இலக்குகளுக்கு இணையாக, கமத்தொழில் தரவுத்தளத்தையும் மற்றும் மாதிரி ஆய்வுகளிலிருந்து வரும் தரவையும் கையாள தரவு படிமுறைப்படுத்தல் அலகு நிறுவப்பட்டது. தரவுகள் குறியிடப்பட்டு தரவு மேம்பாட்டுப் பிரிவிலிருந்து சரிபார்க்கப்பட்டவுடன், பகுப்பாய்வுகளுக்கான தரவு படிமுறைப்படுத்தல் அலகு மூலம் தொழில்நுட்ப ஆதரவு வழங்கப்படுகிறது. ஆண்டு முழுவதும், தரவுத்தளத்தில் கமத்தொழில் தகவல்களைப் புதுப்பிப்பதற்கான அதன் சேவைகளை அலகு வழங்கியது.

## 08
## நூலகம்

ஹெ.கொ.க.ஆ.ப.நி.இன் ஆராய்ச்சிப் பணியாளரினதும், அக்கறையுடைய ஏனைய தரப்புகளினதும் மற்றும் நிறுவனங்களினதும் நன்மை கருதி, கமத்தொழில் துறையுடன் சம்பந்தமான தகவல்களைச் சேகரித்தல், தொகுத்தல், மீளப்பெற்றுக்கொள்ளல் மற்றும் அத்தகைய தகவல்களை பரம்பல்செய்தல் முதலியன நூலகத்தின் முக்கிய குறிக்கோள்களாகும். குறித்த ஆண்டு காலப்பகுதியில், ஊழியர்கள் இந்த நூலகத்திலிருந்து 258 நூல்களையும், 16 உசாத்துணை நூல்களையும், உசாத்துணைக்காக 18 சஞ்சிகைகளையும் இரவல் பெற்றனர். ஆண்டின் போது, இந்த நூலகத்திற்கு 105 நபர்கள் வருகை தந்திருந்தனர்.

### நூல்களினதும், சஞ்சிகைகளினதும் மற்றும் அறிக்கைகளினதும் தேட்டம்

கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக ஆண்டில் பல மாதங்கள் நூலகம் மூடப்பட்டிருந்ததுடன், புதிய நூல்கள் மற்றும் சஞ்சிகைகள் எதுவும் வாங்கப்படவில்லை. ஆண்டின் போது, நூலகத்திற்கு 32 சஞ்சிகைகள்/இதழ்கள் மற்றும் 53 நூல்கள் ஆகியன நன்கொடையாக கிடைத்தன.

### நூலகச் சேவைகள்

இலக்கியத் தேடல், உசாத்துணைச் சேவைகள், நடைமுறையிலுள்ள விழிப்புணர்வுச் சேவைகள் மற்றும் புகைப்படப்பிரதியெடுக்கும் சேவைகள் போன்ற தகவல் மற்றும் ஆவணமாக்கல் சேவைகள் ஆகியவற்றின் நிமித்தம், அத்தகைய ஆராய்ச்சிப் பணியாளர்களினதும் மற்றும் ஏனைய வெளித்தரப்பு பயனர்களினதும் வேண்டுகோள்கள் உரியவாறு கவனிக்கப்பட்டன.

நூலகத்தில் அமைக்கப்பட்டிருக்கின்ற Wi-Fi வசதியைக் கொண்டு, ஆராய்ச்சிப் பணியாளருக்கு இணையதள வசதி அடிப்படையிலான அணுகுதல் மேலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. பல வித்தியாசமான விடயங்கள் தொடர்பான செய்திக் கட்டுரைகளைத் தொகுத்தல் மற்றும் துரித குறிப்புக்கான கட்டுரைகளை சூசிகையிடுதல் ஆகிய கரும பணிகள் ஆராய்ச்சிப் பணியாளரினதும் மற்றும் வெளித்தரப்பு பயனர்களினதும் பாவனையின் நிமித்தம் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

### நூலகங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பு (ILC)

நூலகங்களுக்கு இடையிலான இரவல் வசதி ஊடாக ஹெ.கொ.க.ஆ.ப.நி. நூலகம் நூலக விடயதானங்களைப் வழங்குகின்றது. தற்போது பல்கலைக்கழகங்களுக்கும், விசேட நூலகங்களுக்கும் இடையிலேயே நூலகங்களுக்கு இடையிலான இரவல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இரவல் மீது வெளியீடுகளைப் பெறுவதற்கு முன்னர், நூலகங்களுக்கு இடையிலான இரவல் உடன்படிக்கையில் நூலகங்களுக்கு இடையிலான இரவல்களுக்காக வேண்டுகோள் விடுக்கின்ற நூலகங்கள் கைச்சாத்திட வேண்டும். அத்துடன் விசேடமாக பல்கலைக்கழகங்களுடன் ஈ-மெயில்களைப் பயன்படுத்தி எமது ஆராய்ச்சி நோக்கங்களுக்காக இலத்திரனியல் ஆவணங்கள் பரிமாறப்பட்டன.

2020ஆம் ஆண்டுக்கு தேசிய யூனியன் பட்டியலை புதுப்பிப்பதற்காக தேசிய நூலக சேவைகள் சபைக்கு நூலக தரவுத்தளத்திலிருந்து நூல் விவரப்பட்டியல் மேற்கோள்கள் வழங்கப்பட்டன.

### நிறுவகத்தின் வெளியீடுகளை டிஜிட்டல்மயமாக்கல்

ஹெ.கொ.க.ஆ.ப.நி. வெளியீடுகள் தேசிய விஞ்ஞான மன்றத்தினது தேசிய டிஜிட்டல்மயப்படுத்தல் கருத்திட்டத்தின் கீழ் வெற்றிகரமாக டிஜிட்டல்மயப்படுத்தப்பட்டுள்ளதுடன், இவை http://harti.nsf.ac.lk மீது அணுகப்படலாம்.

நிறுவகம் சார்ந்த ஒரு இ-களஞ்சிய வசதியைத் தாபிப்பதும் மற்றும் நிறுவகத்தின் வெளியீடுகளுக்கு துரிதமான வினைத்திறன்வாய்ந்த ஒரு 'ஒன்லைன்' வசதியை அளிப்பதுமே இந்தக் கருத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

| ஹெ.கொ.க.ஆ.ப.நி. வெளியீடுகள் | தொகுப்புப் பெயர் | சேகரிப்புப் பார்வைகள் |
|---|---|---|
| | வருடாந்த அறிக்கைகள் | 90 |
| | வருடாந்த அறிக்கைகள் (தமிழ்) | 50 |
| | சட்டங்கள் | 46 |
| சஞ்சிகைகள் | Sri Lanka Journal of Agrarian Studies | 80 |
| | கொவி கட்டயுது அத்தியனய | 130 |
| | கொவிஜனதா | 90 |
| | கொவிஜனதா | 120 |
| ஆராய்ச்சி அறிக்கைகள் | தனிவிவர நூல்கள் (ஆங்கிலம்) | 132 |
| | தனிவிவர நூல்கள் (சிங்களம்) | 120 |

**நூலக மேம்படுத்தல் நடவடிக்கைகள்**

| [illegible] | [illegible] |
|---|---|
| ஜப்பான் | 275 |
| இலங்கை | 658 |
| அமெரிக்கா | 198 |
| ஜெர்மனி | 68 |
| ரஷ்யா | 121 |
| பிரான்ஸ் | 7 |
| தென் கொரியா | 32 |
| Côte d"Ivoire/ஐவரி கோஸ்ட் | 12 |
| ஐரோப்பிய ஒன்றியம் | 22 |
| ஆஸ்திரேலியா | 19 |
| இந்தியா | 60 |
| இத்தாலி | 9 |
| ஐக்கிய இராச்சியம் | 11 |
| சீனா | 20 |
| ஐக்கிய அரபு நாடுகள் | 5 |
| சுவிட்சர்லாந்து | 10 |
| பிலிப்பைன்ஸ் | 12 |

பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும்

ஹெ.கொ.க.ஆ.ப.நி.க்கு வருகைதந்தோர் மத்தியில் ஹெ.கொ.க.ஆ.ப.நி. நூலகம் பற்றிய விளம்பர துண்டுப் பிரசுரம் விநியோகிக்கப்பட்டது.

## வெளியீட்டு அலகு

புள்ளிவிபரங்கள், தரவுகள் படிமுறைப்படுத்தல் பிரிவு/வெளியீட்டு பிரிவு/நூலகம் மற்றும் புவியியல் தகவல் முறைமை அலகு ஆகியவற்றின் நோக்கெல்லையின் கீழ் வெளியீட்டு அலகு செயல்படுகிறது. மூன்று மொழிகளிலும் ஆராய்ச்சி அறிக்கைகள், அவ்வப்போது வரும் அறிக்கைகள், பத்திரிகைகள், செய்திமடல்கள், தகவல் திரட்டுக்கள், கையேடுகள், பிரசுரங்கள் மற்றும் பிற தகவல் விடயதானங்கள் ஆகியவற்றைப் பதித்தல் மற்றும் வெளியிடுதல் ஆகியவை இதன் முக்கிய செயல்பாடுகளாகும்.

2020ஆம் ஆண்டில், 11 ஆராய்ச்சி அறிக்கைகள் சிங்களத்திலும் மற்றும் ஆங்கிலத்திலும் வெளியிடப்பட்டன. வெளியீடுகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**ஆராய்ச்சி அறிக்கைகள்**

1. பெண்கள் கமக்காரர் அமைப்புகளினதும் மற்றும் அதிகாரமளித்தல் தேவைகளினதும் ஒரு மதிப்பீடு
2. ஊவா மாகாணத்தில் உள்ள கிராமப்புற ஏழைகளுக்கான நுண்-கடன்களுக்கான அணுகல் மற்றும் பயன்பாடு
3. இலங்கை நெல் செய்கையில் பூச்சிக்கொல்லிப் பாவனையைக் குறைப்பதற்கான சாத்தியங்கள்: இடர் முகாமைத்துவம் மீதான ஒரு வலியுறுத்தல்
4. இலங்கையின் வட மத்திய மாகாணத்தில் நுகர்வுக்கான பாதுகாப்பான நீரின் ஆதாரமாக மழைநீரை ஊக்குவிப்பதற்கான சாத்தியம்
5. உணவுப் பாதுகாப்பிற்கான சுதேசிய அறிவின் முக்கியத்துவம்: நெல் செய்கை தொடர்பாக
6. திரவ மற்றும் தூள் பாலுக்கான நுகர்வோர் வாங்கும் நடத்தை மற்றும் விருப்புரிமை
7. நெல் சந்தைப்படுத்துதலில் அரசாங்கத்தின் தலையீடு: கொள்முதல் மற்றும் பிந்திய பங்கு நிர்வாகத்தில் உள்ள சிக்கல்கள்
8. சேதன உணவுக்கான ஏற்றுமதிச் சந்தை: தற்போதைய நிலை, கட்டுப்பாடுகள் மற்றும் எதிர்கால நோக்கெல்லை
9. இலங்கையில் பொலித்தீன் பைகள் மற்றும் லஞ்ச் ஷீட்டுகளுக்கு தடை: தாக்கம், சவால்கள் மற்றும் மாற்று வழிகள்
10. இலங்கையில் நல்ல கமத்தில் நடைமுறைகள் (GAP): நிலை, சவால்கள் மற்றும் கொள்கை தலையீடுகள்
11. ஊவா மற்றும் கிழக்கு வனவிலங்கு பகுதிகளில் மனித-வனவிலங்கு மோதலின் இயல்பு, நிலை மற்றும் தற்போதைய போக்குகள்

மேலதிகமாக, பின்வரும் பருவ இதழ்களும் வெளியிடப்பட்டன:

1. கொவிஜனதா – தொகுதி 22, முதலாவது இதழ், 2020
2. கொவிஜனதா – தொகுதி 22, இரண்டாவது இதழ், 2020
3. கொவிஜனதா – தொகுதி 22, மூன்றாவது இதழ், 2020
4. கொவிஜனதா – தொகுதி 21, நான்காவது இதழ், 2020
5. கொவிகட்டாயுது புவத் ஹசுன, தொகுதி 43, எண். 04, 2019
6. கொவி கட்டாயுது புவத் ஹசுன, தொகுதி 44, எண். 1 மற்றும் 2, 2020 (இணையதளத்தில் பதிவேற்றப்பட்டது)

**ஆண்டு முழுவதும் தேசிய செய்திப்பத்திரிகைகளில் வெளியான கட்டுரைகள்**

| | கட்டுரை | செய்திப்பத்திரிகை | திகதி |
|---|---|---|---|
| 1. | அரிசி மற்றும் மரக்கறி விலை பற்றிய முன்னறிவிப்பு | தினமின | 07.01.2020 |
| 2. | கிழக்கின் தானியக் களஞ்சியத்தை புதுப்பித்தல் | டெயிலி நியூஸ் | 19.02.2020 |
| 3. | கொவிட்-19 மற்றும் உணவு விநியோகச் சங்கிலிகளில் அதன் தாக்கம் | டெயிலி நியூஸ் | 28.05.2020 |
| 4. | கமத்தொழில் நிலத்தின் உற்பத்திக்கு நிலத்தை ஒருங்கிணைத்தல் | தினமின | 10.07.2020 |
| 5. | சிறு போகத்திற்கு நல்ல நேரம் | அருண | 10.08.2020 |
| 6. | கமத்தொழில் வளர்ச்சியில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு முதலீடு | தினமின | 05.08.2020 |
| 7. | ஹெக்டர்கொப்பேகடுவின் 37வது நினைவு தினம்நாளை: அவர் கமக்காரர்களின் நண்பராக | டெயிலி நியூஸ் | 17.09.2020 |
| 8. | உலக உணவு தினம் நாளை - தேசிய உணவுப் பாதுகாப்பில் உணவுப் பாதுகாப்பு ஒரு முக்கிய கரிசனை | டெயிலி நியூஸ் | 15.10.2020 |
| 9. | வளர்ப்போம் நம்மை நாமே வளர்க்கக் கொள்வோம் கொரோனா தொற்றை எதிர்கொள்வோம். | திவயின | 19.10.2020 |
| 10. | ஹெக்டர் கொப்பேகடுவவின் சிறப்பம்சங்கள் நினைவு சொற்பொழிவு: அவரது பார்வை, சுபீட்சத்தின் காட்சி வரிசை மற்றும் பிரகாசம் என்பதற்கு ஓர் இணைப்பு | டெயிலி நியூஸ் | 20.10.2020 |
| 11. | Z- மதிப்பெண் தோல்வியை மீள் மேடையேற்றுதல் | த ஐலண்ட் | 13.11.2020 |
| நலன்புரி சாதனங்கள் | 3,734.55 | - - | 3,734.55 | 3,733.55 | 48,493,279.43 | 3,733.55 | 1.00 |
| **மொத்தம்** | **182,092,297.17** | **978,664.02** | **183,070,961.19** | **159,474,658.32** | **4,532,354.81** | **164,007,013.13** | **19,063,966.06** |

10 காணி மற்றும் கட்டிடங்கள்

சொத்துக்களின் தேய்மானத்தின் அட்டவணை - 2020 டிசம்பர் 31

| **விபரங்கள்** | 01.01.2020இல் உள்ளவாறு ஆகுசெலவு | 2020ஆம் ஆண்டின் போது மேலதிகங்கள்/ (விற்றொழித்தல்) | 31.12.2020இல் மொத்த ஆகுசெலவு | 01.01.2020இல் உள்ளவாறு திரட்டல்/ தேய்மானம் | 2020ஆம் ஆண்டுக்கு தேய்மானம் | 31.12.2020இல் முடிவடைந்த திரட்டல்/ தேய்மானம் | 31.12.2020இல் உள்ளவாறு நிகர பெறுமதி |
|---|---|---|---|---|---|---|---|
| காணி | 1,857,387.00 | | 1,857,387.00 | - | - | - | 1,857,387.00 |
| கட்டிடங்கள் | 55,946,549.56 | 383,715.00 | 56,330,264.56 | 20,106,806.05 | 1,298,260.09 | 21,405,066.14 | 34,925,198.42 |
| | **57,803,936.56** | 383,715.00 | **58,187,651.56** | **20,106,806.05** | **1,298,260.09** | **21,405,066.14** | **36,782,585.42** |

11 **நடந்துகொண்டிருக்கும் வேலை**

| | | | |
|---|---|---|---|
| ஆரம்ப மீதி 01.01.2020 | | 1,539,951.30 | #REF! |
| (கழிக்குக): உபகரணங்கள் கணக்குக்கு கை | 1,036,301.30 | | |
| கட்டிட கணக்குக்கு கைமாற்றம் | 383,715.00 | | |
| **கடன்வழங்குனர் கணக்குக்கு சீராக்கல்** | | | |
| மல்மீடியா புரஜெக்டர் (PO 223) | 115,000.00 | | |
| மைக்ரோபோன் வலை வித்தியாச | 4,935.00 | 1,539,951.30 | |
| மூடுதல் மீதி 31.12.2020 | | - | |

LKR

| | கொடுமதிகள் | 2020 | 2019 |
|---|---|---|---|
| 12 | திரண்ட செலவுகள் | 9,281,062.21 | 8,621,848.58 |
| | கொடுப்பனவுக்குரிய ஆராய்ச்சி, பயிற்சிச் செலவுகள் | 470,300.00 | 1,216,781.39 |
| | மீளளிக்கத்தக்க கேள்விமனு வைப்பு | 139,462.20 | 133,462.20 |
| | மளளாகததகக உணவக வவபப உபதலைம பணைகான | 50,000.00 | 50,000.00 |
| | சம்பள முற்பணம் | - | - |
| | கொடுப்பனவாகாத செலவினம் | 188,930.44 | 267,135.56 |
| | பதவி விலகிய ஊழியர்களுக்கு கொடுப்பனவுக்குரியது | 189,150.61 | 189,150.61 |
| | கொடுப்பனவுக்குரிய முத்திரை வரிகள் | 13,550.00 | 16,225.00 |
| | பிடித்துவைத்த தொகைகள் | 136,526.06 | 136,526.06 |
| | கடன்வழங்குனர்கள் | 601,748.15 | 1,720,160.05 |
| | நலன்புரிச் சங்கம் | 11,890.00 | - |
| | செலுத்த வேண்டிய பணிக்கொடை | 126,912.50 | 126,912.50 |
| | அமைச்சுக்கு செலுத்த வேண்டிய தொகை | 94,358.05 | 94,358.05 |
| | முகாமைத்துவ அபிவிருத்தி நூல் | 8,000.00 | 10,000.00 |
| | விசேட முற்பணம் | - | - |
| | தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்திற்கு கொடுப்பனவுக்குரியது | - | 84,000.00 |
| | திரு.நாராயணசாமிக்கு கொடுப்பனவுக்குரியது | 10,800.00 | 9,000.00 |
| | முன்கூட்டியே பெறப்பட்ட விடுதி வருமானம் | 26,768.50 | 43,528.00 |
| | | 13,712.11 | - |
| | துரித உணவு பாதுகாப்பு மற்றும் தேவை மதிப்பீடு | | |
| | R-512 - பூகோள மாற்றமும், நிலைபெறுதகுதன்மையும்: இலங்கையின் கமத்தொழில் ஆராய்ச்சி தொழில்நுட்ப ஆளணியினரின் ஆற்றல் அபிவிருத்தி | 7,774.28 | 7,774.28 |
| | R-530 இலங்கையில் தெரிவுசெய்யப்பட்ட பிராந்தியங்களில் வாழை, மா மற்றும் அன்னாசிப் பயிர்களுக்கு பெறுமதிச் சங்கிலியைப் பலப்படுத்துவதற்கான அடிமட்ட ஆய்வு | 22,831.18 | 22,831.18 |
| | R-535 இலங்கையின் மகாவலி ஆற்றுப் படுக்கையில் வாழ்கின்ற விளிம்புநிலையிலான கமத்தொழில் சனசமூகங்களின் காலநிலை மாற்றத் தாக்கங்களைக் கவனத்திற்கெடுத்தல் | 2,518,787.32 | 2,716,082.09 |
| | R-540 பயிர்ச்செய்கை முறைமைகளின் நிலைத்திருத்தல் மற்றும் காலநிலை மீளுதல் தீவிரமாக்கல் மீது "சேமித்தலும், வளர்த்தலும்" பிராந்திய உபாயங்கள் அணுகுமுறையை அமுலாக்குவதற்கான அடிப்படையைக் கட்டியெழுப்புதல் | 440,981.34 | 440,981.34 |
| | சேவை ஒப்பந்தம் - 03-2017 | 245,901.88 | 245,901.88 |
| | R-559 இலங்கையில் பல்வேறு பயிர்களுக்கு சொட்டு நீர் பாசன தொழில்துட்பங்களுக்கான ஆற்றல் / நீர் அடிப்படை மதிப்பீடு | 695,062.86 | 695,062.86 |
| | R-561 இலங்கை அனுராதபுர மாவட்டத்தில் அரிசி உற்பத்தியில் மேம்பட்ட விவசாய விரிவாக்க சேவைகளின் தாக்கம் குறித்த சான்றுகள் | 89,594.82 | 1,799,880.00 |
| | சேவை ஒப்பந்தம் 01-2019 | 527,500.00 | 415,550.00 |
| | சேவை ஒப்பந்தம் 01-2020 | 488,404.22 | - |
| | R-540 பயிர் முறைகளின் நிலையான மற்றும் காலநிலையை எதிர்க்கும் தீவிரம் குறித்த பிராந்திய உத்திகளை "சேமி மற்றும் வளர்ச்சி" நடைமுறைப்படுத்துவதற்கான அடிப்படையை உருவாக்குதல் | 807,072.42 | - |
| | | **17,207,081.15** | **19,063,151.63** |

| | ஊழியர் நன்மைகள் | | |
|---|---|---|---|
| 13 | ஜனவரி 01 இல் உள்ளவாறு நிலுவை | 57,562,752.50 | 52,241,966.50 |
| | ஆண்டின் போது கொடுப்பனவுகள் | 1,048,835.00 | 5,481,894.00 |
| | ஆண்டிற்கான ஏற்பாடு | 10,912,232.50 | 10,802,680.00 |
| | டிசம்பர் 31இல் உள்ளவாறு மீதி | **67,426,150.00** | **57,562,752.50** |

| | அரசாங்க மூலதன மானியம் | | |
|---|---|---|---|
| 14 | ஜனவரி 01இல் உள்ளவாறு நிலுவை | 44,971,154.73 | 51,821,985.57 |
| | ஆண்டின் போது மூலதன பங்களிப்பு | 500,000.00 | 17,585,000.00 |
| | ஆராய்ச்சி மற்றும் பயிற்சி செயற்பாடுகளுக்கு கிள | (500,000.00) | (15,694,578.53) |
| | ஆண்டிற்கான கடன்தீர்ப்பு | (5,830,614.90) | (8,741,252.31) |
| | கொள்வனவுசெய்யப்பட்ட வாகனத்திற்கான மதிப்பி | - | - |
| | டிசம்பர் 31இல் உள்ளவாறு மீதி | **39,140,539.83** | **44,971,154.73** |

| | ஒதுக்கங்கள் | | |
|---|---|---|---|
| 15 | கீர்த்தநாட்ட மூலதன நிதி | - | - |
| | மூலதன ஒதுக்கம் | 1,675,000.00 | 1,675,000.00 |
| | ஊக்குவிப்பு நிதி - நிறுவகத்தின் பங்கு | 1,701,906.90 | 1,701,906.90 |
| | | **3,376,906.90** | **3,376,906.90** |

| | ஊக்குவிப்பு மற்றும் பயிற்சி நிதிகள் | | |
|---|---|---|---|
| 16 | கருத்திட்டத்திலிருந்து வரும் 10% ஊக்குவிப்பு நிதி | 8,611.38 | 8,611.38 |
| | | **8,611.38** | **8,611.38** |

LKR

| | திரண்ட பற்றாக்குறைகள் | 2020 | 2019 |
|---|---|---|---|
| 17 | ஜனவரி 01இல் உள்ளவாறு மீதி | (5,259,242.92) | (3,230,944.18) |
| | நிறுவக நிதிகளில் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களின் மீள்விலை மதிப்பீட்டு ஒதுக்கம் | - | - |
| | திறைசேரி மானியத்தில் வாங்கிய வாகனம் 2014 சே | - | - |
| | பயிற்சி நிதிகள் திட்ட இருப்பு | (135,674.92) | - |
| | முந்தைய ஆண்டு சீராக்கல் - ஆண்டுக்கு | (944,921.00) | 37,052.86 |
| | டிசம்பர் 31இல் உள்ளவாறு வருமானத்தின் மேலான செலவினம் | (16,201,195.71) | (2,065,351.60) |
| | டிசம்பர் 31இல் உள்ளவாறு மீதி | **(22,541,034.55)** | **(5,259,242.92)** |

| | ஏனைய வருமானம் | | |
|---|---|---|---|
| 18 | விடுதிக் கட்டணங்கள் | 4,779,071.00 | 13,303,731.02 |
| | மாநாட்டு மண்டபக் கட்டணங்கள் | 6,015,100.00 | 15,997,250.00 |
| | மொபிட்டெல் வாடிக்கையாளர் சேவை வருமானம் | 84,815.21 | 120,200.77 |
| | வெளியீடுகளின் விற்பனை | 21,095.00 | 80,309.00 |
| | முதலீடுகள் மீதான வட்டி | 232,900.85 | 256,888.99 |
| | ஊழியர் கடன் மீதான வட்டி | 942,952.18 | 933,952.13 |
| | கருத்திட்டங்களிலிருந்து வரும் மீண்டெழும் பங்களி | 129,975.24 | 846,932.77 |
| | பங்களா கட்டணங்கள் மற்றும் அறை வாடகை | 99,078.00 | 91,619.95 |
| | பெல்வெஹர அறை வாடகை | - | 28,950.00 |
| | கணனி வருமானம் | 308.00 | - |
| | கேள்விமனுக் கட்டணங்கள் | 838,872.39 | 64,002.43 |
| | மனித வலு வருமானம் | 5,896,770.40 | 129,975.91 |
| | வேறு வருமானம் | - | 177,000.00 |
| | விநியோகஸ்தரின் பதிவு | 19,450.00 | 32,250.00 |
| | விளம்பர வருமானம் | - | 19,870.00 |
| | அதிகப்படியான கையிருப்பு | 240,000.00 | - |
| | அறிக்கை எழுதுதல் (இடைக்கால, தரவு மற்றும் இறுதி அறிக்கை) வருமானம் | 450,000.00 | - |
| | அரிசி மற்றும் வே.க.ப. துறைகள் மீது பின்னணி விடயதானத்தைத் தொகுத்தல் மற்றும் விரிவான பின்னணியொன்றை வரைதல் | 50,000.00 | - |
| | பொருளாதார பகுப்பாய்வுக்கான வருமான பங்களிப்பு மற்றும் பொருள்விளக்க வருமானம் | 48,000.00 | - |
| | கழிவுப் பொருள் அகற்றல் | 12,050.00 | - |
| | கேள்விக் கட்டணங்கள் | 3,000.00 | - |
| | | **19,863,438.27** | **32,082,932.97** |

| | வேதனாதிகள், சம்பளங்கள் மற்றும் ஊழியர் நன்மைகள் | | |
|---|---|---|---|
| 19 | சம்பளம் - நிரந்தர ஊழியர்கள் | 92,684,649.23 | 86,888,993.04 |
| | சம்பளம் - ஆய்வாளர்கள் | 8,328,830.00 | 12,932,062.53 |
| | வாழ்க்கைப்படிச் செலவுக் கொடுப்பனவு, விசேட கொடுப்பனவு, வேறு | 24,739,048.30 | 31,451,303.22 |
| | ஊ.சே.நி. (EPF) | 17,513,688.15 | 17,485,167.32 |
| | ஊ.ந.நி. (ETF) | 3,502,736.83 | 3,497,032.27 |
| | மேலதிகநேரக் கொடுப்பனவு | 2,399,683.47 | 5,051,178.77 |
| | பணிக்கொடை | 10,912,232.50 | 10,802,680.00 |
| | | **160,080,868.48** | **168,108,417.15** |

LKR

| | | 2020 | 2019 |
|---|---|---|---|
| | **ஏனைய செலவுகள்** | | |
| 20 | உள்நாட்டு வாழ்க்கைப்படி மற்றும் உள்நாட்டு போக்குவரத்துச் செலவு | 972,663.05 | 1,746,142.18 |
| | வெளிநாட்டுப் பிரயாணக் கொடுப்பனவு | - | 67,772.77 |
| | காகிதாதிகளும் அலுவலகத் தேவைகளும் | 807,231.78 | 3,034,873.17 |
| | எரிபொருள் மற்றும் உராய்வுநீக்கிகள் | 424,812.30 | 1,212,026.39 |
| | சீருடைகள் | 163,108.40 | 415,708.42 |
| | வாகனங்களின் பழுதுபார்ப்புகள் | 725,810.67 | 1,553,772.54 |
| | கட்டிடங்கள் பராமரிப்பு | 280,962.90 | 2,048,644.33 |
| | பொறித்தொகுதிகள், இயந்திராதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் பழுதுபார்ப்புகள் | 1,095,475.24 | 1,835,323.58 |
| | தொலைபேசிக் கட்டணங்கள் | 3,795,190.74 | 3,295,188.47 |
| | மின்சாரம் | 3,145,444.20 | 5,162,274.02 |
| | தண்ணீர் சிட்டைகள் | 495,343.09 | 1,156,255.88 |
| | உள்ளூராட்சி மன்றங்களுக்கான வரிகள் | 579,456.00 | 579,456.00 |
| | தபால் கட்டணங்கள் | 250,100.00 | 609,870.00 |
| | போக்குவரத்து | 347,939.96 | 594,560.00 |
| | வாகனங்களுக்கான தொழில்நுட்ப ஆலோசனை | 60,000.00 | 90,000.00 |
| | நிர்மாணத்திற்கான தொழில்நுட்ப ஆலோசனை | 30,000.00 | 90,000.00 |
| | செய்திப்பத்திரிகைகள் | 125,080.00 | 271,796.00 |
| | அனுமதிப்பத்திரங்களும் காப்புறுதியும் | 802,103.77 | 1,061,870.63 |
| | பாதுகாப்புக் கட்டணங்கள் | 5,053,160.00 | 3,036,000.00 |
| | துப்புரவேற்பாடு சார்ந்த சேவைகள் | 726,644.02 | 1,240,080.49 |
| | சலவைச் சேவைகள் | 225,645.00 | 435,520.00 |
| | கணக்காய்வுக் கட்டணங்கள் | 747,606.00 | 986,000.00 |
| | மருத்துவக் காப்புறுதி | 978,500.00 | 1,015,500.00 |
| | சிற்றுண்டிச்சாலைக் கட்டணங்கள் | 75,410.00 | 109,034.00 |
| | நானாவித செலவுகள் - ஏனையவை | 138,602.20 | 368,447.00 |
| | சட்டமுறையான கட்டணங்கள் | 102,000.00 | 591,716.00 |
| | நலன்புரி சேவை | 98,159.00 | 200,475.00 |
| | விளம்பரம் | 18,360.00 | 1,908,253.01 |
| | நேர்முகப் பரீட்சை தொடர்பான கட்டணங்கள் | - | 68,801.00 |
| | ஆளுநர் சபை உறுப்பினர்கள் | 83,015.00 | 608,435.00 |
| | அச்சீடும் வெளியீடும் | 823,768.80 | 1,915,540.02 |
| | தகவல் பரம்பல் | 395,575.00 | 669,675.00 |
| | விற்பனை ஆகுசெலவு - வெளியீடுகள் | 21,449.00 | 80,059.00 |
| | நிறுத்தி வைத்தல் வரி | - | 13,881.79 |
| | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு | 60,972.00 | 63,721.00 |
| | பணியாளர் அபிவிருத்தி | 444,566.43 | 2,101,080.92 |
| | வினைத்திறன் தடைகாண் (EB) பரீட்சைக் கட்டணங்கள் மற்றும் வேறு | - | 478,500.00 |
| | மொழிபெயர்ப்புக் கட்டணங்கள் | 50,290.00 | 150,547.50 |
| | உபகரணங்களுக்கும், ஏனையவற்றுக்கும் தொழில்நுட்ப ஆலோசனை | 30,000.00 | 89,500.00 |
| | அச்சிடப்பட்ட புத்தகங்களில் இழப்பு | - | 1,560.00 |
| | பங்கு பற்றாக்குறை | - | 8,200.00 |
| | கழிவுப் பொருள் அகற்றல் | 18,420.00 | 308,502.09 |
| | | **24,192,864.55** | **41,274,563.20** |
| | **பாவனைக்குரிய கழிவு ஒழித்தல் இழப்பு** | | |
| 20.1 | ஆகுசெலவு | - | 314,402.09 |
| | வருமானம் | - | (5,900.00) |
| | கழிவு ஒழித்தல் விடய இழப்பு (பாவனைக்குரிய) | **-** | **308,502.09** |

| | | | |
|---|---|---|---|
| 21 | **கொடுப்பனவுக்குரிய பணப் பாய்வுக் குறிப்பு** | | |
| | ஆரம்ப மீதி 01.01.2020 | 19,063,151.63 | |
| | மூடுதல் மீதி 31.12.2020 | 17,207,081.15 | |
| | வித்தியாசம் | (1,856,070.48) | |
| | பணமற்றசெயற்பாடு - சீராக்கல் கடன்தருனர்கள் கணக்கு | 119,935.00 | |
| | | (1,736,135.48) | |
| | **உட்கட்டமைப்பு,பொறி மற்றும் உபகரணங்கள்** | | |
| 22 | கணினி திசைவி கொள்வனவு | 7,500.00 | |
| | (-) பணம் எண்ணுதல் இயந்திர விற்பனை விலை | (300.00) | |
| | | 7,200.00 | |

*தலைவர்,*

*ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்.*

***2018இன் 19ஆம் இலக்க தேசியக் கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 12இன் பிரகாரம், 2020 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தின் நிதிசார் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை***

***1. நிதியின் கூற்றுக்கள்***

***1.1 தகுதிவாய்ந்த கருத்து***

*2020 டிசம்பர் 31இல் உள்ளவாறு, நிதிசார் கூற்றினையும் அத்துடன் நிதிசார் செயலாற்றுகையின் கூற்றினையும், அப்போது முடிவடைந்த ஆண்டுக்கான ஒப்புரவில் மாற்றங்களின் கூற்றினையும் மற்றும் பணப்பாய்ச்சல்களின் கூற்றினையும் அத்துடன் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் சாராம்சம் ஒன்றையும் 2020 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்காக ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தின் நிதிசார் கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை ஜனநாயக சோசலிஸக் குடியரசின் உறுப்புரை 154 (1)உடன் இணைந்து வாசிக்கத்தக்கதாக, 1971இன் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தினதும் மற்றும் 2018இன் 19ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளையும் பின்துரந்து, எனது பணிப்புரையின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. அரசியலமைப்பின் உறுப்புரை 154(6)இன் பிரகாரம், எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் அட்டவணைப்படுத்தப்படும்.*

*எனது கருத்துப்படி, எனது அறிக்கையின் தகுதிவாய்ந்த கருத்துப் பிரிவுக்கான அடிப்படையிலான விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் விளைவுகளுக்கு புறநீங்கலாக, இணைந்துள்ள நிதிசார் கூற்றுக்கள் 2020 டிசம்பர் 31இல் உள்ளவாறு கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்தின் நிதிசார் நிலையினதும் மற்றும் அப்போது முடிவடைந்த ஆண்டுக்கு அதன் நிதிசார் செயல்நிறைவேற்றத்தினதும் மற்றும் அதன் பணப் புழக்கத்தினதும் உண்மையானதும், நியாயமானதுமான கருத்தொன்றை இலங்கை அரசாங்கத் துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் உண்மையானதும், நியாயமானதுமான கருத்தொன்றை வழங்குகின்றன.*

***1.2 தகுதிவாய்ந்த கருத்திற்கான அடிப்படை***

***1.2.1 இலங்கை அரசாங்கத் துறை கணக்கீட்டு நியமங்கள்***

*இலங்கை அரசாங்கத் துறை கணக்கீட்டு நியமம் 01இன் பந்தியின் 48இன் பிரகாரம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அத்துடன் வருமானம் மற்றும் செலவினங்கள் ஆகியன நியமங்களின் வேண்டப்பட்டவாறு அல்லது அனுமதிக்கப்பட்டால் அன்றி ஈடுசெய்யப்படலாகாது. எனினும், முற்போந்த ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பெல்வெஹர சுற்று விடுதியின் புதுப்பித்தல் மற்றும் பராமரிப்புச் செயற்பாடுகளுக்காக தம்புள்ளை பிரதேச செலாளரிடமிருந்து மீள்நிரப்பப்படுவதற்கான ரூ. 1,962,545 கொண்ட தொகையொன்று சொல்லப்பட்ட சுற்றுலா விடுதிக்கு 2011 டிசம்பர் 12இலிருந்து 2019 டிசம்பர் 12 வரை கொடுப்பனவுக்குரிய ரூ. 1,000,000 கொண்ட குத்தகை வாடகைக்கு எதிராக ஈடுசெய்யப்பட்டும், கணக்கிடப்பட்டும் உள்ளது. மேலும், சொல்லப்பட்ட தொகையை மீள்நிரப்புவதற்கு பயனுறுதிவாய்ந்த நடவடிக்கையொன்று எடுக்கப்படவில்லை.*

### *1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்*

*2020 ஒக்ரோபர் 08இலிருந்து 2020 டிசம்பர் 31 வரை பிரதமரின் அலுவலகத்தின் பாதுகாப்பு அலுவலர்களுக்கு அறை வசதிகளை வழங்கியமைக்காக பதிவாளரினால் பிரதமரின் மேலதிகச் செயலாளருக்கு விலாசமிடப்பட்ட 2021 பெப்ரவரி 11 திகதியிடப்பட்ட இல.10/01/82(v) கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், மதிப்பாய்வின் கீழுள்ள ஆண்டில் கிடைக்கவேண்டிய வருமானமொன்றாக சொல்லப்பட்ட தொகை கணக்குக்கு கொண்டு வரப்படவில்லை. இதனால், விடுதிகளிலிருந்து வருமானமும், கிடைக்கவேண்டிய வருமானமும் சொல்லப்பட்ட தொகையினால் குறைத்துக் கூறப்பட்டுள்ளது.*

*இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், எனது கணக்காய்வை நான் நடத்தினேன். அந்த நியமங்களின் கீழ் எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிசார் கூற்றுக்கள் பிரிவின் கணக்காய்வுக்கு கணக்காய்வாளரின் பொறுப்புக்களில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. நான் பெற்றுள்ள கணக்காய்வுச் சான்று எனது தகுதிவாய்ந்த கருத்திற்கான ஓர் அடிப்படையை வழங்குவதற்கு போதுமானதும், பொருத்தமானதுமானதாகும் என நான் நம்புகிறேன்.*

### *1.3 நிறுவகத்தின் 2020 ஆண்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள வேறு தகவல்*

*நிதிசார் கூற்றுக்களிலும் மற்றும் எனது கணக்காய்வு அறிக்கையிலும் உள்ளடக்கப்படாத, ஆனால் நிறுவகத்தின் 2020 ஆண்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள இந்தக் கணக்காய்வு அறிக்கையின் திகதியின் பின் முன்வைக்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படும் தகவல் வேறு தகவலாக உத்தேசத்தைக் கொண்டுள்ளது. வேறு தகவலுக்கு நிருவாகம் பொறுப்பாக இருக்கவேண்டும்.*

*நிதிசார் கூற்றில் எனது கருத்தில் விபரிக்கப்படாத ஏனைய தகவலானது அந்த விடயம் மீது ஏதேனும் உறுதிப்பாட்டினை அல்லது கருத்தினை என்னால் வெளிப்படுத்த முடியாதுள்ளது.*

*மேலே குறிப்பிடப்பட்டுள்ள அடையாளங்காணப்பட்டுள்ள தகவல் கிடைக்கும் போதும் \அத்துடன் நிதிசார் கூற்றுக்களுடன் தொகைரீதியாக அல்லது அது செய்யப்படும் போது வேறு வழியில் பெறப்பட்டதாக எனது அறிவின்படியும் எனது கணக்காய்வின் நிதிசார் கூற்றுக்கள் மீது எனது பொறுப்பு வாசிக்கப்பட வேண்டும்.*

*நிறுவகத்தின் 2020 ஆண்டு அறிக்கை வாசிக்கப்படும் போது, அந்த ஆவணத்தில் தொகைரீதியான தவறுகள் காட்டப்பட்டுள்ளதாக நான் முடித்துவைத்தால், அந்த விடயங்கள் திருத்தங்களுக்காக கட்டுப்படுத்தும் தரப்புக்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும். மென்மேலும் திருத்தப்படாத தவறுகள் இருந்தால், அரசியலமைப்பின் 154(6)இன் பிரகாரம் என்னால் காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள அறிக்கையில் அவை உள்ளடக்கப்படும்.*

### *1.4 நிருவாகத்தினதும் மற்றும் நிதிசார் கூற்றுக்களுக்கு ஆட்சியுடன் சுமத்தப்பட்டுள்ளவர்களினதும் பொறுப்புக்கள்*

*இலங்கை அரசாங்கத் துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம், உண்மையானதும் மற்றும் நியாயமானதுமான கருத்தொன்றை வழங்குகின்ற நிதிசார் கூற்றுக்களின் தயாரிப்புக்கும் அத்துடன் மோசடியின் அல்லது தவறுகையின் காரணமாக பொருள்விடய தவறான கூற்றிலிருந்து சுதந்திரமான நிதிசார் கூற்றுக்களின் தயாரிப்பினை இயலச்செய்வதற்கு*

அவசியமானதென நிருவாகம் நிர்ணயிக்கின்றவாறு அத்தகைய உள்ளகக் கட்டுப்பாட்டுக்கும் நிருவாகம் பொறுப்பானதாகும்.

நிதிசார் கூற்றுக்களை தயாரிக்கையில் ஒன்றில் நிறுவகத்தை திரவநிலையாக்குவதற்கு அல்லது செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நிருவாகம் உத்தேசத்தைக் கொண்டிருந்தால் அன்றி அல்லது அவ்வாறு செய்வதற்கு உண்மைநிலையிலான மாற்றீடு இருந்தால் அன்றி கணக்கீட்டின் நடந்துகொண்டிருக்கும் கரிசனை தொடர்பாக விடயங்களை வெளிப்படுத்துவதற்கும், நடந்து கொண்டிருக்கும் கரிசனை அடிப்படையாகப் பயன்படுத்துவதற்கும் நிருவாகம் பொறுப்பாகும்.

ஆட்சியுடன் சுமத்தப்பட்டவர்கள் நிறுவகத்தின் நிதிசார் அறிக்கையிடல் நடைமுறையை மேற்பார்வை செய்வதற்கு பொறுப்பானவர்களாவர்.

*2018*இன் *19*ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் உப-பிரிவு *16(1)*இன் பிரகாரம், நிறுவகத்தின் ஆண்டு மற்றும் அவ்வப்பொழுதிலான நிதிசார் கூற்றுக்களை இயலச்செய்வதற்காக, சகல அதன் வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஆகியவற்றின் தோதான புத்தகங்களையும், பதிவேடுகளையும் பராமரிப்பதற்கு நிறுவகம் அவசியப்படுத்துகின்றது.

### *1.5 நிதிசார் கூற்றுக்களின் கணக்காய்வுக்கு கணக்காய்வாளர்களின் பொறுப்பு*

மோசடிகளின் அல்லது தவறுதலின் காரணமாக பொருளின் தவறான கூற்றிலிருந்து விடுபட்டிருக்கும் விதத்தில் முழு அளவொன்றாக நிதிசார் கூற்றுக்கள் பற்றி நியாயமான உறுதிப்பாட்டினைப் பெறுவதும் அத்துடன் எனது கருத்தினை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளரின் அறிக்கையொன்றை வழங்குவதும் எனது நோக்கமாகும். உறுதிப்பாட்டின் உறுதி மட்டமொன்றே நியாயமான உறுதிப்பாடு ஆகும். ஆனால், இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் நடத்தப்பட்ட கணக்காய்வொன்று எப்பொழுதுமே பொருள்விடய தவறான கூற்றொன்று நிலவும் போது அதை எப்பொழுதுமே கண்டுபிடிக்கும் ஓர் உத்தரவாதத்தை அளிக்கமாட்டாது. மோசடியிலிருந்து அல்லது தவறிலிருந்து தவறான கூற்றுக்கள் எழ முடியும் என்பதுடன், இந்த நிதிசார் கூற்றுக்களின் அடிப்படை மீது எடுக்கப்பட்ட பயனாளிகளின் பொருளாதாரத் தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தும் என நியாயபூர்வமாக எதிர்பார்க்கப்படும் விதத்தில் தனிப்பட்ட விதத்தில் அல்லது கூட்டுச்சேரும் விதத்தில் பொருள்விடயமாகக் கருதப்படுகின்றது.

இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வொன்றின் அங்கமாக, கணக்காய்வு முழுவதும் தொழில்வாண்மைக் கருத்தினை நிறைவேற்றுவதுடன் தொழில்வாண்மை சந்தேகத்தையும் பேணுகின்றேன். நான் அத்துடன்

- மோசடியினால் அல்லது தவறினால் இருந்தாலும் கூட நிதிசார் கூற்றுக்களின் பொருள்விடய தவறான கூற்றின் இடர்களை அடையாளங்காண்பதுடன், மதிப்பிடுகின்றேன். அந்த இடர்களுக்கு பதிலிறுப்பிலான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதுடன், நிறைவேற்றுகின்றேன். அத்துடன் எனது கருத்தின் அடிப்படையொன்றை வழங்குவதற்காக போதுமானதும், பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினைப் பெற்றுக்கொண்டேன். மோசடியிலிருந்து விளைகின்ற பொருள்விடய தவறான கூற்றொன்றைக் கண்டுபிடிக்காததன் இடரானது தவறிலிருந்து விளைகின்ற ஒன்றைவிட உயர்வானதாகும். ஏனெனில் சதித்திட்டம், கையாடல்,

வேண்டுமென்றேயான விடுகைகள், தவறான பிரதிநிதித்துவம் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டினை தள்ளிவைத்தல் ஆகியனவற்றை மோசடி சம்பந்தப்படுத்தலாம்.

- சூழ்நிலைக்குப் பொருத்தமான ஆனால் நோக்கத்திற்காக அன்றி கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுக்குத் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டின் புரிந்துணர்வொன்றைப் பெற்றுக்கொண்டேன்.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தத்தன்மையையும், கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையையும் மற்றும் நிருவாகத்தினால் செய்யப்பட்ட தொடர்பான வெளிப்படுத்தல்களையும் மதிப்பாய்ந்தேன்.

- நடந்துகொண்டிருக்கும் கரிசனையொன்றாக, தொடர்வதற்கு நிறுவகத்தின் தகுதி மீது குறிப்பிடத்தக்க ஐயத்தை முன்வைக்கக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பில் நிலவுகின்ற பொருள்விடய உறுதியற்ற தன்மையிருந்தாலும், கணக்கீட்டின் நடக்கின்ற கரிசனையின் அடிப்படையில், நிருவாகத்தின் பயன்பாட்டின் பொருத்தத்தன்மை மீது முடித்துவைத்துள்ளேன். பொருத்தவிடய உறுதியற்றதன்மை நிலவுகின்றது என நான் முடிவுசெய்தால், நிதிசார் கூற்றுக்களில் உள்ள தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனத்தை ஈர்ப்பதற்கு அல்லது அவ்வாறான வெளிப்படுத்தப்படல் போதாதென்றால் எனது கருத்தினை மாற்றியமைப்பதற்கு கேட்கப்படுவேன். எனது கணக்காய்வு அறிக்கையில் திகதி வரை பெறப்பட்ட கணக்காய்வு சான்று மீதான அடிப்படையில் எனது முடிவுரை விளங்கும். எனினும், நடந்து கொண்டிருக்கும் கரிசனையொன்றாகத் தொடர்வதற்கு எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்திற்கு ஏற்படக் கூடும்.

- வெளிப்படுத்தல்கள், நியாயமான சமர்ப்பணத்தை சாதிக்கும் தன்மையொன்றில் முக்கியமான கொடுக்கல்வாங்கல்களையும், நிகழ்வுகளை நிதிசார் கூற்றுக்களை பிரதிநிதிப்படுத்துகின்றனவா என்பன உட்பட நிதிசார் கூற்றுக்களின் முழுமையான சமர்ப்பணத்தையம், கட்டமைப்பையும் மற்றும் உள்ளடக்கத்தை மதிப்பாய்ந்தேன்.

எனது கணக்காய்வின் போது நான் அடையாளம் கண்டுள்ள உள்ளகக் கணக்காய்வில் உள்ள ஏதேனும் குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உட்பட வேறு விடயங்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க கணக்காய்வு முடிவுகள் தொடர்பில் ஆட்சியுடன் சுமத்தப்பட்டுள்ளவற்றுடன் நான் தொடர்பாடலைக் கொண்டிருந்தேன்.

## 2. வேறு சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைகள் மீதான அறிக்கை

2.1.1 வழங்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகள், 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6 (1) (ஈ) (iii)இன் தேவையின்படி முந்தைய ஆண்டுடன் ஒத்துப்போகின்றன.

2.1.2 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6 (1) (ஈ) (iv)இன் தேவையின்படி, முந்தைய ஆண்டில் என்னால் செய்யப்பட்ட இந்த அறிக்கையில் உள்ள பத்தி 1.2.1,2.2.1(அ),(ஆ) 2.2.3(உ), 2.3 (ஆ) (ஊ),(எ) ஆகியவற்றில் காட்டப்பட்டுள்ள அவதானிப்புகள் புறநீங்கலாக, அனைத்து பரிந்துரைகளும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளில் உள்ளடங்குகின்றன.

*2.2 நிறைவேற்றப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெறப்பட்ட சான்றுகள் ஆகியவற்றின் அடிப்படையில் பொருள் சார்ந்த விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட எதுவும் என் கவனத்திற்கு வரவில்லை.*

*2.2.1 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (ஈ)இன் தேவையின்படி, நிறுவகத்தால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு ஒப்பந்தத்திலும் நிறுகத்தின் ஆளும் குழுவில் உள்ள எந்தவொரு உறுப்பினரும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆர்வம் கொண்டுள்ளார் என்பதைக் குறிப்பிடுதல்.*

*2.2.2 பின்வரும் அவதானிப்புகள் புறநீங்கலாக, **2018**ஆம் ஆண்டின் **19**ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு **12 (ஊ)**இன் தேவையின்படி, நிறுவகத்தின் ஆட்சிக் குழுவால் வழங்கப்பட்ட பொருந்தக்கூடிய எழுதப்பட்ட சட்டம், பொது மற்றும் சிறப்பு வழிகாட்டுதல்களுக்கு நிறுவகம் இணங்கவில்லை என்பதைக் குறிப்பிடுதல்.*

| **சட்டங்கள், விதிகள், ஒழுங்குமுறைகள் போன்றவற்றுக்கான மேற்கோள்** | **இணக்கமின்மை** |
|---|---|
| *----------* | *----------* |
| *(அ) நிதிசார் ஒழுங்குவிதி 756* | *2020ஆம் ஆண்டில், நூலகப் புத்தகங்கள் பற்றிய கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன், அதன் அறிக்கைகள் கணக்காய்வுக்கு வழங்கப்படவுமில்லை* |
| *(ஆ) 14 டிசம்பர் 2010 தேதியிட்ட அரச நிறுவனங்கள் சுற்றறிக்கை இல. PED 55* | *2020ஆம் ஆண்டில், 02 கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் மட்டுமே நடைபெற்றன.* |

*2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (எ)இன் தேவையின்படி நிறுவகம் அதன் அதிகாரங்களினதும், செயல்பாடுகளினதும் மற்றும் கடமைகளினதும் பிரகாரம் செயற்படவில்லை என்பதைக் குறிப்பிடுதல்.*

*2.2.4 பின்வரும் அவதானிப்புகள் புறநீங்கலாக, 2018இன் தேசிய கணக்காய்வுச் சட்டம், இல. 19இன் பிரிவு 12 (ஏ)இன் தேவையின்படி பொருந்தக்கூடிய சட்டங்களுக்கு இணங்க, காலக்கெடுவிற்குள், நிறுவகத்தின் வளங்கள் பொருளாதாரரீதியாகவும், திறமையாகவும், திறம்படவும் பெறப்பட்டு பயன்படுத்தப்படவில்லை என்பதைக் குறிப்பிடுதல்.*

*(அ) 2012-2015 காலப்பகுதியில் ரூ.1,031,020 செலவில் தலைமை அலுவலகத்தில் நிறுவப்பட்ட உயிரக வாயு அலகு 2016ஆம் ஆண்டு முதல் இயங்கி வந்ததுடன், 2018ஆம் ஆண்டில் ரூ.22,500 முன்பணம் செலுத்தி ஒரு பலூன் வாங்கப்பட்டது. இருப்பினும், 31 டிசம்பர் 2020இல் அலகின் மொத்தச் செலவு ரூ.1,053,520ஆக இருந்த நிலையில், அலகின் பிற தொழில்நுட்பப் பிழைகள் காரணமாகக் கூறப்பட்ட பலூன் நிறுவப்படவில்லை. இந்த அலகைப் பழுதுபார்க்கும் பணிகள் நீண்ட காலமாக மேற்கொள்ளப்படாமல் இருந்ததால், அந்த அலகின் இயந்திரம் செயலிழந்து, பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.*

(ஆ) 2015, 2016, 2018 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் ரூ.4,453,000 செலவழித்து நிறுவகத்தால் தொடங்கப்பட்ட ஏழு ஆராய்ச்சித் திட்டங்கள், 2020 டிசம்பர் 31இல் 01 ஆண்டு முதல் 05 ஆண்டுகள் வரை கூட நிறைவு செய்யப்படவில்லை. இந்த நிலைமையின் விளைவாக, சரியான நேரத்தில் தேவைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சித் திட்டங்களின் மூலம் உரிய பரிந்துரைகள் உரிய தரப்பினருக்கு உரிய காலத்திற்குள் பெறப்படவில்லை.

(இ) 2019ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2020ஆம் ஆண்டில் முடிக்கப்பட வேண்டிய 2019ஆம் ஆண்டு செயற்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 11 ஆராய்ச்சித் திட்டங்களுக்காக ரூ. 8,366,000 செலவிடப்பட்ட போதிலும், அந்தத் திட்டங்கள் 31 டிசம்பர் 2020இல் கூட நிறைவு செய்யப்படவில்லை என்பதுடன், அறிக்கைகளும் வெளியிடப்படவில்லை.

(ஈ) நிறுவகத்தின் முதன்மைப் பணியான ஆராய்ச்சித் திட்டங்களை நடத்துவதன் மூலமும், நவீன அறிவைத் தேவையான தரப்பினருக்கு வழங்குவதன் மூலமும் உருவாக்கப்படும் ஆராய்ச்சிகளைக் கண்டறிவதற்கான அடையாளங்காணப்பட்ட வேலைத்திட்டங்கள் வருடாந்தமோ அல்லது ஒருமுறையோ முறையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டதுடன், 2017, 2018, 2019 மற்றும் 2000 ஆகிய ஆண்டுகளில் ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிடுவதற்கான செயல் திட்டத்திலான ஏற்பாடுகளின் ஒதுக்கீடும். செய்யப்படவில்லை.

(உ) 2017ஆம் ஆண்டு நிறுவகத்தின் புதிய கட்டிடத்தின் கூரையைப் பழுதுபார்ப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூ.123,220 பெறுமதியான எண்பத்தி இரண்டு அஸ்பெஸ்டஸ் விரிப்புக்கள் பாதுகாப்பற்ற முறையில் நிறுவகத்தில் சேமித்து வைக்கப்பட்டிருந்த்துடன், அவற்றில் பெரும்பாலானவை மதிப்பாய்வின் கீழ் உள்ள ஆண்டில் அழிவடைந்திருந்தன

2.3 **வேறு விடயங்கள்**

(அ) 2019ஆம் ஆண்டின் வருடாந்த செயல்திறன் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) 31 டிசம்பர் 2020இல் உள்ளவாறு 2002ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்து தொடர்ந்தும் உள்ள வெளிநாட்டுப் புலமை கடன்தருனர்களிடமிருந்து ரூ.12,874,881 தொகையை மீளப்பெற வேண்டும் என்பதுடன், அது சொல்லப்பட்ட மீதியை மீளப்பெறவும் தவறிவிட்டது.

(இ) 03 ஜனவரி 2006 அன்று வழக்குத் தொடருமாறு சட்டமா அதிபருக்கு அறிவிக்கப்பட்ட போதிலும், வெளிநாட்டு முகவரி இல்லாத காரணத்தால் வெளிநாட்டுப் புலமை கடன்தருனரான ஆராய்ச்சி உத்தியோகத்தர் எம்.எஸ்.கௌரிசங்கர் என்பவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அந்தவகையில், 2019 டிசம்பர் 31இல் அவரிடமிருந்து மீளப்பெறக்கூடிய ரூ. 3,634,110இல் எந்தப் பணத்தையும் 2020ஆம் ஆண்டில் கூட மீளப் பெற முடியவில்லை என்பதுடன், சொல்லப்பட்ட முகவரியைக் கண்டறிய நிறுவகம் தனது கவனத்தை ஈர்க்கவும் இல்லை.

(ஈ) மொத்த கடன்தருனர் மீதியான ரூ.25,508,310இல், வெளிநாட்டுப் புலமை கடன்தருனர்களைத் தவிர, ரூ.610,215 2020 கொண்ட ஏனைய கடன்தருனர்களின் மீதியானது டிசம்பர் 31இல் உள்ளவாறு 05 வருட காலமொன்றுக்கு மேலாக மீளப் பெறப்படாமல் இருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டதுடன், இதில் சொல்லப்பட்ட கடன் மீதியில் ஊழியர்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய ரூ.482,304 தொகையும் அடங்குகின்றது.

*(உ)* மதிப்பாய்வின் கீழுள்ள ஆண்டின் டிசம்பர் *31*ஆம் திகதியன்று செலுத்த வேண்டிய கடன்வழங்குனர் மீதியான ரூ.*17,207,081*இல் ரூ.*626,737* மீதியானது *05* வருட காலமொன்றுக்கு மேலாக தொடர்ந்துமே தீர்க்கப்படாமல் இருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

*(ஊ)* விவசாய அமைச்சரின் சாரதிகளுக்காக தங்கும் விடுதிகளின் அறைகளை வாடகைக்கு எடுத்ததற்காக *2015* செப்டெம்பர் முதல் ஜூலை வரையான காலப்பகுதியில் அறவிடப்பட வேண்டிய தொகையான *8,895,470* ரூ.வை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

*(எ)* ஐக்கிய நாடுகளின் உணவு, விவசாய அமைப்பினால் நிறுவகத்திடம் ஒப்படைக்கப்பட்ட வாகன இலக்கம் *40-3933*இன் சட்டப்பூர்வ உரிமை நிறுவகத்திடம் உடமையாக்கப்படவில்லை என்பதுடன், *2015*ஆம் ஆண்டு முதல் அது தவறாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

டபிள்யு.பி.சி. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமையதிபதி

**31 டிசம்பர் 2020இல் உள்ளவாறு ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தின் நிதிநிலை அறிக்கை மற்றும் பிற விதிகள் மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகள் ஆகியன மீது 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12இன் படி, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கு பொருத்தமான பதில்**

1.2.1 இலங்கை அரசாங்கத் துறை கணக்கீட்டு நியமங்கள்

இத்தொகையை மீள வழங்குமாறு தம்புள்ளை பிரதேச செயலாளருக்கு எழுத்து மூலமான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இருப்பினும், அவர்கள் 11/08/2020 திகதியிடப்பட்ட 5/3/9/3/28 இலக்க கடிதம் மூலம் தங்கள் சம்மதத்தை வழங்கவில்லை. மீண்டும், 19.04.2021 திகதியிடப்பட்ட AD/2/5/0/08 இலக்க கடிதம் மேலதிக விவரங்களுடன் பிரதேசச் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும், இந்த தொகையை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பிரதம மந்திரியின் அலுவலக உத்தியோகத்தர்களுக்கு இந்த அறைகளை வழங்குவது தொடர்பான சிட்டைகளைத் தயாரிப்பது 2021ஆம் ஆண்டின் போது செய்யப்பட்டதால், 2020ஆம் ஆண்டில் கணக்கீடு சாத்தியப்படவில்லை. 2021ஆம் ஆண்டில் இந்த வருமானம் தொடர்பான சீராக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.

2.2.2 (அ) 2020ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட நூலகப் புத்தகங்களின் கணக்கெடுப்புக்கான வரைவு அறிக்கை தயாரிக்கப்பட்டது. இறுதி அறிக்கை கணக்காய்வுக்காக எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படும்.

(அ) ஒப்புக்கொள்ளப்படுகின்றது.

2020ஆம் ஆண்டு கொரோனா தொற்று நிலைமை காரணமாக, 02 கணக்காய்வு, நிர்வாகக் குழுக் கூட்டங்கள் மட்டுமே நடத்தப்பட்டுள்ளன. இருப்பினும், 2021ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் இரு கணக்காய்வு, நிர்வாகக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. 2021ஆம் ஆண்டில், இந்த தொற்றுநோய் நிலைமையிலும், தொடர்புடைய கூட்டங்களை 'ஒன்லைனில்' நடத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

2.2.4 (அ) ஒப்புக்கொள்ளப்படுகின்றது.

இந்த முற்பணத்தை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த உயிரக வாயு அலகு மீது நிதி ஒழுங்குமுறை 104இன் படி நடவடிக்கை எடுக்க ஒரு குழுவைப் பணிப்பாளர் நியமித்துள்ளதுடன், அந்தக் குழுவின் பரிந்துரையின் கீழ் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) 2009ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்ட ஏழு ஆய்வுகளின் முன்னேற்றம் பின்வருமாறு கூறப்பட்டுள்ளதுடன், ஒரு ஆராய்ச்சி அறிக்கை வெளியிடப்பட்டு, விநியோகிக்கப்பட்டுள்ளது.

| **ஆண்டு** | **ஆராய்ச்சி இல.** | **தற்போதைய முன்னேற்றம்** |
|---|---|---|
| 2015 | R-500 | ஆராய்ச்சி அறிக்கை முடிக்கப்பட்டு, அட்டைப் பக்கம் வடிவமைக்கப்பட்டு வருகிறது |
| 2016 | R-517 | ஆராய்ச்சி அறிக்கை முடிக்கப்பட்டு, அட்டைப் பக்கம் வடிவமைக்கப்பட்டு வருகிறது |
| 2016 | R-511 | அறிக்கை அச்சிட அனுப்பப்பட்டுள்ளது. |
| | R-513 | வெளி மதிப்பாய்வாளர்களின் கருத்துகளைப் பெற அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது |
| | R-542 | ஆராய்ச்சி அறிக்கை முடிக்கப்பட்டு, அட்டைப் பக்கம் வடிவமைக்கப்பட்டு வருகிறது |
| 2018 | R-534 | ஆராய்ச்சி அறிக்கை வெளியிடப்பட்டு, விநியோகிக்கப்பட்டுள்ளது. |
| 2019 | R-551 | மேலதிகப் பணிப்பாளரின் கருத்துகளைப் பெற அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. |

(இ) 2019ஆம் ஆண்டுக்கான செயல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 11 ஆராய்ச்சி திட்டங்களின் தற்போதைய முன்னேற்ற நிலை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| **கருத்திட்டத்தின் இலக்கம்** | **தற்போதைய முன்னேற்றம்** |
|---|---|
| R-545 | பதிப்பித்தல் நடந்துகொண்டிருக்கிறது |

| | |
|---|---|
| R-547 | பதிப்பித்தல் நடந்துகொண்டிருக்கிறது |
| R-548 | ஒத்துப்பார்த்தல் முடிவடைந்துள்ளது |
| R-549 | பதிப்பித்தல் முடிவடைந்துள்ளது |
| R-550 | வெளி மதிப்பாய்வாளர்களின் கருத்துகளைப் பெற அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது |
| R-552 | பதிப்பித்தல் நடந்துகொண்டிருக்கிறது |
| R-553 | மேலதிகப் பணிப்பாளரின் கருத்துகளைப் பெற அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. |
| R-554 | வெளி மதிப்பாய்வாளர்களின் கருத்துகளைப் பெற அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன |
| R-555 | வெளி மதிப்பாய்வாளர்களின் கருத்துகள் பெறப்பட்டுள்ளதுடன், அறிக்கையானது தரமுயர்த்தப்படுகின்றது. |
| R-556 | வெளி மதிப்பாய்வாளர்களின் கருத்துகள் பெறுவதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன |
| R-560 | பதிப்பித்தல் நடந்துகொண்டிருக்கிறது |

(ஈ) இந்த நிறுவகத்தால் ஆண்டுதோறும் நடத்தப்படும் கடைசி ஆராய்ச்சிக் கலந்தாய்வு 2015ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. பல்வேறு தரப்பினருக்கு அழைப்புகள் அனுப்பப்பட்டாலும், 20%க்கும் குறைவாக பங்கேற்பு இருந்தது. எனவே, 2016ஆம் ஆண்டுக்குப் பிறகு புதிய அறிவு, புதிய ஆராய்ச்சிகள் மற்றும் கண்டுபிடிப்புகள் ஆகியவற்றைத் தேவையான தரப்பினருக்கு பங்கிடுவதற்கு பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

- உதாரணம் - புதிய அறிவு, புதிய ஆராய்ச்சிகள் மற்றும் பல்வேறு தரப்பினருடன் ஒரே மாதிரியான துறைகளுடன் தொடர்புடைய ஆராய்ச்சிகளை ஒருங்கிணைத்து பகிர்ந்து கொள்ளுதல்.

  I. மகாவலி குடியேற்றவாசிகள் தொடர்பான அனைத்து ஆராய்ச்சிகள் மீது ஒரு ஆராய்ச்சி அமர்வை நடத்துதல்.

  II. பொலித்தீன், லஞ்ச் ஷீட்கள் மற்றும் ஷொப்பிங் பேக்குகள் ஆகியவற்றுக்கு மாற்றீட்டை அடையாளங்காண்பது மீது ஆய்வு.

III. இலங்கை பழங்கள் மற்றும் மரக்கறி செய்கையில் SLGAP (இலங்கை நல்ல கமத்தொழில் நடைமுறைகள்) செயல்படுத்துவதில் உள்ள சவால்கள் மற்றும் போக்குகள்.

IV. ஊவா மற்றும் கிழக்கு வனவிலங்கு வலயங்களுடன் தொடர்புடைய விலங்கு-மனித மோதல் பற்றிய ஆய்வு

- தொடர்புடைய துறைகளின் எதிர்காலத் திட்டங்களில் சேர்க்கப்படுவதற்காக பல்வேறு குழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆராய்ச்சி உத்தியோகத்தர்களின் பங்கேற்பின் மூலம் புதிய அறிவு மற்றும் ஆராய்ச்சிகளின் ஒருங்கிணைப்பு.

2017, 2018, 2019 மற்றும் 2020ஆம் ஆண்டுகளில் ஆராய்ச்சி அறிக்கைகளை வெளியிட ஒதுக்கீடு செய்யப்படவில்லை, மேலும் "கருத்தரங்கு, செயலமர்வு, பொது விரிவுரை" என்ற செலவினத் தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(உ) இந்தப் புதிய மண்டபத்தை புனரமைக்க கடந்த வருடத்தில் பல தடவைகள் கேள்விகள்/கூறுவிலைகள் கோரப்பட்ட போதிலும், இது தொடர்பாக எந்த கேள்வியும் சமர்ப்பிக்கப்படவில்லை. அதனால், முன்மொழியப்பட்ட புனமைப்புப் பணிகள் தாமதமாகி வருகின்றன. இந்தப் புனரமைப்புக்கான கொள்முதல் செய்வதற்கும் மற்றும் எதிர்காலத்தில் இந்தத் தகடுகளைப் பயன்படுத்துவதற்குமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

2.3 (அ) 2019ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை 04/03/2021 அன்று, அமைச்சரவையின் ஒப்புதலைப் பெறுவதற்காக ராஜாங்க கமத்தொழில் அமைச்சுக்கு அனுப்பப்பட்டது. 2020ஆம் ஆண்டில் நிலவிய கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக, ஆண்டு அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் மற்றும் கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கும் தாமதம் ஏற்பட்டது. அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்தவுடன், 2019ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்பிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(ஆ) 31 டிசம்பர் 2020இல் உள்ளவாறு, ரூ. 12,874,881.49ஐ நிறுவகத்தின் வெளிநாட்டுப் புலமைப்பரிசில் பயனாளி கடன்தருனர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டும். கடந்த பத்து ஆண்டுகளில் வெளிநாட்டுப் புலமைப்பரிசில் பயனாளிகள் மீது நிறுவகம் சிறப்பு கவனம் செலுத்தி, இது

தொடர்பாக சாதுரியமான அணுகுமுறையை கையாண்டதால், பின்வரும் முன்னேற்றத்தைப் பெறலாம்.

| ஆண்டு | புலமைப்பரிசில் பயனாளர் கடன்தருனர்களின் எண். | அறவிடப்பட வேண்டிய தொகை (ரூ.) |
|---|---|---|
| 2012 | 12 | 27,388,114.85 |
| 2020 | 6 | 12,8274,881.49 |

இதன்படி, 2012 முதல் 2020 வரை ரூ. 14,562,985.00 கொண்ட தொகையொன்றை மீளப்பெற்றுக் கொண்டதன் மூலம், நிறுவகத்தால் 06 புலமைப்பரிசில் கடன்தருனர்களை இணக்க முடிந்தது.

இந்தச் சூழ்நிலையில், 2020ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மீளப்பெறக்கூடிய தொகை ரூ. 13,486,273.49 ஆகும். 2019ஆம் ஆண்டில் நிறுவகம் எடுத்த மூலோபாய நடவடிக்கையின் விளைவாக, 2020ஆம் ஆண்டில் புலமைப்பரிசில் பயனாளி கடன்தருனரான திருமதி எஸ்.டி. அபேரத்னவிடமிருந்து ரூ. 14,501,392.00ஐ மீட்டெடுக்க முடிந்தது.

(இ) ஆராய்ச்சி உத்தியோகத்த .எம்.எஸ்.கெளரேசங்கரின் தற்போதைய முகவரியைக் கண்டுபிடிக்க முடிந்ததால், நீதிமன்ற வழக்கைத் தெரிவிக்கும் கோரிக்கைக் கடிதம் அனுப்பப்படவில்லை. அவரது முகவரியைக் கண்டறிய பல்வேறு நடைமுறைகளை நிறுவகம் மேற்கொண்ட போதிலும், வெற்றிபெறவில்லை. நிறுவகம் எடுத்த நடவடிக்கைகள் பின்வருமாறு.

| ஆண்டு | எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|
| 2013 | விவசாய அமைச்சின் ஊடாக புலமைப்பரிசில் பயனாளி கடன்தருனர்களின் அனைத்து விவரங்களையும் குடிவரவு, குடியகல்வு திணைக்களத்திற்கு அனுப்புதல் |
| 2015 | விவசாய அமைச்சின் ஊடாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கும் (CID) இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகராலயத்திற்கும் கடிதங்களை அனுப்புதல்.<br>இது தொடர்பில், இந்த விவகாரம் தங்களது பணி எல்லைக்குள் வராது என CID தெரிவித்துள்ளது |
| 2019 | சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய மூன்று மொழிகளின் செய்திப் பத்திரிகைகளில் புலமைப்பரிசில் பயனாளி |

| | |
|---|---|
| | கடன்தருனர்களின் அனைத்து விவரங்கள் மற்றும் அவர்களின் கடன் தொகை ஆகியன தொடர்பான அறிவிப்பை வெளியிடுதல். |
| 2019 | உதவிப் பதிவாளர் (திட்டம்) மூலம் உயர் ஸ்தானிகராலயத்தின் பிரதி உயர் ஸ்தானிகரை தொடர்பு கொண்டு கடிதங்கள் மற்றும் தொலைபேசி அழைப்புகள் மூலம் அவுஸ்திரேலியாவின் இலங்கை உயர் ஸ்தானிகராலயத்திலிருந்து புலமைப்பரிசில் கடன்தருனர்கள் பற்றிய விவரங்களைக் கோருதல். அவர்கள் தற்போது அவுஸ்திரேலிய குடியுரிமையைப் பெற்றுள்ளதால் அவர்களின் தற்போதைய முகவரிகளைப் பெறுவது கடினம் என்று அவர்கள் விளக்கினர். |

(ஈ) புலமைப்பரிசில் பயனாளி கடன்தருனர்கள் தவிர ஏனைய கடன்தருனர்களின் நிலுவையில் ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்தும் உள்ள கடன் நிலுவைகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

விழா முன்பணம் ரூ. 5,425.12
வருமதியான விடுதி வருமானம் ரூ. 5,113.75
வருமதியான மாநாட்டு மண்டப வருமானம் ரூ. 10,875.00
நிறுவகத்தை விட்டு வியேறிய ஊழியர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய தொகை

ரூ.476,879.87
கருத்திட்டம் R-481 இலிருந்து கிடைக்க வேண்டிய தொகை

ரூ.111,921.59

ரூ.610,215.33

- 2021ஆம் ஆண்டின் தொடக்கத்தில் திருவிழா முன்பணத்தின் மீட்டெடுக்கக்கூடிய நிலுவைகளை மீட்டெடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- R-481 என்பது யாழ்ப்பாணக் கடலோரிக்கு வழங்கப்பட்ட சேவை மற்றும் அருகிலுள்ள கிராமங்களில் வசிப்பவர்களின் வாழ்வாதாரத்திற்கு வழங்கப்பட்ட பங்களிப்பு ஆகியவற்றின் சார்பாக திட்டத்திலிருந்து மீட்டெடுக்கப்படும் தொகை ஆகும். இந்த விஷயத்தில் AGL/D/ADD/02/20/02 என்ற கணக்காய்வு வினவல் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பான பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி

வைக்கப்பட்டுள்ளது. இது மேலதிக அறிவுறுத்தல்களுக்காக எதிர்காலத்தில் நடைபெறவுள்ள கணக்காய்வு, நிர்வாகக் குழுவிற்கு அனுப்பப்பட்டு, அதற்கேற்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

- ஐந்தாண்டுகளுக்கும் மேலாக நிலுவைத் தொகைகள் தொடர்ந்ததுடன், நிறுவகத்தை விட்டு வெளியேறிய ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியவை பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 01. | திரு. எம் ஜி எம் ரஸாக் | ரூ. 212,819.90 |
| 02. | திரு. எச்.கே.எஸ். பிரேமலால் | ரூ. 18,732.35 |
| 03. | திரு. எல்.கே. ஜயசேகர | ரூ. 29,086.38 |
| 04. | திரு. ரங்கன அத்துகோரள | ரூ. 19,474.50 |
| 05. | திரு. எ.எம்.டி. என் தென்னகோன் | ரூ. 196,767.29 |
| | | ரூ. 476,879.87 |

I. திரு. எம் ஜி எம் ரஸாக் - ரூ. 212,819.90

திரு. எம் ஜி எம் ரஸாக் ஒரு வெளிநாட்டு புலமைப்பரிசில் பயனாளி கடன்தருனரின் ஓர் உத்தரவாதி என்பதுடன், அவரது முகவரி கண்டறிப்பட்டுள்ளது. வெளிநாட்டுப் புலமைப்பரிசில் பயனாளி கடன்தருனர் சட்டத்தின் கீழ் அவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

II. திரு. எச்.கே.எஸ். பிரேமலால் - ரூ. 18,732.35

03.09.2011இல் உள்ளவாறு திரு. எச்.கே.எஸ். பிரேமலாலிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய தொகை, பதவி விட்டு விலகல் திகதியன்று ரூ. 152,525.25 ஆகும். எவ்வாறாயினும், இந்தத் தொகையில் சேர்க்கப்பட்ட இடுக்கண் கடனின் மீதியானது, இந்த நிறுவகத்தில் இன்னும் சேவையில் இருக்கும் அவரது உத்தரவாதிகளிடமிருந்து அறவிடப்படுகிறது. எனவே அவரிடமிருந்து 31.12.2020 அன்று அறவிடப்பட வேண்டிய தொகை ரூ. 18,732.35 ஆகும். இந்தச் சம்பவம் சட்ட நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

திரு. எல்.கே. ஜயசேகர - ரூ. 29,086.38

அவர் நிறுவகத்தின் முன்னாள் பணிப்பாளராக இருந்தவர். அவரிடம் இருந்து 09.01.2015 அன்று அறவிடப்பட வேண்டிய தொகை ரூ. 29,086.38 ஆகும். இந்தச் சம்பவம் சட்ட நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

III. திரு. ரங்கன அத்துகோரள - ரூ. 19,474.50

03.06.2014இல் உள்ளவாறு இந்த நபரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை, பதவி விட்டு விலகல் திகதியன்று ரூ. 19,474.50 ஆகும். இந்தச் சம்பவம் சட்ட நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

IV. திரு. எ.எம்.டி. என் தென்னகோன் - ரூ. 196,767.29

திரு. எ.எம்.டி.என் தென்னகோனிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை ரூ. 196,767.29 ஆகும் என்பதுடன், இந்தத் தொகையை அறவிடப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(உ) ஐந்தாண்டுகளுக்கும் மேலாக தொடருகின்ற நிறுவகத்தின் ரூ. 626,737.00 தொகையிலான கடன்தருனர் நிலுவைகள் பின்வருமாறு.

1) திரு. ரி. ரவிச்சந்திரன் - ரூ.150,015.00

திரு. ரி. ரவிச்சந்திரன் ஒரு வெளிநாட்டுப் புலமைப்பரிசில் பயனாளி கடன்தருனர் ஒருவரின் உத்தரவாதியாவார். எனவே, அவருக்கு வழங்க வேண்டிய பணிக்கொடை நிறுவகத்தால் செலுத்தப்படவில்லை.

திரு. என் எஸ் விக்ரமராச்சி – ரூ. 39,135.61

நிறுவகம் அவருக்கு செலுத்த வேண்டிய ரூ. 39,135.61 தொகை பற்றி தகவல் அவருக்கு அறிவிக்கப்பட்ட பின்னரும் இந்தப் பணத்தைப் பெறுவதற்கு அவர் முன்வரவில்லை. இது தொடர்பாக அவருக்கு மீண்டும் தகவல் அளிக்கப்பட்டுள்ளது.

2) காலாவதியானதால் ரத்து செய்யப்பட்ட காசோலைகளின் மதிப்பு ரூ. 34,080.00 ஆகும். இந்தத் தொகையை மீட்பதற்கு மீண்டும் சமர்ப்பிக்கப்படாததால், அந்தக் கணக்குகளில் இருந்து அந்த மதிப்புகளைச் சரிசெய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

3) திரு. உபதிஸ்ஸ பரணமான - ரூ. 50,000.00

இது உணவகப் பராமரிப்பாளரால் செய்யப்பட்ட உத்தரவாத வைப்புத்தொகை என்பதுடன், இது அவருக்குத் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்.

4) செலுத்த வேண்டிய பணிக்கொடை ரூ. 126,912.50

வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவின் மீது செலுத்த வேண்டிய பணிக்கொடையின் நிலுவைத் தொகை, கொடுக்கப்பட வேண்டிய பணிக்கொடையாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்தக் கடன்தருனர்களில் இருவர் வெளிநாட்டுப் புலமைப்பரிசில் பயனாளி கடன்தருனர்களுக்க்கான உத்தரவாதியாவார்கள். திரு. எச்.கே.எஸ்.பிரேமலால் நிறுவகத்திற்கு ஒரு கடன்தருனராவார். எனவே, இந்த்த் தொகையை இணக்க அவர்கள் முன்வரவில்லை.

5) கேள்வி வைப்புக்கள் - ரூ. 124,462.50

6) அமைச்சுக்கு கொடுப்பனவுக்குரிய தொகை - ரூ. 94,358.05

விவசாய அமைச்சின் WP-KM-5207 இலக்கம் கொண்ட வாகனம் விபத்துக்குள்ளானதில், எமது நிறுவகத்துடன் இணைந்த சாரதி எ.எம்.டி.என்.தென்னகோன் என்பவரிடமிருந்து பெறப்பட வேண்டிய தொகை இதுவாகும். இந்தத் தொகை அவரது இறுதிக் கணக்கிலிருந்து திரும்பப் பெறப்பட வேண்டும். இது தொடர்பாக அவருக்கு நினைவூட்டல் அனுப்பி, இந்தத் தொகை அறவிடப்படவுள்ளது. இந்தத் தொகை திரும்பப் பெற்ற பிறகு, அது அமைச்சுக்குச் செலுத்தப்படும்.

7) உணவு பாதுகாப்புத் தேவைகள் மீதான ஆய்வு - ரூ. 7,774.28

இது உணவு பாதுகாப்பு தேவைகள் குறித்த ஆய்வுக்காக பெறப்பட்ட தொகையாகும். இத்தொகை தொடர்பாக உரிய சீராக்கல்களைச் செய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(ஊ) இந்த விஷயம் பற்றிய விவரங்களை வெளிப்படுத்த 10.07.2019 திகதியிட்ட R/Info/5 இலக்க கடிதம் எண் மூலம் நிறுவகத்தின் மூன்று உத்தியோகத்தர்களைக் கொண்ட ஒரு குழுவை பணிப்பாளர் நியமித்துள்ளதுடன், அதற்கான குழு அறிக்கை 02.09.2019 அன்று பணிப்பாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழு அறிக்கையின்படி, அடையாளங்காணப்பட்டுள்ள அறவிடப்பட வேண்டிய தொகை ரூ. 8,895,470.00 என்பதுடன், 21.04.2021 திகதியிட்ட R/Info/5-II இலக்க கடிதம் மூலம் சொல்லப்பட்ட தொகையை அறவிடுவதற்கான நடைமுறையைப் பரிசீலிக்க புதிய குழு நியமிக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட குழு அறிக்கை 19.04.2021 அன்று பணிப்பாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அதன்படி, எதிர்காலத்தில் அந்த்த் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும்.

(எ) இந்த வாகனம் ஐக்கிய நாடுகளின் உணவு, விவசாய அமைப்பினால் ஆராய்ச்சி நோக்கத்திற்காக எங்கள் நிறுவகத்திற்கு வழங்கப்பட்டாலும், வாகனத்தின் உரிமை எங்கள் நிறுவகத்திற்கு மாற்றப்படவில்லை. இந்த வாகனத்தின் உரிமையை நிறுவகத்திற்கு மாற்றுவதற்கு, அது வாகன உரிமக் கட்டணங்கள் மற்றும் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய பிற கட்டணங்கள் ஆகியவற்றை முந்தைய ஆண்டுகளுக்குச் செலுத்த வேண்டும் என்பதுடன், தற்போதைய நிலை மற்றும் வாகனத்தின் மதிப்பு ஆகியன காரணமாக அது நிறுவகத்திற்கு சாதகமாக இருக்கவில்லை.. இந்த வாகனத்தைப் பெறுமாறு கோரி ஐக்கிய நாடுகள் சபையின் உணவு, விவசாய அமைப்புக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அவர்களிடம் இருந்து இதுவரை எந்தப் பதிலும் வரவில்லை.